வெளியீடு—12—1—1968]
Issued—12—1—1968]

670

# தமிழகச் சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, 1967 ஜூன் 22
Thursday 22nd June 1967

தொகுதி II — எண் 4
Volume II No. 4

©
1968
©
GOVERNMENT OF MADRAS

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.
*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

V211,31 N67
N67.2.4

Y211,31 D1 N67
N67. 2.4

## உள்ளடக்கம்.


| | பக்கங்கள் |
|---|---|
| 1 வினாக்கள்-விடைகள் .. .. .. .. .. | 361–387 |
| 2 ஒழுங்குப் பிரச்சினை— | |
| இலங்கையில் தமிழக அரசுபற்றிச் செய்யப்படும் தவறான பிரச்சாரம் பற்றிய வினாவை அனுமதித்தல் .. | 367–368 |
| 3 பணித் துறை வெளியீட்டிலிருந்து சில சொற்றொடர்களை நீக்கக் கோரிக்கை .. .. .. .. .. .. | 388 |
| 4 ஒத்திவைப்புத் தீர்மானங்கள்— | |
| (அ) விவசாயிகளுக்கு நியாய விலையில் உணவுப் பொருள்கள் கிடைக்காமை .. .. .. | 388 |
| (இ) தொழிலாளர்களுக்குப் பஞ்சப்படியை சென்னை விலைவாசிப் புள்ளி விவரங்களுக்கு ஒப்ப நிர்ணயித்தல் .. .. .. .. .. | 388–391 |
| (உ) ஒத்திவைப்புத் தீர்மானங்களை ஒழுங்கு படுத்துவது பற்றி பேரவைத் தலைவரின் விளக்கக் குறிப்பு .. | 388–391 |
| 5 அறிவிப்புகள்— | |
| (அ) அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டம் .. .. | 391–392 |
| (இ) தொழில்கள் வாரியத்திற்கு (Board of Industries) தேர்தல் .. .. .. .. .. .. | 392–393 |
| 6 அரசினர் தீர்மானம்— | |
| தொழில்கள் வாரியத்திற்கு (Board of Industries) தேர்தல் .. .. .. .. .. .. .. | 392 |
| 7 1967–68-ம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம் (தொடர்ச்சி) .. .. | 393–464 |
| 8 பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. ... | 464 |


65000

# தமிழகச் சட்டப்பேரவை

வியாழக்கிழமை, 1967 ஜூன் 22.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இப் பேரவைக் கூட்டத்தின் முதல் அலுவல் "வினாக்கள்-விடைகள்". மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் விடையளிப்பார்கள்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் இடத்தில் இல்லாத காரணத்தால் குறுகிய காலக் கேள்வியை அவர் வந்த பிறகு எடுத்துக் கொள்ளலாம். இப்பொழுது கேள்வி எண் 43-ஐ எடுத்துக் கொள்ளலாம்.

### *Clashes of political nature*

43 *Q*.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that frequent clashes of political nature between rival groups occur in the Assembly Constituency of St. Thomas Mount near Madras; and

(*b*) if so, the steps taken to prevent such unruly mob clashes?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : (அ) & (இ) அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது இந்தத் தொகுதியில் கைகலப்புகள் அல்லது வன்முறைச் செயல்கள் சில நிகழ்ந்தன. இவற்றில் தி.மு. கழக உறுப்பினர்களோ காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களோ அல்லது இவற்றின் ஆதரவாளர்களோ ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட சந்தர்ப்பங்களில் தல போலீஸ் அத்தகைய நிகழ்ச்சிகள் மீண்டும் நேராவண்ணம் இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் சூழ்நிலைக்கேற்ப மேற்கொண்டது.

THIRU K. VINAYAKAM : The nominee of the D.M.K. Party has successfully won the election in this constituency. It has been brought to my notice that as a result of the same, the complaints lodged by the Congress party workers are not taken into account by the respective police stations and are being turned down whereas the complaints lodged by those belonging to the party in

power are being entertained. Is the Hon. the Chief Minister aware of this kind of failure to administer justice on the part of the Police stations?

THE HON. THIRU C. N. ANNADURAI: The information that my hon. Friend was able to gather is not a fact. When clashes took place between members of both the parties—or the supporters took place between members of both the parties or the supporters of both the parties to put it more appropriately—the Police took necessary action. Because the actions were not severe the clashes that occurred subsided and calm was restored very easily and quickly.

**திரு. முனு. ஆதி:** தலைவர் அவர்களே, நடந்த தேர்தலில் போலீஸ் ஸ்டேஷனிலிருந்த துப்பாக்கி காங்கிரஸ்காரருக்குக் கொடுக்கப்பட்டு பல பயமுறுத்தல்கள் நடந்தன. அதைப்பற்றி முந்திய அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்போதைய அரசாங்கத்திற்குத் தகவல் வந்ததா? அந்த சப்-இன்ஸ்பெக்டர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** அதைப்பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை.

DR. H. V. HANDE: Mr. Speaker, Sir, are the Government aware that the Congress Party was regularly indulging in violence during the last General Elections and if by any chance the Congress Party had come to power, the life of any single Swatantra–D.M.K. worker in any constituency in Madras State—the Park Town constituency in particular—would not have been safe?

THE HON. THIRU C. N. ANNADURAI: Even previously also the hon. Member has given me this information that in the City of Madras, members belonging to the Congress party were indulging in acts of violence. It has now subsided. That is the happiest part of the sorry affair.

**திரு. எம். எஸ். மணி:** தலைவர் அவர்களே, அந்தத் தொகுதியில் வேட்பாளர், திராவிட முன்னேற்றக் கழகத் தோழருடைய ஜீப் கார் அடித்து நொறுக்கப்பட்டது. அதை அடித்து நொறுக்கிய காங்கிரஸ்காரர்களைப்பற்றிப் போலீசில் புகார் செய்தும் இதுவரை கோர்ட்டுக்கு வராது இருப்பதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** ஜீப் கார் நொறுக்கப்பட்டதைப்பற்றி எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. இன்னும் சிலர் பிடிபடாமல் இருப்பதற்குக் காரணம் இந்நாட்டு வேலையிலே அவர்கள் வைத்துக் கொண்டிருக்கும் பொறுமையான பார்த்தியம்தான் என்று நான் நினைக்கிறேன்.



THIRU K. VINAYAKAM: Sir, to quote a concrete instance, is it not a fact that the residents of Bhaktavatsalam Nagar near Meenambakkam Railway Station, mostly being sympathisers of the Congress Party, when attacked by the members of the D.M.K. party from Meenambakkam village, went to the Police Station at St. Thomas Mount to lodge a complaint? But, the complaint was not taken in time. No action was taken there, even to register the F.I.R. Is the Hon. Chief Minister aware of this?

THE HON. THIRU C. N. ANNADURAI: If my hon. Friend can quote instances, I can also quote instances and also incidents of which I had even personal experience. After my addressing a meeting in that constituency, the moment I got down from the dais, there was pelting of stones from all directions and when the Police came to restore order, they were also attacked. (Interruption) My hon. Friend Thiru. Vinayakam does not seem to have belief in my word.

THIRU K. VINAYAKAM: Not at all, Sir. I am not questioning the propriety of the Hon. the Chief Minister.

THE HON. THIRU C. N. ANNADURAI: Sir, I would have been happier if my hon. Friend had belief in the word of 'Annadurai', instead of the word of 'Chief Minister'. That apart, I may tell him that I will not divulge anything on the floor of the House before enquiring into the whole matter. As far as I can understand and gather, the Congress workers were in the offensive from the beginning.

**திரு. ந. தருமலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, பரங்கிமலைத் தொகுதியில் தேர்தல் நடைபெற்றபோதும், நடைபெற்று முடிந்த பிறகும் அந்தத் தொகுதி உறுப்பினர் புரட்சி நடிகர் திரு. எம். ஜி. ஆர். அவர்களுக்காக வேலை செய்த தி.மு.க. தோழர்கள் மீது காங்கிரஸ்காரர்களால் பலவிதமான பலாத்காரங்கள் நடத்தப்பட்ட நிலைமையிலே பழைய அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்பதன் காரணமாக இப்போது இருக்கிற புதிய அரசாங்கத்திற்கு அதன் மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இதைப்பற்றி இரு தரப்பில் இருந்தும் துணைக் கேள்விகள், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா? என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன? என்ற முறையில் உள்ளன. அந்த விவரத்தைச் சொல்ல வேண்டாமென்று கருதியிருந்தேன். ஆனால், இப்பொழுது என்னென்ன நடந்தது என்பதுபற்றி அவை முன்னாலே படித்துவிடுகிறேன்.

(1) Tiruvanmiyur Station Cr. No. 553/66 under section 379 and 323, Indian Penal Code—D.O. 18th Decemeber 1966. Namadev and 12 others of Tiruvanmiyur belonging to Congress Party removed Dravida Munnetra Kazhaga posters and assaulted a Dravida Munnetra Kazhaga sympathiser.

(2) **Pallavaram** Station Cr, Nos. 119 and 120/67 under sections 147 and 323, Indian Penal Code—D.O. 5th February 1967. The Dravida Munnetra Kazhaga Party took out a procession on 5th February 1967 and the participants were resting at Pallavaram. A Congress Party procession came on the same route and following exchange of words, there was a clash and 15 persons in all were injured. On complaints from both the parties, the above cases were registered and investigated.

(3) St. Thomas Mount Station Cr. No. 87/67 under sections 147, 148 and 452, Indian Penal Code—D.O. 13th February 1967. Ekambaram and 15 others of Bhaktavatsala Nagar (St. Thomas Mount) belonging to Dravida Munnetra Kazhagam trespassed into the Congress Party Election office and assaulted a Congress worker. For want of evidence the case was referred as U.N.

(4) Pallavaram Station Cr. No. 137/76 under sections 337, 323 and 427, Indian Penal Code—D.O. 14th February 1967. A car doing electioneering campaign for Dravida Munnetra Kazhagam was damaged by Sadha and 14 others of Chromepet belonging to Congress Party at Kolanchavadi, Chromepet and the occupants of the car were assaulted. Charge sheet will be laid.

(5) Tiruvanmiyur Station Cr. No. 49/67 under sections 147, 341 and 323, Indian Penal Code—D.O. 15th February 1967. It was reported by a Congress worker that Pandu and 17 others of Tiruvanmiyur belonging to Dravida Munnetra Kazhagam came in a body and assaulted. The case was referred as N.C. after investigation.

(6) St. Thomas Mount Station Cr. No. 88/67 under sections 147, 323 and 336, Indian Penal Code—D.O. 15th February 1967. Subramaniam, a Congress worker of Ramapuram was assaulted by Madurai and 7 others belonging to Dravida Munnetra Kazhaga Party. For want of evidence, the case was referred as U.N.

(7) St. Thomas Mount Station Cr. No. 90/67 under sections 147, 148, 324 and 336, Indian Penal Code—D.O. 16th February 1967. R. S. Mani, a Congress Worker of Nandambakkam was alleged to have been assaulted by Muthu Naicker and 5 others of St. Thomas Mount belonging to Dravida Munnetra Kazhaga Party. The case was referred as N. C.

(8) St. Thomas Mount Station Cr. No. 100/67, under Section 321, Indian Penal Code—D.O. 24th February 1967. Venkatesan of Nandambakkam, a Dravida Munnetra Kazhaga worker was stabbed by Nagarajan of Nandambakkam, a Congress worker. The case is pending trial.

(9) Tiruvanmiyur Station Cr. Nos. 53/67 and 54/67 under Sections 148 and 324, Indian Penal Code—D.O. 24th February 1967. The Congress and the Dravida Munnetra Kazhagam rival groups came to a clash at Tiruvanmiyur Kuppam following the announcements of the election results. Twenty-three persons on both sides sustained simple injuries. Both the cases are under investigation.



**திரு. பி. ஜி. கருத்திருமன்** : தேர்தலுக்கு முன்னாலோ அல்லது தேர்தல் கழிந்தோ இனிமேலாவது எந்த எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாகயிருந்தாலும் சரி இதுமாதிரி நடவடிக்கைகளில் ஈடுபடாதிருக்கும் ஒரு சூழ்நிலையை முதல் அமைச்சர் அவர்கள் உருவாக்குவார்களா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : முதல் அமைச்சர் அவர்கள் அதை உருவாக்குவதை விட எல்லோரும் சேர்ந்து உருவாக்குவது நல்லது, ஆகையால் அவரவர்கள் தங்கள் தங்கள் கட்சி சார்பிலோ அல்லது எல்லாக் கட்சித் தலைவர்களும் கூட்டாகவோ அப்படிப்பட்டதொரு சூழ்நிலையை உருவாக்குவது நல்லது. ஆனால் அதற்குக் கூட இப்போது காலம் கடந்து விட்டது என்றே கருதுகிறேன். கூடுமானவரையில் அவைகள் எல்லாம் தணிந்திருக்கிற நிலையில் இப்போது ஒரு அறிக்கை வெளியிட்டால் நம் ஊரிலும் அப்படி ஏதாவது செய்யலாமா என்ற ஆவல் சிலருக்குத் தோன்றக் கூடும்.

**திரு. ஆர். நாகசுந்தரம்** : ஐயா, தேர்தலில் தோல்வியுற்ற காங்கிரஸ் வேட்பாளர்கள்தான் இந்தக் கலவரங்களுக்கெல்லாம் காரணம் என்று பேசப்படுகிறது உண்மையா? தேர்தல் காலத்தில் காங்கிரஸ்காரர்கள் செய்த கலவரங்களினால் தான் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் ஆஸ்பத்திரியில் படுத்துக்கொண்டே வெற்றி பெற்றார் என்பது உண்மையா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : அவைகள் எல்லாம் கனம் உறுப்பினரின் கருத்துக்கள்.

**திரு. கரு. சீமைச்சாமி** : தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்த காரணத்தினால் பரங்கிமலைத் தொகுதியில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதிலும் காங்கிரஸ்காரர்கள் இந்த மாதிரி கலவரங் களைத் தூண்டியிருக்கிறார்கள் என்பது சம்பந்தமாக முதல் அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு ஏதாவது செய்திகள் வந்தனவா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : அதுபற்றி விரிவான செய்திகள் இல்லை. ஆனால் அதுபற்றி கருத்து மட்டும் உண்டு. கலவரங்களால் மட்டும் வெற்றி பெற்று விடமுடியாது என்பது அதிலிருந்து கிடைத்திருக்கிற பாடம்.

**திரு. வ. ஜார்ஜ்** : ஆளும் கட்சி அங்கத்தினர்கள் அன்றாட போலீஸ் அலுவல்களில் ஈடுபட்டும், தலையிட்டும், போலீஸ்காரர் களுக்குக் கட்டளையிடுவதுமான இப்படிப்பட்ட பல செய்திகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தனவா? அப்படி வந்திருந்தால் அதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : திட்டவட்டமான தகவல் எதுவும் எனக்குத் தரப்படவில்லை. அப்படித் தரப்படு மானால் நிச்சயமாக அத்தகைய முறை தடுக்கப்படுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்வேன்.

**திரு. வி. எஸ். கோவிந்தராசன் :** இன்றைய நமது முதலமைச்சரான கலைஞர் கருணாநிதி அவர்கள் தொகுதியில் கோட்டூர் பகுதியில் அவரது உயிருக்கே ஆபத்து விளைவிக்கக்கூடிய ஒரு அபாயகரமான சம்பவம் நடைபெற்றதே, அதுகுறித்து முந்திய அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அப்படியில்லை என்றால் நமது அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இது பல்லாவரம் தொகுதிபற்றிய கேள்வி. அதையொட்டி வருகிற துணைக்கேள்விகள் எல்லாம் கிட்டத்தட்ட அதை ஒட்டி இருப்பதே நல்லது. பல்லாவரத்திலிருந்தே ஏகப்பட்ட வழக்குகள் இருக்கின்றன. ஆகவே, அதை விட்டு வேறு தொகுதிகளுக்குப் போவது இப்போதைக்குத் தேவையில்லையென்று கருதுகிறேன்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** அன்றிருந்த காங்கிரஸ் ஆட்சியைப் பயன்படுத்திக்கொண்டு காங்கிரஸ்காரர்கள் கலவரங்கள் செய்துவிட்டு கம்யூனிஸ்டு, தி.மு.க. கட்சிக்காரர்கள் மீது போடப்பட்ட தேர்தல் வழக்குகளை அரசாங்கம் வாபஸ் வாங்க உத்தரவு போடுவார்களா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அங்கத்தினர் அவர்கள் கூறிய வழக்குகள் மட்டுமல்லாமல் எந்தெந்த வழக்குகளை வாபஸ் வாங்குவது பொதுநன்மைக்கு நல்லது என்று கருதப்படுகிறதோ அவை எல்லாம் வாபஸ் வாங்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Is the Hon. Chief Minister aware of the fact that, out of the cases that have been registered or brought to the notice of the Police station, only cases in which the D.M.K. volunteers have been involved are pending before the Court or pending registration or action has to be taken, whereas the case in which the Congress volunteers have been involved have been dropped for want of necessary evidence or proof? Is the Hon. Chief Minister aware of the one-sided justice in these cases and will he take steps to rectify this defect?

THE HON. THIRU C. N. ANNADURAI : I am aware of one thing. What my hon. Friend is placing as a charge has been placed in the reverse manner when the Congress Party was in power and the D.M.K. was in the Opposition.

**திரு. எம். சுரேந்திரன் :** அரசியல் காரணங்களுக்காக ஏற்படுகிற சண்டைகளை கிரிமினல் குற்றங்களைப் போல் கருதாது இன்னும் சிறிது உயர்ந்த மட்டத்தில் பரிசீலனை செய்து முடிவுக்குக் கொண்டுவர இந்த அரசாங்கம் ஆலோசனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அங்கத்தினர் அவர்கள் சொல்வது, அரசியல் காரணங்களுக்காக ஏற்படுகிற குற்றங்களைத் தனியாகக் கவனித்து அதற்கு ஒரு தனி அந்தஸ்து தரவேண்டும் என்பதாகும். அங்கத்தினர் அவர்கள் இதைத்தான் விரும்புவதாகக் கருதுகிறேன். உண்மை அரசியல்வாதிகள்



இப்படித் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவே மாட்டார்கள். அரசியலை சரியாக நிர்ணிக்க முடியாதவர்கள், தங்கள் தங்கள் அரசியல் கட்சிகளை சரியான முறையில் வளர்த்துக்கொள்ள முடியாதவர்கள், பொறுப்பு இல்லாதவர்கள், இப்படிப்பட்டவர்கள் தான் கலவரங்களில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வார்கள். ஆகவே, அந்த வகையில் அவர்களுக்கு அந்தஸ்து கொடுக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. மேலும் சட்டம்தான் ஆளும் என்பதை ஒப்புக்கொண்டு நாம் ஜனநாயகத்தை நடத்திக் கொண்டிருக்கிற நேரத்தில் அரசியல் காரணங்களுக்காக ஏற்படுகிற குற்றங்கள், வேறு காரணங்களுக்காக ஏற்படுகிற குற்றங்கள் என்றெல்லாம் நாம் பாகுபாடு படுத்துவதற்கில்லை. என்னைக் கேட்டால் மற்றக் குற்றங்களுக்குக் கூட, அரசியல் அல்லாத மற்றக் குற்றங்களுக்கு வேண்டுமானால் கொஞ்சம் சலுகை காட்டலாம். ஏதோ ஆசை காரணமாக பாசம் காரணமாக அல்லது லாபம் காரணமாக அப்படிப்பட்ட கலவரங்கள் எல்லாம் நடக்கின்றன. இவைகள், அரசியல் தொடர்பான கலவரங்கள், முடிந்த பிறகு ஏன் செய்தோம் என்று செய்தவர்களே வருத்தப்படக் கூடிய வகையானவை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது ஒரு தொகுதியைப் பற்றிய கேள்வி. இதன்மீது போதிய துணைக் கேள்விகள் கேட்கப்பட்டுவிட்டன என்று கருதுகிறேன். ஆகவே அடுத்தபடியாக, குறுகிய காலக் கேள்வி எண் 4, திரு. ஆசைத்தம்பி அவர்கள்.

## 2. ஒழுங்குப் பிரச்சினை.

### இலங்கையில் தமிழக அரசுபற்றிச் செய்யப்படும் தவறான பிரச்சாரம் பற்றிய வினாவை அனுமதித்தல்

TTIRU K. VINAYAKAM : Sir, I rise on a point of order. The point of order is this. This question should not be either put or answered on the floor of this House, because its subject-matter relates to international relations between one country and another. Our country is having very good relations with Ceylon.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் குறிப்பிடுவது இப்போது விடை சொல்லப் போகிற கேள்வியைப் பற்றியது. விடை என்ன என்பதைத் தெரிந்து கொண்டு உங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டரை எழுப்புங்கள்.

THIRU K. VINAYAKAM : My point is that the question should not be answered and the subject should not be discussed.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்ன பதில் சொல்லுகிறார்கள், பதில் சொல்லுகிறார்களா, சொல்ல மாட்டேன் என்று சொல்லுகிறார்களா என்று தெரிந்து கொண்ட பின் உங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டரை எழுப்புங்கள்.

THIRU K. VINAYAKAM : Let the Hon. Speaker please listen to me. The Party in power has got about 25 Members in Parliament and they can raise this point in Parliament.

[Thiru K. Vinayakam] [1967 ஜூன் 22

Really speaking this subject should be raised in the Parliament and not in the Assembly.

THIRU RAMA. ARANGANNAL: I want to make one submission.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சப்மிஷன் என்று ஒன்றும் கிடையாது.

**திரு. இராம அரங்கண்ணல்:** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். இந்தக் கேள்வி சபாநாயகர் அவர்கள் அனுமதித்து சட்டசபைக்கு வந்திருக்கிறது. நண்பர் திரு. விநாயகம் அவர்கள் கிளப்புகிற இந்தப் பிரச்சினை சபாநாயகர் அவர்கள் மீது நம்பிக்கை இல்லை என்று கிளப்புகிற பிரச்னைக்கு ஒப்பாகும். ஏனெனில் இந்தக் கேள்வி அனுப்பப்பட்டு தாங்கள் அனுமதித்த பிறகு இங்கு சட்ட சபைக்கு வந்திருக்கிறது. ஆகையால், அவர் இந்த ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்புவது ஒழுங்கல்ல என்று நான் கருதுகிறேன். இதுகுறித்து தங்கள் தீர்ப்பு வேண்டும்.

**திரு. கே. பி. எஸ். மணி:** பாயின்ட் ஆஃப் ஆர்டர். இந்தச் சபைக்கு ஒரு ஒழுங்கு விதிக்கப்பட்டிருக்கிறது தங்கள் தலைமையில். சபாநாயகர் அவர்கள் பேசும்போது இந்த ஒழுங்கை மீறி அங்கத்தினர்கள் எழுந்து நிற்பதும், சபையில் ஒருவருக்கொருவர் விவாதத்தை நேரடியாக நடத்திக் கொள்ளுவதுமாக இருக்கிற முறை இந்தச் சபையின் கௌரவத்தைக் குறைக்கிறது. அதற்குப் பரிகாரம் தேட தங்களை வேண்டிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூன்று உறுப்பினர்களும் கூறியதுபற்றி நான் தெரிவிப்பது, ஏதோ நான் அவர்கள் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தேனே தவிர, பேசிய அத்தனையும் விதிகளுக்கு முரண் என்று தெரிந்தே கேட்டுக் கொண்டிருந்தேன் என்று வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். பேரவையின் 40-வது விதியைப் படிக்கிறேன்—

No discusisons shall be permitted at question time in respect of any question.

அதாவது கேள்வி நேரத்தில் கேள்விகள் பற்றிய எந்தவிதமான விவாதமும் கூடாது. ஆகையால் அருள்கூர்ந்து அந்த விதிப்படி கேள்வி நேரத்தில் விவாதங்களை எழுப்ப வேண்டாமென்று கேட்டுக் கொண்டு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை விடை கூறும் படி கேட்டுக்கொள்கிறேன்.

## 1. வினாக்கள்-விடைகள் (தொடர்ச்சி)

### தமிழக அரசு பற்றி தவறான பிரச்சாரம்

* குறுகிய கால வினா எண் 4. **திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:** மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழக தி. மு. கழக அரசுபற்றி திருமதி சிரிமாவோ பண்டாரநாயகா கட்சியினர் தவறான பிரச்சாரம் செய்து வருவது தமிழக அரசுக்குத் தெரியுமா?



(இ) ஆம் எனில், இலங்கையில் நடத்தப்படும் இந்தத் தவறான பிரச்சாரத்தைத் தடுக்க மத்திய அரசு மூலம், இலங்கை இந்திய தூதரகம் கேட்டுக் கொள்ளப்பட்டதா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** (அ) திருமதி பண்டாரநாயகா பேசியதாகப் பத்திரிகையில் வெளிவந்த சில செய்திகளிலிருந்து திருமதி பண்டாரநாயகா ஏதோ ஒரு வகையான பொய்ப் பிரச்சாரம் செய்து வருவதாகத் தெரிகிறது. பத்திரிகை அறிவிப்புகள் வாயிலாக, முதலமைச்சர் இதற்கு மறுப்புகள் விடுத்துள்ளார்.

(இ) இதற்கான தேவை ஏதும் இப்போது எழவில்லை.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:** தலைவர் அவர்களே, இங்கு இருக்கிற இலங்கை ஹை கமிஷனர் ஆபீஸ் மூலமாகவாவது இந்த அரசாங்கத்தைப் பற்றி அங்கு தவறாகப் பிரச்சாரம் செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்த அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இது இலங்கையிலுள்ள எதிர்க் கட்சித் தலைவர் செய்து கொண்டு வருவதாகச் சொல்லப்படுகின்ற பிரசாரத்தைப் பற்றியது. இலங்கை அரசு அப்படிப்பட்ட பிரசாரத்தைச் செய்து வந்தால் ஹை கமிஷனர் மூலமாகத் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த அரசு கருதியிருக்கும்.

DR. H. V. HANDE: Sir, what is the exact type of propaganda that has been indulged in by this Lady's Party?

THE HON. THIRU C. N. ANNADURAI: The usual kind of propaganda that any Party indulges in against another Party.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:** இங்கே இருக்கிற அரசாங்கத்தைப் பற்றி இலங்கையில் ஒரு தவறான பிரசாரம் செய்யப்படுவதைக் கண்காணித்து அதற்குத் தக்க ஏற்பாட்டை மத்திய அரசு செய்யவேண்டும். காரணம் என்னவென்றால் விருதுநகர் தொகுதியைப் பொறுத்தவரை அந்நியப் பணம் விளையாடியதா இல்லையா என்பதைப் பற்றி நமக்கு ஏதும் கூறாது அவர்கள் கண்காணித்து வருகிறார்கள். அந்த முறையில் இந்த மாதிரி தவறான அபிப்பிராயம் இலங்கையில் பேசப்படுவதைத் தடுக்க, கண்காணிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுப்பது குறித்து இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** கனம் ஆசைத்தம்பி அவர்கள் தொகுத்து கேட்பதாலே நான் சொல்ல வேண்டாமென்று கருதியிருந்ததைச் சொல்ல வேண்டி வருகிறது. திருமதி பண்டாரநாயகாவின் பிரசாரத்தைப் பற்றி இந்த அரசு பொருட்படுத்தவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த மாதிரியான பிரசாரத்தைப்பற்றி மத்திய அரசுக்கு மாகாண அரசு கருத்துத் தெரிவித்தது உண்டா?

[1967 ஜூன் 22

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறபடி அங்கு நடைபெறுகின்ற ஒரு எதிர்க்கட்சியின் பிரசாரத்தின் மூலம் இந்த அரசாங்கத்திற்கு ஏதாவது கவலை ஏற்பட்டால் மத்திய அரசாங்கத்திடம் சொல்லலாம். ஆனால், அப்போது கூடச் சொல்லியிருக்க வேண்டியதில்லை. இந்தியாவினுடைய மொத்த அந்நிய நாட்டுக் கொள்கையைப் பற்றி அங்கே தவறாகப் பேசப்பட்டிருந்தால்தான் நாம் அவர்களிடத்தில் சொல்ல வேண்டியிருந்திருக்கும். இப்போது அதற்கு அவசியமில்லை. இப்போது உள்ளபடியே அந்தப் பிரசாரம் பலன் அளிக்காததன் காரணமாக நிறுத்தப்பட்டிருப்பதாக அறிகிறேன்.

**திரு. க. ரா. நல்லசிவம் :** இலங்கையில் தமிழ் வம்சா வழியினர் லட்சக் கணக்கில் இருக்கிறார்கள். அவர்களை இங்கே வரவழைத்துக் கொள்வதற்காக இலங்கை அரசும் மத்திய அரசும் உடன்பாடு செய்துகொண்டு அது சம்பந்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது போன்ற நிலையில், தமிழர்கள் அதிகமாக அங்கே இருக்கின்ற நிலையில் இன்றைக்கு அரசாங்கத்தில் பொறுப்பு ஏற்றிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தைப் பற்றித் தவறான பிரசாரம் செய்வதைத் தடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இங்கே உள்ள திராவிட முன்னேற்றக் கழகம் நடத்துகின்ற தமிழக அரசைப் பற்றி அதிகார பூர்வமான எல்லா நல்ல தகவல்களையும் இலங்கையில் இப்போதுள்ள அரசு நன்றாக அறிந்து இருக்கிறது. நாம் ஏதும் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தில் தமிழர் ஒருவரை நியமனம் செய்ய வேண்டுமென்று மத்திய சர்க்காரை இந்த அரசு கேட்டுக் கொண்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இந்தக் கேள்வியின் தொடர்பாக இந்தத் துணைக் கேள்வி வரவில்லை என்றாலும் கனம் உறுப்பினருக்குள்ள ஆவலைப் போலவே பலருக்கும் ஆவல் இருப்பதால், இதைப் பற்றி ஏற்கனவே மத்திய சர்க்காரிடம் முறையீட்டைத் தெரிவித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** அடிக்கடி இலங்கை அரசாங்கம் தமிழர்களைப் பற்றியும் தமிழ் நாட்டிலுள்ள கட்சிகளைப் பற்றியும் தவறான பிரசாரம் செய்கின்ற காரணத்தால் அங்கு ஒரு தமிழரை ஹை கமிஷனராகப் போடுவதன் மூலம் பரிகாரம் காண முடியும் என்ற காரணத்தால் முன்பே இது பற்றி நமது கட்சிகளின் சார்பாக எடுத்துக் கூறப்பட்டது. தற்போதைய அரசாங்கம் அதைப் பற்றி கவனித்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்குமா ?



1967 ஜூன் 22]

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஏற்கனவே வேறு ஒரு உறுப்பினர் கேள்விக்கு இதைப் பற்றிப் பதில் அளித்தேன். இலங்கையிலே ஒரு தமிழரை ஹை கமிஷனராக நியமிக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரிடத்திலே நம்முடைய முறையீட்டைத் தெரிவித்திருக்கிறோம். கனம் உறுப்பினருடைய கேள்வியின் முதற் பகுதியில் தமிழர்களைப் பற்றி, தமிழ் நாட்டைப் பற்றி இலங்கை அரசு தவறான பிரசாரம் செய்கிறது என்று குறிப்பிட்டார்கள். இலங்கையில் அதிகார பூர்வமாக உள்ள அரசு தமிழக அரசைப் பற்றி மிக மதிப்பான கருத்தை வைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தேர்தல் சம்பந்தமாக கைது செய்யப்பட்டவர்கள்

* 44 **வினா.—திரு. கரு. சீமைச்சாமி :** மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் நயமுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தேர்தல் சம்பந்தமாக மட்டும் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர், கட்சிவாரியாக?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :**

| | |
|---|---|
| திராவிட முன்னேற்றக் கழகத்தினர் | 915 |
| காங்கிரஸ்காரர்கள் | 319 |
| கம்யூனிஸ்டுகள் (இடதுசாரி) | 28 |
| திராவிடக் கழகத்தினர் | 18 |
| ஏனையோர் | 84 |
| மொத்தம் | 1,364 |

**திரு. கரு. சீமைச்சாமி:** தேர்தல் சமயத்திலே சைதாப்பேட்டை தொகுதியிலே நடந்த கோட்டூர் சம்பவம் மதிப்பிற்குரிய அமைச்சர் கருணாநிதி அவர்களை வழி மறித்துக் கொலை செய்வதற்கு நடந்த முயற்சியாகும். அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அது பற்றிய விவரங்கள் இப்போது என்னிடத்தில் இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** திருமங்கலம் தேர்தல் நேரத்தில் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டபோது ஏற்பட்ட கலவரத்தில் கைது செய்யப்பட்டவர்களுடைய எண்ணிக்கையும் இதிலே சேர்ந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இது மாநிலம் முழுவதற்குமான கணக்கு. ஜில்லாவாரியாகப் பார்த்து நம்முடைய ஜில்லாவில் எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டார்கள் என்று அறிந்து கொள்வதில் அங்கத்தினர்களுக்கு ஆவல் இருக்குமென்று கருதாததால் ஜில்லா வாரியான கணக்கு எடுக்கவில்லை.

[1967 ஜூன் 22

**திரு. மு. ச. சிவசாமி :** தேர்தல் பிரசார காலத்திலே இன்றைய முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் கார் மீது கோவை மாவட்டத்திலுள்ள ஒரு காங்கிரஸ் மில் முதலாளியால் தூண்டப் பட்டவர்கள் கல் எறிந்தார்களே, அவர்கள் கைது செய்யப் பட்டார்களா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தேர்தல் பிரசார காலத்திலே என்னுடைய கார் மீது கல் எறியப்பட்டது; நடு வழியில் நிறுத்தி மாலைகளும் போடப்பட்டன. நான் இரண்டையும் ஒன்றாக எடுத்துக் கொண்டேன்.

DR. H. V. HANDE : Sir, are the Government aware of the fact that during the time of the General Elections, there was a regular practice of arresting and putting in prison the D.M.K. Party workers and the workers of the other Opposition Parties so as to prevent them from organising their election campaigns and this had happened even during the Corporation elections when D.M.K. Party workers were arrested and put in prison two days before the elections? If so, what action has been taken to see that such things are prevented in future?

THE HON. THIRU C. N. ANNADURAI : The hon. Member's statement is sustained by the fact that the largest number of persons arrested belong to the D.M.K. Party. My hon. Friend wants that such a thing should not be allowed to happen. He knows pretty well that such a thing cannot happen now. But as regards the point that there was motive in arresting persons like that, I would like to emphasise that if there had been motive on the part of certain political parties in causing the arrest of volunteers of other parties before the elections, I may inform the members that they had not succeeded in their scheme.

**திரு. பெ. சீனிவாசன்:** விருதுநகர்த் தொகுதியில் பொதுத் தேர்தலின்போது கள்ள ஓட்டுப் போட்டதாகக் கைது செய்யப் பட்டவர்களில் எத்தனை பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதைப் பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. பொதுவாக அது எலக்‌ஷன் வழக்கு களைப் பற்றிய தகவல்களில் கிடைக்கும். கனம் உறுப்பினருக்கு அதைப் பற்றித் தெரியவேண்டுமென்றால் தனியாகக் கேள்வி போட்டால் தகவல் தரப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தேர்தல் காலத்திலே காங்கிரஸ் கட்சி யின் சார்பிலே நடந்த தேர்தலிலே குறிப்பாக ஒரு சில கொலைகள்
மு.ப. 1-30 செய்யப்பட்டிருக்கின்றன. உதாரணமாக முன்னாள் அமைச்சர் திரு. ராமைய்யா அவர்களுடைய தொகுதியிலே தி.மு.க. அபேட்சகரை ஆதரித்து வேலை செய்த என்னுடைய கட்சியைச் சேர்ந்த இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சித் தோழர் கொலை செய்யப்பட்டு இருக்கிறார். அதேபோல் பல தி.மு.க. தோழர்களும் கொலை செய்யப் பட்டிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது.



1967 ஜூன் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கோதண்டராமன் அவர் களுக்கு நான் பல முறைகள் சொல்லியிருக்கிறேன். அவர்கள் கேள்வி கேட்கும்பொழுது சிறு சொற்பொழிவு ஆற்றி வருகிறார்கள். சொற்பொழிவு ஆற்றக்கூடாது, அருள்கூர்ந்து கேள்வியாகப் போடவேண்டுமென்று அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** கொலை செய்யப்பட்டது சம்பந்தமாகக் கொலை செய்தவர்கள் கைது செய்யப்பட்டு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கேட்பதற்காகத்தான் நான் அப்படிக் கேட்டேன். தெளிவாகத் தெரிவித்தால் தெரியும் என்ற முறையில்தான் சொன்னேன். எத்தனையோ பேர்கள் தெளிவாகச் சொல்கிறார்கள். ஆனால் நான் தெளிவாக்கும்பொழுது மட்டும் தலைவர் அவர்கள் என்மீது என்னவோ தெரியவில்லை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேரவைத் தலைமைப் பதவி வகிப்பது பேரவைக்கு இழுக்கு என்று 192-வது விதிப்படி உரிமையாக உரிமைக் குழுவுக்கு விசாரணை நடத்த விடலாம். ஆனால் இந்த ஒரு முறை உங்களை நான் எச்சரித்து விட்டு விடுகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** தலைவர் அவர்களுக்குக் கட்டுப் படுவதற்கு எப்பொழுதுமே நான் தயாராக இருக்கிறேன்.

MR. SPEAKER : No discussion shall be permitted at question-time. அதாவது, நமது சட்டப் பேரவை 40-வது விதியின்படி கேள்வி நேரத்தில் கேள்வியைத் தவிர வேறு எந்த விதமான விவாதமும் செய்யக் கூடாது. அதைக் கடைப்பிடித்து நடக்கவேண்டும். அப்படியில்லாமல் மீண்டும் மீண்டும் கேள்வி நேரத்தில் வேறு விவாதம் செய்து கொண்டிருக்க வேண்டுமென்றால் விதியைத்தான் மாற்றியமைக்க வேண்டும். இப்பொழுது இருக்கிற 40-வது விதியைப் பின்பற்ற நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

**திரு. மு.ரா. ஆதி:** தேர்தல் நேரத்திலே நடந்த கலவரங்களிலே ஈடுபட்டவர்கள் வெளியிலேயிருந்து கொண்டுவரப்பட்ட காங்கிரஸ் அடியாட்கள்தான் என்பதை நமது அரசாங்கம் அறியுமா? அதைப் பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

THE HON. THIRU C. N. ANNADURAI : The main question is about the number of persons arrested in connection with the general elections. அது பற்றிய விவரங்கள் மட்டும்தான் இப்பொழுது என்னிடத்தில் இருக்கின்றன. மற்ற துணைக் கேள்வி கள் எல்லாம் பொதுத் தகவல்களைப் பற்றியதாக இருப்பதால் தனித் தனிக் கேள்விகள் போடலாம்.

**திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, பிப்ரவரி 18-ஆம் தேதி திருச்சியிலே தேர்தல் நடைபெற்றது; 22-ம் தேதி ஓட்டு எண்ணப்பட்டது. தேர்தல் முடிந்து ஓட்டு எண்ணப்படுவதற்கு முன்பு திருச்சியிலே உள்ள சில முக்கிய திராவிட முன்னேற்றக்

கழகப் பிரமுகர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களுடைய எண்ணிக்கையும் இந்தப் பட்டியலில் அடங்கியிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை** : அவையின்முன் இருக்கின்ற கேள்வி எத்தனை பேர்கள் என்பதைப்பற்றியதே தவிர, எந்த எந்த இடத்தில் கைது செய்யப்பட்டவர்கள் என்பதைப் பற்றியல்ல.

**திரு. எம். சுரேந்திரன்** : தலைவர் அவர்களே, கலவரங்கள் எல்லாம் நடந்து தேர்தல் முடிந்துவிட்டது. தேர்தல் காலத்திலே ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லாதவர்கள் தான் கலவரங்களில் நம்பிக்கை வைத்து இப்படிப்பட்ட காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இப்பொழுது கலவரங்கள் எல்லாம் முடிந்து தேர்தலும் முடிந்துவிட்டது. எனவே, அந்த வழக்குகள் எல்லாம் வாபஸ் வாங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை** : வழக்குகளை வாபஸ் வாங்குவது ஜனநாயகத்திற்கு வலியூட்டுமென்று நான் நினைக்கவில்லை. இனிமேல் அப்படிப்பட்ட கலவரங்கள் நடக்காமல் இருப்பதற்கு எல்லாக் கட்சிக்காரர்களும் ஒத்துழைக்க வேண்டும். அப்படிச் செய்வதுதான் ஜனநாயகத்திற்கு நல்லது என்று நினைக்கிறேன். சில வழக்குகள் விடப்படுகின்றன. மிகக் கடுமையான வழக்குகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, may I request the Hon. Chief Minister to state how many out of these offences required the sanction of the State Government for prosecution and how many have been sanctioned by the State Government?

THE HON. THIRU C. N. ANNADURAI : The question is about the number of people arrested and not about the nature of the cases.

**திரு. கே. போஜன்** : தலைவர் அவர்களே, கைது செய்யப்பட்டவர்களிலே எத்தனை பேர்கள் விடுதலையானார்கள், எத்தனை பேர்கள் இன்னும் காவலில் இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை** : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அடுத்த கேள்வி 45, திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களுடையது. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதிலளிப்பார்கள்.

**திரு. வெ. முனுசாமி** : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், நான் ஐந்து நிமிடங்களாகக் கேள்வி கேட்பதற்குக் கையைத் தூக்கிக் கொண்டே இருக்கிறேன். கைகூட வலிக்கிறது. என்னை அனுமதிக்காததற்குக் காரணமென்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. முனுசாமி அவர்கள் கேட்ட கேள்விக்கு இப்பொழுது பதில் சொல்ல விரும்புகிறேன்.



When a sufficient or reasonable number of supplementary questions have already been put, the Speaker may disallow any further supplementary questions.

திரு. முனுசாமி அவர்கள் 33 (2) விதியை படித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். போதுமான அளவுக்குத் துணைக் கேள்விகள் அனுமதிக்கப்பட்டுவிட்டால் மேற்கொண்டு துணைக் கேள்விகள் அனுமதிக்கமுடியாது என்று சொல்லலாம் என்று இருக்கிறது. ஆகவே துணைக்கேள்விகள் போதுமான அளவு அனுமதிக்கப்பட்டு விட்டதால், மேற்கொண்டு துணைக்கேள்விகள் அனுமதிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## அலுமினியம்

* 45 வினு.—**திரு. வி. கே. கோதண்டராமன்**: மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960 முதல் 1966 வரை நமது ராஜ்யத்தில் எந்த அளவு எந்தெந்த இடத்தில் அலுமினியம் எடுக்கப்பட்டுள்ளது?

(இ) சர்க்கார் துறையிலா அல்லது தனியார் துறையிலா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : (அ) & (இ) அலுமினியம், 'பாக்சைட்' கனிகளிலிருந்து எடுக்கப்படுகிறது. 'பாக்சைட்' கனிகள் சேலம் மாவட்டம், சேர்வராயன் மலையிலும், கொல்லி மலையிலும், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பழநி மலையிலும், நீலகிரியிலும் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தனியார் துறை நிறுவனமான சென்னை அலுமினியம் கம்பெனி லிமிடெட் 1965, மே திங்களிலிருந்து அலுமினியம் தயாரிக்கத் தொடங்கியது. இந்த நிறுவனம் ஆண்டு ஒன்றுக்கு 10,000 டன் அளவுள்ள அலுமினியம் தயாரிக்கும் திறனுடையது.

DR. H. V. HANDE : In view of the fact that the Government has a number of shares in most of these aluminium companies, will the Government exercise any control over their profit and loss and will it investigate whether these companies are running at a profit or loss?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : அதைப்பற்றிய விவரத்திற்குத் தனிக்கேள்வி போடவேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன்** : அலுமினியத் தொழிற்சாலை மேட்டூரில் இருக்கிறது. அதனுடைய நிர்வாகம், பணப்பொறுப்பு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : இந்தக் கேள்வி எவ்வளவு கிடைக்கிறது, யார் எடுத்திருக்கிறார்கள் என்பதைப் பற்றியது, மற்றத் தகவல்களுக்குத் தனிக்கேள்வி போடவேண்டும்.

[1967 ஜூன் 22

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** இந்த அலுமினியத் தொழிற்சாலை முதலிலே பொதுத்துறையிலே ஆரம்பிக்கப்படுவதாக இருந்தும், தனியார் துறையில் இயங்குவதற்கான காரணங்கள் யாவை என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதைப்பற்றிய தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலையில் ஒரு ஆண்டில் ஒரு கோடி ரூபாய் லாபம் வந்திருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படி ஒரு கோடி ரூபாய் லாபம் வரக்கூடிய தொழிற்சாலையை அரசாங்கம் நடத்தாமல் தனியார் துறை ஏன் நடத்துகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** விவரம் இல்லை, தனிக் கேள்வி போட வேண்டும்.

THIRU K. VINAYAKAM : Tiruttani area has come from the Andhra Pradesh. There is a feeling that a lot of mineral deposits are found in that area. Was any action taken to conduct a geological survey in that area?

THE HON. THIRU C. N. ANNADURAI : The hon. Member should be aware of the fact that since the area was in the Andhra Pradesh, geological survey could not have been taken up by the Madras Government.

THIRU K. VINAYAKAM : I would like to clear a misapprehension. This area came into our State in 1960 and this question relates to the period 1960–66.

THE HON. THIRU C. N. ANNADURAI : My Friend would admit that it would have been more appropriate if the question had been addressed to the previous Government.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஜியாலாஜிக்கல் சர்வே அகில இந்தியாவினுடைய சர்வே என்று இருந்தாலும் இந்த மாநிலத்திலோ அல்லது அந்த மாநிலத்திலோ எந்த மாநிலமாக இருந்தாலும் சரி மத்திய சர்க்கார் மூலமாகத்தான் நடவடிக்கை எடுக்க முடியும் என்றாலும் அதைச் செய்வதற்காக இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதுபோல் மத்திய சர்க்கார்தான் இதற்கு அதிகாரம் பெற்றவர்கள் என்பது உண்மையென்றாலும், என்ன என்ன ஆராய்ச்சி நடத்தலாம் என்று கூறுகின்ற உரிமை மாநில சர்க்காருக்குத்தான் இருக்கிறது. இதற்கு இந்தச் சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இதற்கு முதலில் இருந்த சர்க்கார், இதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டிய சர்க்கார், இதைப்பற்றி நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.



1967 ஜூன் 22]

DR. H. V. HANDE : Are the Government aware of the fact that there is a great deal of discrepancy between the aluminium factory price in the Madras State and the world aluminium price and the price of the aluminium that comes out of the local factory is much higher than the world prices? If so, will the Government examine this matter and take necessary action to see that the price discrepancy is not much between the Madras aluminium price and the world price?

THE HON. THIRU C. N. ANNADURAI : The points referred to by the hon. Member will be taken into account; but, at present I am not posted with all the necessary facts about the working of the Aluminium factory at Mettur.

**திரு. கே. போஜன் :** தலைவர் அவர்களே, நீலகிரியிலே எவ்வளவு பாக்ஸைட் கிடைக்கும் என்பதை அமைச்சரிடமிருந்து அறிந்து கொள்ள விரும்புகிறேன். அதிகமாகக் கிடைக்குமானால் அங்கு ஒரு அலுமினியம் உற்பத்தி தொழிற்சாலையை ஏற்படுத்தும் சாத்தியக்கூறு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்போது சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலையிலும், கொல்லி மலையிலும் பாக்ஸைட் கனி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அது எடுக்கப்படுகிறது. நீலகிரியிலும் பழனி மலையிலும் இந்தக் கனிப் பொருள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு வல்லுநர்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு கனிப்பொருள் இருக்கும் என்று தெரிந்த பிறகு வேண்டிய நடவடிக்கை எடுக்கலாம்.

***46. வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய கல்வி–தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் அலுமினியம் உருக்குத் தொழிற்சாலையை ஏற்படுத்தும் நோக்கம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) ஆண்டு ஒன்றிற்கு 25,000 மெட்ரிக் டன் அலுமினிய பாளங்களும், 10,500 மெட்ரிக் டன் அலுமினிய வார்ப்படமும் தயாரிப்பதற்கான தொழில் நிறுவனம் ஒன்றைச் சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூரில் அமைப்பதற்கான உரிமம் சென்னை அலுமினியம் கம்பெனிக்கு வழங்கப்பட்டுள்ளது. அலுமினிய வார்ப்படங்களின் உற்பத்தித் திறனை ஆண்டொன்றிற்கு 15,000 டன்களாக அதிகரிக்க அனுமதிக் கடிதம் ஒன்றும் இக் கம்பெனிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. வேறு தொழில் யூனிட்டுகள் எவற்றையும் நிறுவும் செயற் குறிப்பு இல்லை.

DR. H. V. HANDA : Sir what is the working capacity and also the installed capacity of that factory? What is it exactly that

comes out of the factory? Is there any discrepancy between the capacity that is put on the paper and the actual aluminium that comes out of the factory?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்போது 10,000 டன் உற்பத்தி ஆகும் அளவுக்குத் திறன் பெற்றிருக்கிறது. பதினையாயிரம் டன் அளவுக்கு அதிகரிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஐம்பதாயிரம் டன் அளவுக்கு உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு அவர்கள் விதிப்படி அனுமதி கோரியிருக்கிறார்கள். அது இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பழனியில் கிடைக்கும் அந்த பாக்சைட்டையும் சேர்த்து 50,000 டன் அளவுக்குப் போகலாம் என்று சொல்கிறார்கள். பழனியில் எவ்வளவு பாக்சைட் கிடைக்கும் என்று தெரியாத காரணத்தினால், அது தெரிந்த பிறகு தான் அனுமதி அளிப்பதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

DR. H. V. HANDE : Will the Hon. Minister be pleased to state the capital outlay of this plant or the amount that is going to be invested in this plant?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அது பற்றிய விவரத்திற்குத் தனிக்கேள்வி போடவேண்டும்.

THIRU T. MARTIN : Will the Hon. Minister be pleased to state whether the Company is sponsored by the State Government or whether it is a private company or a quasi-private company?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தனியார் கம்பெனி தான்.

**திரு. ந. தருமலிங்கம் :** தலைவர் அவர்களே, அலுமினியம் கண்டுபிடிக்கப்படும் இடத்தில் மட்டுமே தொழிற்சாலை ஏற்படுத்தப்படுமா? அலுமினியம் கண்டுபிடிக்கப்படாத இடத்திலும் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பெரும்பாலும் அலுமினியம் இருக்கிற இடத்தில் தான் தொழிற்சாலை அமைய முடியும். சேலத்தில் இருக்கும் தொழிற்சாலை சௌராஷ்டிராவிலிருந்து பாக்சைட்டை வரவழைத்து உற்பத்தி செய்யும் நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. பழனியில் 5 கோடி ரூபாய் செலவில் ஒரு தொழிற்சாலை அமைக்க வங்காளக் கம்பெனி அனுமதி கோரியிருக்கிறது. பழனியில் எவ்வளவு கனிப்பொருள் கிடைக்கும் என்று தெரியாத காரணத்தினால் அனுமதி அளிக்கப்படவில்லை; அது பரிசீலனையிலிருக்கிறது.

**திரு. எ. ஆர். சுப்பையா முதலியார்:** தலைவர் அவர்களே, அந்த விரிவு படுத்தும் திட்டத்தில் சர்க்கார் பங்கு எடுக்கும் யோசனை இருந்து கொண்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்போது அந்த மாதிரி யோசனை இல்லை.



**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே மதராஸ் அலுமினியத்தின் உற்பத்தித் திறனை 50,000 டன் அளவுக்கு உயர்த்துவதற்கு அனுமதி கோரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டது. அதற்கு வேண்டிய பாக்சைட் கிடைக்கிறதா? இப்போதே சௌராஷ்டிராவிலிருந்து கனிப்பொருள் வருகிறது என்று சொல்லப்பட்டதே, எதை அடிப்படையாக வைத்துத் திறனை உயர்த்த அனுமதி அளிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்போது 15,000 டன் அளவுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. பழனியில் கிடைப்பதைச் சேர்த்து 50,000 டன் அளவுக்கு உயர்த்துவதற்கு அனுமதி கோரியிருக்கிறார்கள். பழனியில் கிடைக்கும் அளவு தெரியாத வரையில் 50,000 டன் அளவுக்கு உயர்த்துவதற்கு அனுமதி கிடைக்காது. அதன் பிறகு தான் அனுமதி அளிப்பது பற்றி யோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் 47-ம், 48-ம் வினாக்கள் நேரம் முடியும் வரையில் தள்ளி வைக்கப்படுகின்றன.

### கிணறு வெட்டுவதற்கான கடன்

* 49 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்குக் கிணறு வெட்டுவதற்கான கடன் ரொக்கமாகக் கொடுப்பதற்குப் பதிலாக சர்க்காரே கிணறு வெட்டிக் கொடுத்து உதவி செய்யும் உத்தேசமுண்டா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) & (இ) விவசாயிகளுக்குக் கிணறு வெட்டுவதற்கான கடன் ரொக்கமாகக் கொடுப்பதற்குப் பதிலாகச் சர்க்காரே கிணறு வெட்டிக் கொடுத்து உதவி செய்யும் உத்தேசம் பொதுவாக இல்லையென்றாலும், மதுரை மாவட்டக் கலெக்டர் அவர்கள் ஒரு மாதிரித் திட்டத்தை அனுப்பியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின்படி 20 அடியிலிருந்து 30 அடிக்குள் தண்ணீர் இருக்கிற பிளாக் ஒன்றை எடுத்துக்கொண்டு, அங்கே சாதாரணமாக இப்போது கொடுப்பதைப்போல கிணறுகளுக்குக் கடன் வசதிகளைக் கொடுத்து, அந்தக் கடன் வசதிகளைச் சர்க்காரே ஏற்றுக்கொண்டு, மூன்று மாத காலத்திலே கிணறுகளை வெட்டிக் கொடுக்கலாம் என்ற மாதிரித் திட்டத்தை மதுரை மாவட்டக் கலெக்டர் அவர்கள் தயாரித்திருக்கிறார்கள். இப்போது இருக்கிற தக்காவிக் கடன் மூலம் கிணறுகள் வெட்ட 1 வருஷம், 2 வருஷம், 3 வருஷம்கூட ஆகிற காரணத்தினால், மூன்று மாதங்களுக்குள் கிணறுகள் வெட்டி கொடுக்கும் முறையில் மதுரை மாவட்டக் கலெக்டரின் திட்டத்தைப் பரீட்சார்த்தமாக, ஒரே பிளாக்கை எடுத்து 200 கிணறுகளை வெட்டலாமா என்பது விவசாய இலாகாவின் தீவிரப் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. டி. டி. எஸ். திப்பையா:** தலைவர் அவர்களே, கிணறு அடிவெட்டு வெட்ட அரசாங்கக் கடன் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அல்லது நிறுத்தி வைத்து விட்டார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கிணறுகள் அடி மட்டம் வெட்டுவதற்குச் சில விதி முறைகளின் மீது கடன்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவர் அவர்களே, கிணறு வெட்டுவதற்குக் கொடுக்கப்படுகிற கடனை வைத்து விவசாயிகள் கிணறை வெட்டும் நேரத்தில் சில சந்தர்ப்பங்களில் ஊற்றுத் தண்ணீர் கிடைக்காத காரணத்தினால் மிகப் பெரிய நஷ்டத்திற்கு ஆளாகிறார்கள் என்று எண்ணிப் பார்த்து, இந்த அரசாங்கம் இயந்திர வசதிகளுடன் போர்வெல் செட்டுகளை அமைத்து, அந்தத் திட்டத்தின் மூலமாக அரசாங்கமே விவசாயிகளுக்குக் குழாய்க் கிணறுகளை வெட்டித் தர உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** போர்வெல்கள் வெட்ட வேண்டிய இடங்களில் செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு இடத்திற்கும் அந்தந்த மாதிரியான நில பேதங்களுக்கேற்ப கிணறுகள் வெட்டப்பட்டு வருகின்றன.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** ஸார், கிணறு வெட்டுவதற்காக வேண்டி இன்றைக்குக் கொடுக்கக்கூடிய பணத்தைக்கொண்டு வெட்ட முடியாத சூழ்நிலை இருக்கிறது. உதாரணமாக, வட ஆற்காடு, தென் ஆற்காடு, கோயம்புத்தூர் போன்ற பிரதேசங்கள் பாறை மயமாக இருக்கின்றன. அதுவே, தண்ணீர் பாங்காக இருக்கிற பிரதேசங்களில் பிரம்மாண்டமான கிணறு வெட்டி 1,000 ஏக்கர்களுக்குப் பாய ஏற்பாடு செய்தால்தான் விவசாயிகளுக்கு வசதி செய்ய முடியும். அதைப் பற்றி அரசாங்கம் யோசிக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** நம்முடைய அரசாங்கத்தில் இதற்காக உணவு உற்பத்தித் திட்டத்தின் தனி அலுவலர் அவர்கள் தீவிரமான ஒரு திட்டத்தை, ஆயிரக்கணக்கான கிணறுகள் வெட்டும் திட்டத்தை அளித்திருக்கிறார். அதன் அடிப்படையில் புதிய கிணறுகளை உறுப்பினர் விரும்பும் வகையில் இந்த ஆண்டு தோண்ட ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

**திரு. ஈ. எம். நடராசன்:** இப்பொழுது கிணறு வெட்டுவதற்குக் கொடுக்கப்படுகிற பணம் போதவில்லை. இன்னும் அதிகமான தொகை கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கிணறு வெட்டுவதற்கு அதிகமான பண வசதி வேண்டும் என்றுதான் மத்திய சர்க்காரிடம் நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்



கோரினார்கள். அது இன்னும் முடிவு பெறாமல் இருக்கிறது. அதனுடைய அடிப்படையில் கிணறுகளுக்கு பணம் ஒதுக்கப்படும்.

THIRU K. VINAYAKAM: In the matter of sinking of wells, it has been found that private initiative has been niggardly and the Government are not going to sink wells by their own efforts. Will the Government think of the possibility of utilising the Prosperity Brigade which the Chief Minister envisaged in his budget speech?

THE HON. THIRU C. N. ANNADURAI: That is exactly the idea and I invite the co-operation of the hon. Member for that.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** கிணறு வெட்டுவதற்கு ரூ. 500 சப்ஸிடி ரொம்பக் குறைந்த தொகை. அது பழைய காலத்து ரூ. 100-க்குச் சமம். அதனால் ஒன்றும் பிரயோசனம் இல்லை. டோடல் எக்ஸ்பெண்டிசரில் 50 சதவிகிதம் சப்ஸிடியாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** கிணறுகள் தோண்டுவதற்கு செலவு என்பது மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசப்படுகிறது. ஒரே மாவட்டத்திலேயே நிலத்திற்கு நிலம் வித்தியாசப்படுகிறது. இதுவரையில் நிர்ணயிக்கப்பட்ட தொகை கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல போதாது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயமும்கூட. அதைப்பற்றி தகுந்த நேரத்தில், தகுந்த முறையில் யோசிக்கப்படும்.

**திரு. ரா. ரா. முனுசாமி:** கிணறு வெட்டுவதற்கு விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் கடன் தொகை முழுவதும் அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதைப்பற்றி புகார்கள் நிறைய உள்ளன என்பது பற்றி அரசுக்குத் தெரியுமா? காலதாமதம் இல்லாமல் முழுத் தொகையும் அவர்களுக்குக் கிடைக்க தகுந்த உத்தரவை அரசாங்கம் பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன தகவல் சர்க்காருக்கு தரப்பட்டிருக்கிறது. அந்தத் தடங்கல்களெல்லாம் நீக்கப்படுவதற்கான முயற்சியில் இந்த சர்க்கார் ஈடுபட்டிருக்கிறது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் நிலங்கள் துண்டு துண்டாக இருப்பதினால், ஒரு கிணற்றுக்குப் பயன்படுத்தப்படக்கூடிய அளவுக்கு நிலம் போதுமானதாக இல்லாத இடங்களில், சிறு நிலச்சுவான்தார்களுக்கு வசதியாக இருக்கும்பொருட்டு, சர்க்கார் சமுதாயக் கிணறுகள் வெட்டிக்கொடுக்கும் திட்டம் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** அப்படிப்பட்ட சமுதாயக் கிணறுகள் சில இடங்களில் பரீட்சார்த்தமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றிய பலன் கணக்கிடப்பட்டதும், அந்தத் திட்டம் மேலும் விரிவாக்கப்படும்.

**திரு. பா. நாகலிங்கம்** : என்னுடைய தொகுதியில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருப்பதினால், 300, 350 அடி தோண்டினாலும் பம்பு செட்டுகளுக்கு தண்ணீர் சரிவர கிடைப்பதில்லையாதலால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. க. ரா. நல்லசிவம்** : கிணறு வெட்டுவதற்குக் கடன் கொடுப்பது இரண்டாவது பட்சம். தண்ணீர் எங்கே இருக்கிறது என்று கண்டுபிடிப்பதுதான் முதலாவது வேலையாக இருந்து கொண்டிருக்கிறது. விஞ்ஞான ரீதியில் தண்ணீர் கண்டுபிடிப்பதற்கு சில சாதனங்கள் வெளி நாடுகளில் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. அதுபோன்ற சாதனங்களை வரவழைத்து, கிணறுகளை வெட்டுவதுபற்றி புதிய சர்க்கார் யோசிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : கனம் உறுப்பினர் யோசனை கவனத்தில் வைத்துக் கொள்ளப்பட்டு அதற்கான நடவடிக்கையில் இந்த சர்க்கார் ஈடுபடும்.

**திரு. தி. பொன்னுமலை** : சேலம் மாவட்டத்தில் ஒரு கிணறு வெட்டு ரூ. 6,000, 7,000 ஆகிறது. தற்பொழுது கொடுக்கப்படுகிற பணம் போதவில்லை. அதனால் விவசாயிகள் கிணறு வெட்டுவதை பாதியில் நிறுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு ரூ. 7,000 அளவுக்கு உதவி அளிக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : கிணறுகள் வெட்டுவதற்கான செலவு மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசப்படுகிறது என்பதை முன்பே சொன்னேன். கிணறுகள் பாதியிலே நிறுத்தப்படுகிறது என்று கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது இயல்பாகவே பணம் போதாத காரணத்தினால் நிறுத்தப்படுவதும் உண்டு. கிணற்றிற்காக வாங்கிய பணத்தை வேறு காரியங்களுக்காக செலவழித்துவிட்டு, அதனால் பாதியில் நிறுத்தப்பட்ட கிணறுகளும் உண்டு. முதல் தகவலைப்பற்றி நான் கவனித்துக் கொள்கிறேன். இரண்டாவது தகவலை கனம் உறுப்பினர் அவர்கள் கவனித்துக் கொள்ளவேண்டும்.

**திரு. என். துரைபாண்டியன்**: கிணறு எடுப்பதற்கு ரூ. 2,000 கடன் கேட்டால், ரூ. 4,000-க்கு ஜாமீன் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஏழை விவசாயிகள் கிணறு வெட்டுவதற்கு அந்த நிலத்தையே ஜாமீன் வைத்து, கடன் வாங்கிக் கொள்வதற்கு அனுமதிப்பதுப்பற்றி சர்க்கார் யோசிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : கிணறு வெட்டுவதற்கு விவசாயிகளுக்கு எந்தெந்த வகையில் சலுகைகள் செய்ய முடியுமோ, அவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து செய்யப்படும்.





**திரு. ஆ. கு. சுப்பையா** : நமது ராஜ்யத்தில் கோவில், மடங்களுக்கு அதிகமாக நிலங்கள் இருக்கின்றன. லட்சக்கணக்கான விவசாயிகள் அவைகளில் குத்தகை விவசாயம் செய்து வருகிறார்கள். அந்த நிலங்களில் கிணறுகள் தோண்டுவதற்கு விதிகளில் இடமில்லை. அம்மாதிரி கிராமங்களில் சமுதாயக் கிணறுகள் தோண்டி பாசன வசதி செய்து கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : அங்கத்தினர் அவர்களுடைய ஆலோசனையை கணக்கில் எடுத்துக்கொண்டு, அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலிக்கும்.

**திரு. கரு. சீமைச்சாமி**: உணவு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது 'கிணறுகள் வெட்டுவதற்காக மத்திய சர்க்காரிடம் பணம் கேட்டிருக்கிறோம், சரியான பதில் வரவில்லை' என்று சொன்னார்கள். கிணறுகள் வெட்டுவதற்குக்கூட மத்திய சர்க்காரிடம் அனுமதி கேட்கவேண்டியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : பெரிய ஆறுகள் மூலம் நீர்ப்பாசன வசதியற்ற நிலைமையில், இன்றைக்கு கிணற்றுப் பாசனத்தை அதிகமாக நம்பியிருக்க வேண்டியிருப்பதால், ஒரு லட்சம் கிணறுகள் வெட்டுவதற்கு இந்த ஆண்டில் திட்டம் இருக்கிறது. நம்முடைய உடனடியான அதிக உற்பத்தித் திட்டத்தின் கீழ் 14 லட்சம் ஏக்கர் நிலங்கள் புதியதாக பாசனத்திற்குக் கொண்டு வருவதற்கும், இன்னும் ஏற்கனவே உள்ள ஆயக்கட்டுகளை ஸ்திரப்படுத்துவதற்கும், கிணறுகள் வெட்டுவதற்காக பல கோடி ரூபாய் வேண்டியிருக்கிறது. ரூபாய் 15 கோடி போன தடவை ஒதுக்கியும், ரூ. 3 கோடி தான் செலவு செய்ய முடிந்ததாகத் தெரிகிறது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : கனம் உறுப்பினர் அவர்கள் இதற்குக்கூட மத்திய சர்க்காரிடம் கேட்க வேண்டியிருக்கிறதா என்று கேட்டார். 'ஆம், ஐயா, அப்படித்தான் இருக்கிறது' என்று சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. சி. வி. எம். அண்ணாமலை**: புதிய கிணறுகள் வெட்டுவதற்குக் கடன் கொடுக்கப்பட்டது போலவே, ஏற்கனவே கிணறுகள் எடுக்கப்பட்டு, அவைகள் நல்ல முறையிலே பயன்படாமல் சீர்கெட்டிருந்தால், அந்தக் கிணறுகளை புதுப்பிப்பதற்கு இந்த அரசாங்கம் கடன் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

**திரு. கரு. சீமைச்சாமி** : கிணறு தோண்டுவது என்பது உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் ஒரு முக்கியமான பிரச்சினையாகும். மத்திய சர்க்காரிடம் உதவி கேட்கப்பட்டிருக்கிறது என்று

சொல்லப்படுகிறது. மத்திய சர்க்கார் சரியாக பண உதவி கொடுக்காவிட்டாலும், இந்த மாநில சர்க்கார் அதற்கான உதவித் தொகையைக் கொடுத்து, கிணறுகள் தோண்டுவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மத்திய சர்க்கார் கொடுக்காவிட்டாலும், மாநில சர்க்கார் தன்னால் இயன்ற அளவுக்கு உதவி செய்வது என்று ஏற்கனவே முடிவு செய்து இருக்கிறது. இவ்வளவு பெரிய உணவு நெருக்கடியை சமாளிப்பதற்கு இவ்வளவு அற்புதமான திட்டத்தை மாநில சர்க்கார் வைத்திருந்தும், மத்திய சர்க்கார் அதில் அசிரத்தை காண்பிக்கிறது என்பதைத்தான் கனம் உறுப்பினர்களுக்கு நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. சகாதேவக் கவுண்டர்: புதிய கிணறுகள் தோண்டுவதற்குக் கடன் பெறுவதென்றால், ஜாயிண்டு பட்டா வைத்திருப்பவர்களுக்குக் கடன் வாங்குவதற்கு வசதி இல்லாமல் போய்விடுகிறது. அதைச் சரி செய்ய அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: அப்படிப்பட்ட வசதிகளைப் பெறுவதற்கு ஜாயிண்டு பட்டா குறுக்கிடுகிறது என்றால், கனம் உறுப்பினர் அவர்கள் அந்த யோசனையைச் சொல்லி, ஜாயிண்டு பட்டாவை தனிப் பட்டாவாக மாற்றிக் கொள்ளலாம்.

திரு. ஆலடி அருணா: கிணறு வெட்டிக்கொள்வதற்கு பத்திரத்தின் மதிப்பின்மீது கடன் கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா?

(பதில் இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் மூன்று கேள்விகள் இருக்கின்றன. நேரமாகிவிட்டபடியால், பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரத்தை இன்னும் ஐந்து நிமிடங்களுக்கு நீடிப்பதாக நான் அறிவிக்கிறேன்.

‘ பீல்ட்மென் ’கள் வேலை நீக்கம்

* 50. வினா.—திரு. என். சங்கரய்யா: மதிப்பிற்குரிய விவசாய
மு.ப. அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்
10 00 பாரா—

(அ) தீவிர விவசாயப் பகுதி திட்டம் நிறைவேற்றப்படும் மாவட்டங்களில் தற்பொழுதுள்ள விவசாயப் பணியாளர்களில் ஒரு பகுதியினரை வேலை நீக்கம் செய்யும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம், எனில், அத்தகைய ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(உ) அவ்வாறு பாதிக்கப்படும் ஊழியர்களுக்கு மாற்று வேலை அளிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?



மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) & (உ) எவரையும் வேலையிலிருந்து நீக்கும் உத்தேசம் இல்லை. நானூற்று பதினைந்து பீல்ட்மென்கள் 1965-ம் ஆண்டில் நியமிக்கப்பட்டார்கள். 1967-ம் ஆண்டில் இந்த பீல்ட்மென் பதவிகளை இரண்டாம் நிலை கிராம நல ஊழியர் பதவிகளாக மாற்ற முடிவு செய்யப்பட்டது. இந்த 415 பேரில், கிராம சேவக் பதவிக்குத் தகுதியுடையவர்கள், அவ்வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள். தகுதி இல்லாதவர்கள், ஏற்கனவே உள்ள பீல்ட்மென் பதவிகளில் தொடர்ந்து வேலை பார்ப்பார்கள்.

திரு. என். சங்கரய்யா: தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய இந்த முடிவு பீல்ட்மென்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அத்தகைய ஆபத்தான நிலைமை இல்லாததால், அது அவசியமில்லை.

திரு. செ. பாலசுப்ரமணியன்: இந்த வேலைகளுக்கு பீல்ட்மென்களுக்கு குறுகிய கால பயிற்சி அளித்து கிராம சேவக்குகளாக அமர்த்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: நான் ஏற்கனவே அறிவித்தது போல, தகுதியுள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள்.

திரு. கே. பி. எஸ். மணி: தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம் பதவி ஏற்றபிறகு பரவலாக இப்படிப்பட்ட ஊழியர்கள் பதவிகளிலிருந்து நீக்கப்படுவார்கள், அதன்பேரில் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்றும் வெளிப்புறங்களில் அரசியல் ரீதியாக சிலர் செய்துக் கொண்டு வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படிப்பட்ட நிலை இருந்தால், என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அத்தகைய கிளர்ச்சிகளுக்கு ஊழியர்கள் பலியாக மாட்டார்கள்.

படகு கட்டும் திட்டம்

* 51. வினா.—திரு. கரு. சீமைச்சாமி: மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மண்டபத்தில், நார்வே திட்டத்தின் கீழ், 1966–67-ல் எத்தனை படகுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டது?

(இ) அதில் எத்தனை படகுகள் கட்டி முடிக்கப்பட்டன?

(உ) அவற்றிற்கான செலவு தொகை என்ன?

[1967 ஜூன் 22

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : இந்தோ-நார்வீஜியன் திட்டப்படி—

(அ) 1966-67-ம் ஆண்டில் மண்டபத்தில் உள்ள படகு கட்டும் துறையில் 32 அடி அளவுள்ள ஐம்பது படகுகளும், 43 அடி அளவுள்ள இரண்டு படகுகளும் கட்டத் திட்டமிடப்பட்டது.

(இ) 1966-67-ம் ஆண்டில் 32 அடி அளவுள்ள பதினொரு படகுகள் கட்டப்பட்டன. 32 அடி அளவுள்ள முப்பது படகுகளுக்குச் சட்டங்களை நிலையாகப் பொருத்தும் அளவில் வேலை முடிந்திருக்கிறது.

(உ) 1967-ம் ஆண்டு பிப்பரவரி திங்கள் வரையில் ரூபாய் 9,24,437.52 படகுகள் கட்டுவதற்குச் செலவிடப்பட்டது.

**திரு. கரு. சீமைச்சாமி** : சார், இந்தப் படகுகள் கட்டியிருப்பது கம்மியாக இருக்கிறது; ஆனால் அவற்றிற்கு ஆகியிருக்கும் செலவு அதிகமாக இருக்கிறது; 11 படகுகளுக்கு 10 லட்சம் ரூபாய் ஆகியிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? படகுகள் அதிகமாகக் கட்டாததற்கு காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : இந்த இஞ்ஜின்கள், இன்னும் மற்ற சாமான்கள் நார்வே நாட்டிலிருந்து தரப்படுகிறது. அதனால்தான் செலவு அதிகமாக இருக்கிறது.

**திரு. மு. ச. சிவசாமி**: ஐயா, முந்தியிருந்த காங்கிரஸ் அரசாங்கத்திடமிருந்து, ஒரு காங்கிரஸ் உறுப்பினர் புதிய படகுகள் கட்டுவதற்கென்று ஒரு லட்சம் ரூபாய் கடன் வாங்கி, பழைய படகுகளையே புதுப்பித்து விட்டு, புதுப்படகுகள் கட்டாமல், அந்த அரசினரை ஏமாற்றியது இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : கேள்வி, இந்திய-நார்வே திட்டத்தின் கீழ் மண்டபத்தில் படகுகள் கட்டுவது பற்றியது. கனம் உறுப்பினர் கொடுக்கும் தகவலை எழுதியனுப்பினால், அது பரிசீலிக்கப்படும்.

THIRU T. MARTIN : Sir, will the Hon. Minister be pleased to state whether the boats so constructed have been allotted to the persons who are really fishermen or whether they have not been so far allotted?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி**: இப்படிக் கட்டப்பட்ட படகுகள் மீனவர்களுக்குத் தரப்படுகின்றன. கூட்டுறவில் சேர்ந்து அதில் பயிற்சி பெற்றவர்களுக்குத் தரப்படுகிறது.

**திரு. ந. வீராசாமி**: தலைவர் அவர்களே, நார்வே நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டவை என்று இந்தியாவிலேயே செய்யப்பட்ட இயந்திரங்கள் படகுகள் கட்டுவதற்கு உபயோகிக்கப்பட்டன என்கின்ற செய்தி உண்மையா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : அது தவறான செய்தி.



1967 ஜூன் 22]

**திரு. பி. கே. மூக்கையா தேவர்**: கட்டப்பட்ட படகுகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்டு விட்டனவா? வேலை செய்யாமல் ஏதாவது நிறுத்தப் பட்டிருக்கின்றனவா? அப்படியானால், எத்தனை?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : இந்தப் புதிய அரசு மார்ச் மாதம் 6-ம் தேதி பொறுப்பேற்றது. 4-ம் தேதி படகுகள் வழங்குவது பற்றி அன்றிருந்த அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது. அது சம்பந்தமான ரிப்போர்டுகள் வந்திருக்கின்றன. அவற்றைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

## மத்திய சிறையில் கைதிகள் தப்பியோடுதல்

* 52 வினா.—**திரு. ஆ. கு. சுப்பையா**: மதிப்பிற்குரிய சட்டக்கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மத்திய சிறையில், தண்டனை அனுபவித்து வரும் கைதிகள் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் சிறைக் கதவை உடைத்து வெளியேறியது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்குரிய காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா** : தலைவர் அவர்களே, ஏப்ரல் மாதம் இரண்டு கைதிகள் சிறைக் கூரைமீது ஏறிக்கொண்டு, அமைச்சர் வந்தால்தான் இறங்குவோம் என்று சொன்னது உண்மையா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்**: இரண்டு ஆயுட்கைதிகள் அப்படிப் பட்ட போராட்டத்தில் ஈடுபட்டது உண்மை.

SRI K. VINAYAKAM : Sir, may I know whether the Government have instituted an enquiry about the grievances of the two persons who got on top of the jail building and if so, what are their grievances and have they been redressed?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : அதைப் பற்றி விசாரணை நடத்தப்பட்டது. விசாரணையில் கைதிகள் சிலர் தாக்கப்பட்டார்கள் என்று தெரியவந்தது. தொடர்ந்து விசாரணை நடக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : அந்தக் கைதிகள் தாக்கப்பட்டார்கள் என்கிற முடிவை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறதா? அதன் பேரில் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : அந்தத் தகவல் வந்தவுடன் உத்தரவு போட்டு, அது விசாரணையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினாக்கள் விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு :—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 3. பணித்துறை வெளியீட்டிலிருந்து சில சொற்றொடர்களை நீக்கக் கோரிக்கை.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, the insinuating remarks made against the Hon. Speaker by the hon. Member, Thiru V. K. Kothandaraman, amount to contempt of the House and since the Hon. Speaker has not asked for the withdrawal of those remarks, I request the Hon. Speaker to order the expunction of those insiminuating remarks which should not find a place in the official proceedings?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த 'பாயிண்ட் ஆப் ஆர்டர்' ஒழுங்காக இருந்தாலும், சில உறுப்பினர்கள் பேசுவது நடவடிக்கைக் குறிப்பிலிருந்தால், இவர்கள் என்னென்ன பேசினார்கள் என்று பின் ஒரு காலத்தில் தெரிந்துகொள்ள முடியும் என்று அன்று மாண்புமிகு முதல் அமைச்சர் குறிப்பிட்டதற்கு இணங்க நான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க விரும்பவில்லை. அது குறிப்பிலேயே இருக்கட்டும்.

### 4. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

#### (அ) விவசாயிகளுக்கு நியாய விலையில் உணவுப் பொருள்கள் கிடைக்காமை.

#### (இ) தொழிலாளர்களுக்கு பஞ்சப்படியை சென்னை விலைவாசிப் புள்ளி விவரங்களுக்கு ஒப்ப நிர்ணயித்தல்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** திரு. ஏ. சுப்பராஜா அவர்கள் இரண்டு ஒத்தி வைப்புத் தீர்மானங்களை, 19—6—1967, 20—6—1967 தேதியிட்டு கொடுத்திருக்கிறார்கள். அந்த இரண்டையும் படிக்கும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** சார், தமிழகத்தில் கிராமப்புறங்களில் விவசாயத் தொழிலில் ஈடுபட்டு உணவு உற்பத்தி செய்துவரும் பல்லாயிரக்கணக்கான விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள் நியாய விலையில் உணவுப் பொருள் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். இந்த அவல நிலையைப் போக்க கிராமப்புறங்களில் உணவு விநியோக குடும்பக்கார்டுகள் வழங்கி பாதுகாக்க வேண்டும் என்று அரசாங்கக் கவனத்திற்குக் கொண்டுவர இந்த மன்றக் கூட்டத்தை ஒத்திவைத்து விவாதிக்கக் கோருகிறேன்.

அடுத்து, சென்னை விலைவாசியின் அடிப்படையில் விலைவாசிப் புள்ளியைக் குறைத்து, முதலாளிகள் பஞ்சப்படியைக் கணக்கிடத் தொடங்குவதால் தொழிலாளிக்கு ஏற்படும் அநீதியைப் போக்க அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கையைப் பற்றி விவாதிக்க சபை நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்கக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் முன்பே ஒருமுறை தெரிவித்தபடி, ஒரு பிரச்சினையைப் பற்றி விவாதிக்க வேறு வாய்ப்பு இருக்குமானால், அதற்காக இந்தப் பேரவையின் நடவடிக்கைகளைத்



தள்ளிவைத்துப் பேச வேண்டிய கட்டாயம் இல்லை. இப்பொழுது குறிப்பிட்டிருப்பவை பற்றிப் பேச உறுப்பினர் அவர்களுக்கு மூன்று வாய்ப்புக்கள் இருக்கின்றன. வரவு-செலவுத் திட்டத்தின் மீது விவாதம் நடக்கும் போது, மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் நடக்கும்போது, ஒதுக்கீடு மசோதா விவாதத்திற்கு வரும்போது இந்த தீர்மானங்களை அனுமதிக்க வேண்டுமென்றால், இந்த மூன்று முறைகளிலும் மாண்புமிகு உறுப்பினருக்குப் பேசுவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது என்று கருதுவதற்கு வேண்டிய காரணங்களைக் கூறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களுடைய எண்ணத்தின் படி பேசும்போது இவற்றைக் குறிப்பிட வாய்ப்பு இருப்பதால் அப்பொழுது பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படியே செய்யுங்கள்.

#### (உ) ஒத்திவைப்புத் தீர்மானங்களை ஒழுங்கு படுத்துவது பற்றி பேரவைத் தலைவரின் விளக்கக் குறிப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இனிமேல் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டுவருவதை ஒழுங்குபடுத்துவதற்காக, இரண்டு நிமிட நேரத்தில் விளக்கம் கொடுக்க விரும்புகிறேன். 'மே' என்பவர் எழுதிய 'பார்லிமென்டரி ப்ராக்டிஸ்'-இல் 365-ம் பக்கத்தில் கூறியிருக்கிறது. 'உடனடியாக, அல்லது வெகு சில நாட்களில் ஒரு குறிப்பிட்ட காரியத்தைப்பற்றி விளக்க வாய்ப்பு வருமானால், ஒத்திவைப்புத் தீர்மானம் பேரவைக்குக் கொண்டு வரக் கூடாது.' 365-ம் பக்கத்தில்,

"The motion is refused when an ordinary Parliamentary opportunity will occur shortly or in time . . . ."

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'மே' அவர்கள் மேலும் குறிப்பிடுகையில் " "when the vote on account is taken" என்கிறார். 'Vote on account' என்பது நம்முடைய மானியக் கோரிக்கைத் தீர்மானங்களைக் குறிக்கிறது. அடுத்து, "or a stage of Considerated Fund Bill is to be taken" என்கிறார். நாம் Appropriation Bill என்று சொல்வதுதான் Consolidated Fund Bill என்று சொல்லப் படுகிறது. அடுத்து, "When the matter could be raised on the Estimates" என்பது நமது பொது விவாதத்தைக் குறிப்பிடுகிறது. எனவே, வரவு செலவுத் திட்டத்தின் மீதுள்ள பொது விவாதம், அல்லது மானியக் கோரிக்கை மீதுள்ள விவாதம், அல்லது ஒதுக்கீடு மசோதாவின் (அப்ரோப்ரியேஷன் பில்) மீதுள்ள விவாதம், ஆகிய இந்த மூன்று விதமான விவாதத்தின் போதும் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கக்கூடிய கருத்துக்களைக் குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானம் (அட்ஜூர்ன்மென்ட் மோஷன்) கொண்டு வந்து, அதற்காக இந்தப் பேரவையின் நடவடிக்கைகளைத் தள்ளி வைத்துவிட்டுப் பேசுவது கூடாது என்பது 'மே' என்கிற ஆசிரியரின் கருத்தாகும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்கள் கொண்டு வந்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானம் விலைவாசி ஏற்றத்தைப் பற்றியதாகும். விலைவாசிகள் ஏறிவிட்டன என்பதைக் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டுவந்ததை யொட்டி நமது பேரவையின் தீர்ப்புகள் பல இருக்கின்றன. உணவுப் பொருட்களின் விலைவாசி ஏற்றத்தைக் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவருவதை அனுமதிப்பதற்கில்லை என்று 1964-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17-ந் தேதியன்று மாண்புமிகு முன்னாள் பேரவைத் தலைவர் திரு. எஸ். செல்லபாண்டியன் அவர்கள் தீர்ப்புக் கூறியிருக்கிறார்கள்.

> "The rise in prices of food stuffs and essential commodities is a continuing one and cannot be said to be a matter which arose suddenly to warrant an adjournment motion. Therefore, consent to the motoin is withheld ".

என்று அவர்கள் தீர்ப்புக் கூறியிருக்கிறார்கள்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. எல். சசிவர்ண தேவர் அவர்கள் அறிவிப்புக் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது அப்பொழுது பேரவைத் தலைவராக இருந்த டாக்டர் கிருஷ்ணா ராவ் அவர்கள் 1958-ம் ஆண்டு, செப்டம்பர் மாதம், 25-ந் தேதியன்று ஒரு தீர்ப்புக் கூறியிருக்கிறார்கள். உறுப்பினர் அவர்களுக்கு, தம்முடைய தீர்மானத்தின் வாசகத்தைப் படிப்பதற்குக்கூட இடம் அளிக்காமலேயே, தலைவர் அவர்கள் தீர்ப்பளித்திருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்—குறிப்பாக, விதிகள் ஆய்வுக்குழு Rules Committee உறுப்பினர்கள்—கவனிக்க வேண்டும். அந்தத் தீர்ப்பில் டாக்டர் கிருஷ்ணா ராவ் அவர்கள் குறிப்பிட்டதைப் பணித்துறை வெளியீட்டிலிருந்து நான் அப்படியே வாசிக்கிறேன்.

MR. SPEAKER : I am only reading from the notice of adjournment motion :

> " . . . non-availability of the above articles, the business of the House may be adjourned in order to discuss this urgent public matter of importance ".

ஒத்திவைப்புத் தீர்மானத்தின் வாசகத்தைப் படித்துவிட்டு, அவருடைய தீர்ப்பில்,

> " Prices, in my opinion, did not increase yesterday or the day before. Prices have been rising for some time back. It is a continuous matter and not a matter that has arisen suddenly . . . . . I do not give permission to this adjournment motion ".

என்று குறிப்பிட்டிருக்கிறார்.

விலைவாசி ஏற்றத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சசிவர்ண தேவர் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் குறித்து முன்னாள் பேரவைத் தலைவர் டாக்டர் கிருஷ்ணா ராவ் அவர்கள் கொடுத்த தீர்ப்பை இப்பொழுது நான் வாசித்தேன். இப்படி எத்தனையோ தீர்ப்புகள் இந்த அவையில் கொடுக்கப்பட்டிருக்



கின்றன. விலைவாசி ஏற்றத்தைப்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரக் கூடாது என்பதைக் குறித்து அளிக்கப்பட்டிருக்கிற தீர்ப்புகளின் முழு விவரங்களையும் இங்கே படித்து, இந்தப் பேரவையின் விலைமதிக்க முடியாத நேரத்தைச் செலவழிக்காமல், இன்ன இன்ன நாட்களில் அத்தகைய தீர்ப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதை மட்டும் இங்கே நான் குறிப்பிட்டுவிட்டால், மாண்புமிகு உறுப்பினர்கள் தேதிகளைக் குறித்து வைத்துக் கொண்டு, பிறகு படித்துக் கொள்ளலாம் என்று நான் கருதுகின்றேன்.

27—11—1952 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்களும், 25—9—1958, 20—4—1959, 31—8—1959 ஆகிய நாட்களில் மாண்புமிகு டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்களும், 23—3—1961, 27—3—1961 ஆகிய நாட்களில் மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் திரு. பக்தவத்சல நாயுடு அவர்களும், 27—2—1964, 17—7—1964, 8—3—1966, 5—11—1966 ஆகிய நாட்களில் மாண்புமிகு திரு. எஸ். செல்லபாண்டியன் அவர்களும் அத்தகைய தீர்ப்புகளை வழங்கியிருக்கிறார்கள்.

இப்படிப் பத்து தீர்ப்புகள் வழங்கியிருக்கிறார்கள். 8—3—1966 அன்றைய திரு. செல்லபாண்டியன் அவர்களுடைய தீர்ப்பு, இப்போதைய மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. மதியழகன் அவர்கள் அன்று கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுத்து வழங்கப்பட்ட தீர்ப்பாகும். ஆக, பெருமை மிக்க, ஆற்றல் மிகுந்த, நடுவுநிலைமை என்ன என்பதற்கே இலக்கணம் வகுத்தவர்கள் என்று மதிக்கத்தக்க அத்தகைய பெரியவர்கள்—முன்னாள் பேரவைத் தலைவர்கள்—அளித்துள்ள தீர்ப்புகளுக்கு மாறாக, வேறு விதமாக, இப்போதைய அவைத் தலைவனாகிய தீர்ப்பு சொல்லக்கூடாது, சொல்ல முடியாது.

ஆக, விலைவாசி உயர்வைக் குறித்த ஒத்திவைப்புத் தீர்மானங்கள் மீது முன்னாள் பேரவைத்தலைவர்கள், சென்ற பதினைந்து ஆண்டுக் காலமாக தொடர்ந்து அளித்துள்ள தீர்ப்புகளை நான் இப்பொழுது மாற்றவேண்டும் என்று, குறிப்பாக, என்னுடைய இடது புறமாக இருக்கும் உறுப்பினர்கள் கருதுகிறார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். மாற்ற முடியாத நிலைமை இருப்பதைப்பற்றி வருந்துகிறேன்.

உணவுப் பொருட்கள் விலைவாசியைப்பற்றி கொடுக்கப்பட்டுள்ள ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

## 5. அறிவிப்புகள்.

### (அ) அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் திரு. நா. ப. அழகமுத்து, திரு. பி. ஜி. கருத்திருமன், திரு. கே. விநாயகம், திரு. பி. கே. மூக்கையா தேவர், திரு. என். சங்கரய்யா, திரு. ஆ. கு. சுப்பையா, திரு. ஏ. ஆர். மாரிமுத்து,

டாக்டர் ஹபிபுல்லாபெய்க், திரு. க. ர. நல்லசிவம் திரு. ம. பொ. சி; சிவஞானம் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களையும் இன்று 11 மணி அளவிற்கு என் அறைக்கு வருகை தந்து அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தை அருள் கூர்ந்து நடத்தித் தரும்படி நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

### 6. அரசினர் தீர்மானம்.

#### தொழில்கள் வாரியத்திற்கு (Board of Industries) தேர்தல்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : பேரவைத்தலைவர் அவர்களே, "தொழில்கள் வாரியத்தில் தமிழகச் சட்டப் பேரவைக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதன்பொருட்டு, 1922-ஆம் ஆண்டு தொழில்களுக்கு அரசாங்க உதவி அளிப்பது குறித்த சட்டத்தின் (தமிழகச் சட்டம் 5/1923) 3(1) (b) பிரிவை ஒட்டியும், 1956-ஆம் ஆண்டு தமிழக சிறு ரகத் தொழில், குடிசைத் தொழில், கடன் உதவித் தொகை அளிப்பது பற்றிய விதிகளைச் சேர்ந்த XXII (2) விதியையொட்டியும், இப்பேரவை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நிச்சயிக்கக்கூடிய தேதியன்று, இச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட தொழில்கள் வாரியத்திற்கு இரு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதாக"

என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

### 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி:

#### (இ) தொழில்கள் வாரியத்திற்கு (Board of Industries) தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர்** : ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாசாரப் பிரதிநிதித்துவக் கொள்கைக்கு இணங்கவும் தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைமை வகுத்துள்ள விதி முறைகளின்கீழ் தொழில்கள் வாரியத்திற்கு (Board of Industries) தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வேட்பாளர் நியமனப் பத்திரங்களை 1967-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26-ஆம் தேதி திங்கட்கிழமை காலை 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிட மிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 1967-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26-ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 1967-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27-ஆம் தேதி, செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.



நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கை—அதாவது, இரண்டுக்கு—மேற்படுமாயின், 1967-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29-ம் தேதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

### 7. 1967-67-ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத்தலைவர்** : இப்பொழுது வரவு செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம் தொடர்ந்து நடைபெறும். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். எஸ். மணி அவர்கள் இப்பொழுது பேசலாம்.

**திரு. எம். எஸ். மணி** : சட்டமன்றத் தலைவா அவர்களே, முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள 1967–68-வது ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் தம்முடைய நிதிநிலை அறிக்கையில் இன்றைய வரவு செலவினங்களைப்பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வரவு இனத்தைவிட, பழைய கடன்களைப் பார்க்கிறபோது மிகப் பயங்கரமான அளவில் நமக்குக் கடன் ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய மாநில அரசின் மொத்த கடன் 292 கோடியே 85 லட்சம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அதிலே மத்திய அரசு மட்டும் நமக்குக் கொடுத்தது 269.50 லட்சம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும், 26 கோடியே 32 லட்சம் ரூபாயை நாம் சில்லறைக் கடன்களாகப் பெற்றிருக்கிறோம். இந்தக் கடன்கள் எவ்வளவு ஆண்டுகளிலே ஏற்பட்டிருக்கிறதென்பதைப் பார்க்கிறபோது 1950-வது ஆண்டிலேயே நமக்கு ஏற்பட்டிருந்த மொத்தக் கடன் 14 கோடியே 8 லட்சம் ரூபாய் அளவில் இருந்தது. அதிலே மத்திய அரசு நமக்குக் கொடுத்த அளவு 12 கோடியே 3 லட்சம் ரூபாய். அப்படிப்பட்ட கடன் 17 ஆண்டுகளிலே படிப்படியாக வளர்ந்து இன்றைய தினம் 20 கோடியாக உயர்ந்திருக்கிறது. இப்படி வளர்ந்ததற்கான காரணம் என்னவென்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். இவ்வளவு கடன்களையும் அனுபவித்தவர்கள் யார், யார்? இதிலே யார யார் பயன் அடைந்திருக்கிறார்கள் என்று பார்க்கும்போது, பல புதிய இலாகாக்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன, பல அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள், அதன்காரணமாக பல சிப்பந்திகள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள், பல பெரும் காண்ட்ராக்ட்காரர்கள் தங்களுடைய வாழ்க்கையை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு கோடிக்கணக்கான கடன்களினால் பொதுமக்கள் ஏதாவது பலனை அடைந்திருக்கிறார்களா என்று பார்த்தால், அவர்கள் கொஞ்சமும் பலன் அடைந்ததாகத் தெரியவில்லை.

உதாரணமாக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உணவு உற்பத்திக்காக மத்திய அரசாங்கத்திடமிருந்து நம்முடைய மாநில

[திரு. எம். மணி] [1967 ஜூன் 22

சர்க்கார் கடனைப் பெற்ற பெருந்தொகையைச் சரியாகப் பயன் படுத்தாத காரணத்தினால், உணவு உற்பத்தி உயர்வுக்குப் பதிலாக இன்றைய தினம் குறைந்திருக்கிற நிலைமையை முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற நிதிநிலை அறிக்கையிலே காணலாம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத் துவக்கத்தில் உணவு உற்பத்தி யின் அளவு 53 லட்சம் டன் என்று குறிப்பிட்டிருந்தார்கள். திட்ட முடிவிற்குள் 53 லட்சம் டன் என்றிருப்பதை 70 லட்சம் டன் அளவிற்கு—அதாவது 17 லட்சம் டன் உணவுத் தானியம் அதிக மாக உற்பத்தி செய்ய வேண்டுமென்று திட்டமிட்டிருந்தார்கள். ஆனால் திட்ட முடிவில் என்ன கிடைத்தது என்றால் 52.59 லட்சம் டன் அளவே உணவுத் தானியம் கிடைத்திருக்கிறது. ஏற்கனவே இருந்த 53 லட்சம் டன்னிலேயே ஏராளமாகச் செலவு செய்து பின்னரும், உற்பத்தியின் அளவு அரை லட்சம் டன் உற்பத்தி குறைந்திருக்கிறது. இதற்காக ஏராளமான அளவில் கடன்கள் பெற்று செலவிட்டபோதிலும் ஏன் இப்படி குறைந்தது என்பதற் கான காரணத்தை இதுவரையிலே இருந்த பழைய சர்க்கார் விளக்கவும் இல்லை—புள்ளி விவரங்கள் தந்துபோகவும் இல்லை. இதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

'ஜப்பானிகா இண்டிகா' என்ற விதையை நாட்டிலே பரப்பினார் கள். தஞ்சாவூர் மாவட்டத்திலே அதற்கு நல்ல செல்வாக்கு இருந்தது. விவசாயிகள் இந்த விதையின் தன்மையை சரிவர அறிந்துகொள்ளவில்லை. இந்த விதையின் தன்மை என்ன வென்றால், இதற்கு எவ்வளவுக்கெவ்வளவு உரம் அதிகமாகப் போடு கிறோமா அந்த அளவிற்கு நல்ல விளைச்சலைத் தரும். உரம் போடுவது குறைந்தால், அது இயற்கையாகத் தரும் விளைச்சலைவிட குறைவாக விளையும். எனவே, ஏழை விவசாயிகளுக்குச் சரியான அளவில் உரம் தரப்படவில்லை. மேலும், பொறுக்கு விதை என்ற பெயரால் பதர்களை வழங்கியிருக்கிறார்கள். ஏழை விவசாயி களுக்கு வழங்கப்பட்ட விதை பொறுக்கு விதை அல்லவென்று நான் கூறியிருப்பது பழைய சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பிலே காணப்படுகிறது.

அடுத்தபடியாக, கிணறு வெட்டுவதற்கான கடன் என்ற பெயரில் புள்ளிவிவரங்கள் இருக்கிறதே தவிர, அந்தக் கடன்கள் ஒழுங்காகப் போய்ச் சேரவில்லையென்று ஏராளமான புகார்கள் இருக்கின்றன. விவசாயிகளுக்கு இயந்திரக் கலப்பைகள், மற்றும் தளவாடச் சாமான்கள் ஏராளமாகக் கொடுக்கிறோம் என்று சொன் னார்களே தவிர, அவற்றை ஒழுங்காகத் தரவில்லை. மேலும், பம்பு செட் வசதிகள் செய்து தருவதாகச் சில பஞ்சாயத்து யூனியன்கள் கூறி, பம்பு செட்டுகளை இன்னாரிடம் வாங்கினால் தான் 'லோன்' கொடுக்கப்படும் என்ற முறையை வைத்திருந்தார்கள். உற்பத்திக் காக வாங்கிய பணம் ஒழுங்காக உற்பத்தி இனங்களுக்குச் செல விடப்படவில்லையென்ற குற்றச்சாட்டை கடந்த பட்ஜெட் கூட்டத்திலேயே நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஆகவே, இந்த



1967 ஜூன் 22] [திரு. எம். எஸ். மணி]

மாதிரியான நிலைமையெல்லாம் இனி நீடிக்காது என்பதை நம்முடைய முதலமைச்சருடைய அறிக்கையிலிருந்து தெரிந்து கொள்கிறேன்.

இன்றைய தினம் இந்த சர்க்கார் இன்னும் நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்பதற்காக துணிச்சலாகப் பல காரியங்களைச் செய்திருக்கிறது. பஸ் போக்குவரத்தை நாட்டுடைமையாக்க வேண்டுமென்ற கொள்கையை திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய தேர்தல் அறிக்கையாகக் குறிப்பிட்டிருந்தது. எழுபத்தைந்து மைலும் அதற்கு மேலும் உள்ள பஸ்களை அரசாங்க மே எடுத்துக் கொள்வது என்று செய்திருக்கும் முடிவை நான் வர வேற்கிறேன். புதிய ஆட்சி நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடனேயே, பஸ் முதலாளிகளில் சிலர் எங்களைப் பார்த்துக் கேலி செய்தார்கள். 'எப்போது பஸ்களை எல்லாம் எடுத்துக் கொள்ளப் போகிறீர்கள்? எப்போது எங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப் போகிறீர்கள்' என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அத்தனை பேரும் இன்று ஏமாந்து போனார்கள். இப் போதிருக்கிற அனுமதிச் சீட்டு காலக்கெடு முடிந்தவுடன், புதிதாக அரசாங்கம் பஸ் விடும் என்று சொல்லியிருக்கிறோமே தவிர, அவர் களுடைய பஸ்களை எடுத்துக் கொள்வோம் என்று சொல்லவில்லை. பழைய பஸ்களுக்குச் சரியான விலை கிடைக்காமல் அந்த நிலைமை யிலே அவர்கள் விட்டுப் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். ஆனால் அந்த முதலாளிகள் அந்த பஸ்களின் மூலமாக ஏராளமான லாபத்தைச் சம்பாதித்திருக்கிறார்கள். இதற்கான புள்ளி விவரங் கள் இருக்கின்றன. அன்றைய தினம், அரசாங்கம் எடுக்கிற பஸ் களிலே எல்லாம் நஷ்டக் கணக்கைக் காட்டினார்கள். அதற்கான காரணத்தை நான் குறிப்பிட்டிருக்கிறேன். அரசாங்கமே பஸ் களுக்கு நல்ல பாடி கட்டுவதற்குப் பதிலாக எங்கோ இருக்கின்ற சிம்சன் கம்பெனி பாடி கட்டுவதற்கு ஆர்டர் கொடுத்து அதற் கென கோடிக் கணக்கான ரூபாயைச் செலவழித்திருக்கிறார்கள். இன்றைய தினம் நாமே பஸ் விடுகிறோம் என்று சொல்கின்ற வகை யில் மூலதனச் செலவுக்காக 2½ கோடி ரூபாயை அதற்கென ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். இன்றைய தினம் நல்ல ரூட்களிலே பல லாரிகள் நல்லதனமாக ஓடி நல்ல லாபத்தைச் சம்பாதித்து வருகின்றன. ஆகவே, லாரி போக்குவரத்தையும் மிக விரைவிலே அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமாத்திரமல்ல. நம்முடைய பஸ் போக்குவரத்து என்ற உணர்ச்சியே இப்பொழுதுதான் தோன்ற ஆரம்பித்திருக்கிறது. இப்போது நம்முடைய பஸ்களில் எல்லாம் "தமிழக அரசு போக்குவரத்து" என்று அழகான தமிழில் எழுதியிருக்கிறார்கள். இந்த உணர்ச்சி கடந்த அன்றைய தினம் இல்லை. கடந்த காலத்தில் இருந்த ஆட்சி அதற்கு ஆதரவு கொடுக்கவில்லை. நாம் இன்றைய தினம் நம்முடைய பஸ்களில் "தமிழக அரசு போக்குவரத்து" என்று தமிழில் எழுத ஆரம் பித்த பிறகுதான் மல்லி பரிகன் தான் நடத்தும் பஸ்களின்

பெயரை ஹிந்தியில் எழுதியிருக்கிறது. மேலும் நம்முடைய போக்குவரத்து அமைச்சர் அவர்கள், "எல்லா பஸ்களிலும் திருவள்ளுவர் படத்தை மாட்டப் போகிறேன். ஒவ்வொரு பஸ்ஸிலும் திருக்குறள் எழுதி, அதற்கு விளக்கம் கேட்டால், சொல்வதற்கு அந்தத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப் போகிறேன்" என்று கூறியிருக்கிறார்கள். இதுதான் உண்மையான தொழில் அரசு. நான் எற்கெனவே சட்ட மன்றத்தில் பஸ் போக்குவரத்துத் தொழிலாளர்களின் குறைகளைப்பற்றிப் பேசியதை, திருச்சிக்கு வந்திருந்த கடந்த கால அமைச்சரிடம் அன்றைய தினம் எடுத்துக் கூறியபோது அவர் ஒரு கோரிக்கையைக்கூட ஏற்றுக் கொள்ளவில்லை. குறிப்பாக அந்தத் தொழிலாளர்கள் ஓய்வு எடுத்துக் கொள்கின்ற நேரத்தில் கொசு அதிகமாகக் கடிப்பதால் கொசு வலை வேண்டுமென்றுதான் கேட்டார்கள். அதை அன்றைய அமைச்சர் மறுத்துவிட்டார். ஆனால் இன்றைய தினம் போக்குவரத்து அமைச்சராக இருப்பவரிடம் தொழிலாளர்கள் இந்தக் குறைகளை எடுத்துச் சொன்ன நேரத்தில், "உங்களுக்குக் கொசுவலைதானே வேண்டும் வாங்கித் தருகிறேன்" என்று சொன்னார். அது மட்டுமல்ல, நீங்கள் எல்லாம் காலையில் 5 மணிக்கு எழுந்து கொள்ள அலாரம் அடிக்கும் ஒரு டைம் பீஸும் வாங்கித் தருகிறேன். காலை 5 மணிக்கு நீங்கள் தூங்கிவிடுவீர்கள் உங்களைத் தூக்கத்திலிருந்து எழுப்பி பஸ்ஸை ஓட்ட அவசியம் அலாரம் கடியாரம் தேவை என்று சொல்லி, வாங்கிக் கொடுக்கிறேன்—இலவசமாகக் கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்கிற காரணத்தினால் சோர்வாக வேலை செய்த தொழிலாளர்கள் இன்றைய தினம் நல்ல தெம்போடு வேலை செய்கிறார்கள். ஆகவே இன்றைய தினம் பஸ்களின் மூலம் நல்ல வருமானம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதைப்போலவே கட்டணக் குறைப்பு காரணமாக தனியார் பஸ்களுக்கு முன்னால் அரசாங்க பஸ்கள் செல்கிற காரணத்தினால் நல்ல வருமானத்தைப் பெற முடிகிறது. அப்படிக் கிடைக்கிற வருமானத்தில் செலவு போக மீதியாகக் கிடைக்கிற நிதியையும் பொது நிதியோடு சேர்த்துக் கொள்ள ஒரு சந்தர்ப்பம் இன்றைய தினம் கிடைக்கிறது.

மு.ப. 10-30 (மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் தலைமை)

அதுபோன்று மின் சக்தி வழங்கும் திட்டத்தையும் நாம் அரசாங்கம் மாநிலம் பூராவிலும் எடுத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக, கும்பகோணம் மின்சார வழங்கும் உரிமம், நாகைப்பட்டினம் மின்சார வழங்கு உரிமம், மாயவரம்-மன்னார்குடி-திருவாரூர் மின்சார வழங்கு உரிமம் ஆகியவைகளை இந்த அரசு எடுத்துக் கொள்ள முடிவு செய்திருக்கிறது. அதைத் தவிர மின்றி அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் ஏனென்றால் காரணம் நீர்ப்பாசனத்திற்கு மின்சாரம் மிகமிகத் தேவை. தனியார் உரிமக்திடம் மின்சாரம் தேவை என்று வேண்டுகோள் கொடுக்கிறபோது





அவர்களுக்கு லாபம் இருக்குமென்றால்தான் அனுமதி கொடுக்கிறார்களே தவிர லாபம் இல்லை என்று சொன்னால் அந்தத் திட்டத்திற்கு அனுமதி கொடுப்பதில்லை. ஆகவே, பலவிடங்களில் இன்றைய தினம் உணவு உற்பத்தி மிக பாதிக்கப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்ல. அரசாங்கத்திடமே மின்சாரத்தை வாங்கி அதிகக் கட்டணத்திற்கு விற்பதைப் பார்க்கிறோம். திருச்சியை எடுத்துக் கொண்டால் ஹெவி எலெக்ட்ரிகல்ஸுக்கு யூனிட் 15 பைசாவுக்குக் கொடுக்கிறார்கள். அதற்கு எதிர் வரிசையில் உள்ள தனியார் வீடுகளுக்கு யூனிட் 30 பைசா என்று கொடுக்கிறார்கள். இப்படி ஒரே ஊரில் இரண்டுவித முறைகள் இருக்கின்றன. சர்வீஸ் கொடுப்பதிலும் டிலே எற்படுகிறது. இந்த நிலையை மாற்றுவதோடு மாத்திரம் அல்ல, மின்சார உரிமங்களை மேற்கொள்ளுகிறபோது அங்கே வேலை செய்கின்ற தொழிலாளர்களுடைய சர்வீஸ் பாதிக்கப்படாத வாறு இந்த அரசாங்கம் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் முதல் அமைச்சர் அவர்கள் தனது நிதிநிலை அறிக்கையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆயிரம் பேர் கொண்ட சேனிப் படை தேவை என்பதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் இதைப் பார்த்தவுடனேயே இன்றைய தினம் எதிர்க் கட்சித் தலைவர் சொன்னார், சேனிப் படையா, செங்காவல் படையா என்று கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தம் அறிக்கையிலேயே "எந்த விதமான ஊதியமும் பெறாமல், அரசிடமிருந்து தேவையான கருவிகள், செயல் படுமுறைகள் ஆகியவற்றினை மட்டும் பெற்று ஏரிகுளங்களைச் செப்பனிடுதல், பாதைகளைச் சீர் செய்தல், தரிசுகளை விளைநிலமாக்கிட வழிகாணல், முதியோர் கல்வி போன்ற தொண்டுகளில் தமது ஓய்வு நேரத்தை ஈடுபடுத்தும். இதைச் செய்வதற்கு நல்ல தொண்டார்வம் உள்ள இளைஞர்கள் மாவட்டத்திற்கு ஆயிரம் பேர் தேவை என்று சொன்னால் இந்த ஆயிரம் பேரையும் செங்காவல் படை என்று சொல்வதா? சோஷல் சர்வீஸ் என்ற பெயரிலே மாதத்திற்கு ஒரு நாள் சேரிக்குச் சென்று பத்துப் பேர் காங்கிரஸ் ஆட்சியிலும் வேலை செய்தார்கள். அப்படியின்றி இதை நல்ல சேனிப் படையாக அமைத்து நாட்டுக்கு நல்ல பலன் தரத்தக்க காரியங்களைச் செய்ய வேண்டும் என்று முயற்சிக்கிறபோது இதற்கு நல்ல ஊக்கமும், ஒத்துழைப்பும் தரவேண்டியது நம் கடமையாகும். அதோடு இந்தச் சேனிப் படையினால் மக்களுக்கும், நிர்வாகத்திற்கும் நல்ல தொடர்பு எற்படவும் சந்தர்ப்பம் இருக்கிறது. அதுமட்டுமல்ல, சமீபத்தில் சிறைச்சாலை அமைச்சர் சிறைச்சாலையைப் பார்வையிடச் சென்ற போது அங்கிருந்த கைதிகள் அமைச்சரிடமே தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். "வேண்டுமென்றே நாங்கள் குற்றம் இழைக்கவில்லை. சந்தர்ப்பவசத்தினால் குற்றவாளியாக்கப்பட்ட பலர் இருக்கிறோம். எங்களை இது போன்ற பணிகளில் ஈடுபடச் செய்யுங்கள். வெளி ஆட்களுக்கு 2½ ரூபாய் கூலி கொடுத்தால்

எங்களுக்கு ½ ரூபாய் கொடுங்கள். பத்தாண்டு சிறை வாசம் என்பதை நாங்கள் நேர்மையுடன் நடந்து கொள்கிறபோது எட்டாண்டாகக் குறைத்து விடுதலை அளிப்பதுடன், வெளியே போகும்போது எங்கள் உழைப்புக்கு ஊதியமாகச் சேருகிற தொகையையும் கொடுத்து அனுப்புங்கள்" என்று கேட்டிருக்கிறார்கள். இப்படித் திருந்திய மனம் படைத்தவர்கள் கேட்கிற கோரிக்கையையும் அரசாங்கம் பரிசீலனை செய்யலாம்.

அடுத்து, தேர்தல் நேரத்தில் நாங்கள் சொன்ன கோரிக்கைகளை ஏன் நிறைவேற்றவில்லை என்று கேட்கிறார்கள். அவர்கள் சொல்லிச் செய்யாத காரியங்கள் பலவற்றை பதிலுக்கு நாங்களும் எடுத்துச் சொல்லமுடியும் என்றாலும் அப்படிச் சொல்ல விரும்பவில்லை. சுதந்திரம் பெற்ற உடனே காங்கிரஸ்காரர்கள் நாட்டிலே தேனாறு ஓடச் செய்வதாகச் சொன்னார்கள். பாலாறு ஓடச் செய்வதாகச் சொன்னார்கள். தேனாறு எங்கே ஓடுகிறது, பாலாறு எங்கே ஓடுகிறது என்று நாங்கள் கேட்கவில்லை. எங்களுக்கு விவரம் தெரியும் என்ற காரணத்தினால். அதுமட்டுமல்ல. காங்கிரஸ் கட்சியினர் பதவிக்கு வந்தால் எந்த காங்கிரஸ் கட்சி மந்திரியும் 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கமாட்டார்கள் என்பதாகக் காந்தியார் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்கள்தான் அந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்களே தவிர காங்கிரஸ்காரர்கள் இதுவரை அப்படிச் செய்யக் காணோம். அதோடுகூட முதல் அமைச்சர் அவர்களை பத்திரிகை நிருபர்கள் சந்தித்து முதல் தேதி அன்று சம்பளம் வாங்கவில்லையா என்று கேட்ட நேரத்தில் "என்றைக்கு ஒன்றாந்தேதி சம்பளம் வாங்கியிருக்கிறோம், நாங்கள்" என்று சொன்னார் என்றால் அதைப் படித்தவர்கள் கண்ணீர் விடுகிறார்கள். காந்தியாரையும்விட மேலே போய்விட்டாரே என்று பாராட்டுகிறார்கள். சீனாக்காரன் இந்தியாவின்மீது படையெடுத்தபோது மராமத்து இலாக்கா அமைச்சரகத்தில் எதிர்க்கட்சியில் இருந்த நாங்கள்தான் ஒரு நாள் சம்பளத்தை தேசப் பாதுகாப்பு நிதிக்கு வழங்க முன்வந்தோம். எங்களைப் பார்த்த பிறகு தான் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் முன்வந்தார்கள். அவர்களிலும் இரண்டு பேர்கள் கொடுக்கவில்லை. சீன அபாயம் வருகிறது என்றவுடனே எதிர்க் கட்சியில் இருந்து நாங்கள் ஒரு நாள் சம்பளத்தைக் கொடுத்து வழிகாட்டினோம். இன்றைக்கு சென்னையில், கோவையில் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுகிறோம் என்றால் எங்கே எல்லா இடங்களிலும் போடுகிறீர்கள் என்று கேட்கிறார்கள். படிப் படியாகத்தானே எல்லா இடங்களிலும் போட முடியும். ரூபாய்க்கு 3 படி போடுகிறேன் என்றீர்களே என்று கேட்கிறார்கள். மூன்று படி போட வேண்டும் என்பது லட்சியம். ரூபாய்க்கு 5 படி கூடப் போட வேண்டும் என்று நாங்கள் ஆசைப்படுகிறோம். இப்படி மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகிற மனப் பான்மைகூட அவர்களிடத்தில் ஏற்படவில்லையே. புதிதாக மணமானவர்களைப் பார்த்து, "நீங்கள் நோய்நொடியின்றி வாழ வேண்டும்" என்று வாழ்த்தினால் நோயுடைய மணமகளைப் பார்த்து



இப்படி வாழ்த்துகிறீர்களே என்று கேட்பதுபோல உள்ளது. வாழ்த்தக் கூடாதா? ஆசைப்படக் கூடாதா? இதுதான் லட்சியம் என்று வரையறை செய்துகொள்ளக் கூடாதா? எங்களுடைய லட்சியத்தைப் பெற நாங்கள் தீவிரமாக முயற்சி செய்வோம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்படிக் கேட்கிறவர்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒரு படி என்று போடுவதால் பத்துக் கோடி நஷ்டம் ஏற்படும் என்று சொல்கிறார்கள். கூட ஐந்து கோடி ஆனாலும் மற்ற செலவுகளைக் குறைத்துக் கொள்ளலாம் என்பதாக முதல் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நான் சொல்கிறேன், காஷ்மீர் இந்தியாவுடன் சேர வேண்டும் என்பதற்காக இந்திய சர்க்கார் அமெரிக்காவில் இருந்து கோதுமை வாங்கி பாதிவிலையில் காஷ்மீரில் விற்கிறது. இதனால் கோடிக் கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. எதற்காகப் பாதிவிலையில் விற்கிறோம்? காஷ்மீர் மக்களின் அன்பைப் பெறுவதற்காகத்தான். அபிலாஷையைப் பூர்த்தி செய்வதற்காகத்தான். மேலும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். திருச்சியில் உள்ள சர்க்கரை ஆலையை எடுத்துக் கொண்டால் பட்டவாய்த் தலையில் பாரி கம்பெனியின் சர்க்கரை மூட்டை விலை 154 ரூபாயாகிறது. வெள்ளைக்காரன் கம்பெனி. கம்பெனி விலை மூட்டைக்கு 154 என்று அங்கே கொடுத்து அங்கிருந்து திருச்சி ஜங்ஷன் கொண்டு வர லாரி சார்ஜ் கொடுத்து, அங்கிருந்து பம்பாய் கொண்டு போக கூட்ஸ் சார்ஜ் கட்டி—160 ரூபாய்க்கு மேல் போகிற அடக்கவிலையை அதற்கு மேல் விலை வைத்து விற்றால் லாபம். பம்பாய்த் துறைமுகத்திலிருந்து அமெரிக்காவிற்குக் கப்பல் மூலமாகப் போகிறது. கப்பல் வாடகை வேறு கொடுக்க வேண்டியிருக்கிறது. நூற்று ஐம்பத்தினாலு ரூபாய் கொடுத்து ஒரு மூட்டை சர்க்கரை வாங்கி அதற்கு லாரி வாடகை கொடுத்து, கூட்ஸ் வாடகை கொடுத்து கப்பல் வாடகை கொடுத்து அமெரிக்கவிலே அதை 160 ரூபாய்க்கு விற்றால் நஷ்டம் ஏற்படாது லாபம் கிடைக்கும். ஆனால் அமெரிக்காவில் என்ன விலைக்கு விற்கிறார்கள்? பாதி விலைக்குத்தான் விற்கிறார்கள். இதனால் எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறது? அரசாங்கம் இப்படி வியாபாரம் செய்வதினால் அரசாங்கத்திற்கு கோடிக்கணக்கான ரூபாய்கள் நஷ்டம் ஏற்படுகிறது. கேட்டால் அன்னியச் செலாவணி என்று செல்வார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் ஒரு படி அரிசி போடுவதற்கு ஏன் உதவி செய்யக் கூடாது என்று அவர்கள் நினைப்பதில்லை. நாட்டு மக்களுக்காக திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் பல நல்ல காரியங்களைச் செய்ய முன்வந்து கொண்டிருக்கிறது. மக்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். இன்னொன்றும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நாட்டுச்சர்க்கரை அதிகமாக பம்பாய்க்குச் சாராயம் காய்ச்சுவதற்காக அனுப்பப்படுகிறது. அங்கே நாட்டுச் சர்க்கரை மூட்டை ரூபாய் 110 என்ற விலை அளவுக்கு விற்கிறது. பம்பாய்க்கு ஏற்றுமதி அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே அங்கே எல்லோரும் கரும்பு பயிரிடுகிறார்கள். அங்கே இருக்கிற முதலாளிகள் ஏக்கருக்கு 500, 1000 என்ற

அளவுக்கு இப்பொழுதே அதற்காக முன்பணம் கொடுக்க ஆரம்பிக்கிறார்கள். எனவே நாட்டுச் சர்க்கரை பம்பாய்க்கு ஏற்றுமதியாவதைத் தடைசெய்தால்தான் உணவு உற்பத்திக்கு அது பயன் தரும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உணவு உற்பத்தி செய்கின்ற நல்ல நிலங்களிலே நஞ்சை நிலங்களிலே எல்லாம் ஹவுஸிங் ஸ்கீம், அதாவது வீடு கட்டும் திட்டம் என்ற பெயரிலே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாழடிக்கப்படுகின்றன. வீடு கட்டுவது என்று சொன்னால் புறம்போக்கு இடங்களிலோ அல்லது நகரத்திற்கு வெளியிலே உள்ள நிலங்களிலேதான் கட்டவேண்டும், விளைச்சல் கொடுக்கக் கூடிய நிலங்களில் கட்டக்கூடாது என்று சொல்லவேண்டும்.

அடுத்ததாக, நமது மராமத்து துறை அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல திட்டத்தைச் சொன்னார்கள், அது நிதி நிலை அறிக்கையிலே கூட வந்திருக்கிறது. கூவம் ஆற்றைப்பற்றியது. முன்னாலே இந்த மன்றத்திலே இருந்த ஒரு அம்மையார் அவர்கள் பேசுகின்ற பொழுது எல்லாம், கூவம் நாறுகிறது, கூவம் நாறுகிறது என்று சொல்லிக் கொண்டே இருந்தார்கள். அது நமக்கெல்லாம் தெரிந்ததுதான். பழைய ஆட்சியிலேதான் அது நாறிக்கொண்டிருந்தது. அதைப் போக்குவதற்காக இன்றைய தினம் நம்முடைய புதிய அரசாங்கம் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய்ச் செலவிலே ஒரு திட்டம் செய்துள்ளது. அதை நல்ல முறையில் வர்த்தகத்திற்குப் பயன்படுத்தலாம், கரையோரமாக இருக்கின்ற இடத்தை, பெரிய வியாபாரிகள் கோடவுன்கள் கட்டுவதற்கு இடம் இல்லாமல் இருக்கிறார்கள், அவர்கள் எல்லாம் கோடவுன்கள் கட்டுகின்ற முறையிலே, கோடவுன்கள் கட்டி அவற்றை வியாபாரிகளுக்கு வாடகைக்கு விடலாம் அல்லது விற்பனை செய்தால்கூட கோடிக்கணக்கான ரூபாய் வரும். அந்தத் தொகையை வைத்து ஆகின்ற செலவைச் சரிக்கட்டி விடலாம். அந்த நிலங்களை வாங்குவதற்கு ஏராளமான பேர்கள் தயாராக இருக்கிறார்கள். அங்கே இப்பொழுது வசிக்கின்ற ஏழைகள், குடிசைகளில் இருப்போர் இவர்களுக்கு நஷ்ட ஈடு பணம் கொடுப்பதற்குக்கூட வாங்குபவர்கள் தயாராக இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் வேறு ஒரு நல்ல பகுதிக்கு மாற்றி அவர்களை நல்ல வீடுகளில் குடியேற்றிவிடுவதற்காக, அவர்களுக்கு 500, 1000 என்று மானியங்கள் கொடுத்துவிட்டு கரையோரமாக இருக்கிற பகுதிகளை கோடவுன்கள் கட்டுவதற்கு வியாபாரிகளுக்குக் கொடுத்துவிட்டால் வசதியாக இருக்கும். இதனால் ஏராளமான பொருள் ஈட்டலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சேலம் இரும்புத் தொழிற்சாலையைப்பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தீவிரமாகவே சொல்லியிருக்கிறார்கள், அதற்காகப் போராட்டம் ஏற்படலாம், பதவித் துறப்பு ஏற்படலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதைத்தான் அப்பொழுது எதிர்க்கட்சியிலிருந்த நாங்கள் சொன்னோம், 'உங்களுக்கு ஆதர



Y211, 31 N67 N67.2.



வாக இருக்கிறோம், நீங்கள் மத்திய சர்க்காரை [illegible] கேளுங்கள்' என்று சொன்னோம். அப்[illegible] சர்க்காரைத் தட்டிக்கேட்க அவர்களுக்கு [illegible]னமில்லை. எ[illegible] தான் மக்கள் அவர்களை விட்டுக்கு[illegible] அ[illegible]ர்கள். இப்பொழுது அதைத் தட்டிக்கேட்கின்ற [illegible] துணிச்சலான அரசாங்கம் வந்து இருக்கிறது, அதை [illegible]னதில் கொண்டு நீங்கள் எல்லாம் ஆதரவு கொடுக்க வேண்டும், [illegible]ரும்பாலை வரவேண்டும், அப்படி வந்தால் ஏராளமான பேர்களுக்கு [illegible] கிடைக்கும் என்[illegible] எண்ணத்தோடு நீங்கள் இப்பொழுது இ[illegible] அரசாங்கத்தி[illegible] ஒத்துழைப்புத் தருவீர்கள் என்று நினைக்கிறேன். [illegible] தராவிட்டால் நாட்டு மக்கள் உங்களுக்கு தீர்[illegible] [illegible] இருக்கிறார்கள். எனவே அதை நினைத்து நீங்கள் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, மதுவிலக்கைப்பற்றிக் கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்ள விரும்புகிறேன். மற்ற மாநிலங்களைவிட தமிழகத்தில்தான் மதுவிலக்கு நல்ல முறையிலே அமல் நடத்தப்படுகிறது. இதைப்பற்றி இப்பொழுது யார் அதிகமாகப் பேசுகிறார்கள் என்றால், காங்கிரஸ்காரர்கள்தான். காங்கிரஸ்காரர்கள் பாமர மக்களிடம் போய் அவர்களே வந்தார்களே, கள்ளுக்கடை கொண்டு வருவார்களா என்று கேட்கிறார்கள். இப்படி அவர்கள் கேட்கின்ற காரணத்தினாலே திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் மதுக் கடைகளைக்கொண்டு வந்துவிடும், அப்படிக் கொண்டு வந்தால், காங்கிரஸ்காரர்கள் மறியல் செய்யலாம், மறியல் செய்து மூன்று மாதம் சிறையில் இருந்துவிட்டு தியாகிகளாகத் திரும்பி வந்துவிடலாம், அதன் மூலம் ஆட்சியைக் கைப்பற்றிவிடலாம் என்ற கருத்துடன்தான் அவர்கள் மதுக்கடைகள் வரும், மதுக்கடைகள் வரும் என்று பாமர மக்களிடத்திலே பேசி அவர்களைத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தியா முழுவதும் ஒன்று என்று சொல்கிறார்கள், அப்படிச் சொல்கின்றவர்கள் நாடு முழுவதற்குமாக ஏன் ஒரு பொதுச் சட்டத்தை இது சம்பந்தமாக கொண்டுவரக் கூடாது. பெங்களூரில் குடிக்கிறார்கள், பாண்டிச்சேரியில் குடிக்கிறார்கள், இப்படியில்லாமல் இந்தியா முழுவதற்கும் ஏன் பொது விதியைக் கொண்டு வரக்கூடாது? அவர்கள் செய்யத் தவறியதை இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகம் செய்துகொண்டிருக்கிறது. நான் அதற்காக அரசாங்கத்தைப் பாராட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த நிதி நிலை அறிக்கையைப் பாராட்டி, அது பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு சாசனம் என்பதையும் கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்:** உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். பேச வேண்டியவர்களுடைய பட்டியல் மிக நீளமாக இருக்கிறது. உறுப்பினர்

ஒவ்வொருவரும் 15 நிமிடங்களுக்கு மேல் பேசாமல், அந்தக் கால அளவோடு அவர்களுடைய பேச்சை முடித்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, நமது மாநில முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள நிதிநிலை அறிக்கையைப் பற்றி ஆதரித்துப் பேச வேண்டுமென்று நினைத்தேன். ஆனால் நாட்டுக்கு எந்தவிதமான உருப்படியான திட்டமும் அதில் இல்லாத காரணத்தாலே நான் அதை எதிர்த்துப் பேச வேண்டிய நிலை இருப்பதைக் கண்டு உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திற்கென்று ஒரு நல்ல திட்டம் இல்லை என்பதையும் நான் உண்மையிலேயே வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் பகுதியிலே இருந்து ஏழு அங்கத்தினர்கள் ஜெயித்து இங்கே வந்தார்கள். அதில் ஒருவர் தான் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர், உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் நிறைய பேர்கள் ஜெயித்து வரவில்லை என்ற காரணத்தாலே அதன் காரணகாரியத்தினால்தானோ என்னவோ அங்கே காரியங்கள் செய்யவில்லை என்ற சந்தேகம்தான் எனக்கு வருகிறது.

தற்பொழுது எங்கள் ஊரிலே இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் இருக்கிறது. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் ஆறு யூனிட்டுகள் கட்டியாகி விட்டது. அதற்காக மொத்தம் செலவு ஏழு லட்சத்து 11 ஆயிரம் ரூபாய் ஆகியிருக்கிறது. ஆனால் பாதி வேலைகள் முடிவதற்கு முன்னே நமது அறிஞர் அவர்களுடைய தலைமையில் இருக்கும் இந்த ஆட்சி வந்தவுடனே அந்த ஆறு யூனிட்டுகளையும் கட்ட வேண்டாமென்று ஆர்டர் பிறப்பித்து இருக்கிறது என்பதை அறிந்து உண்மையிலேயே நான் துக்கப்படுகிறேன்.

ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடும் திட்டத்தை உண்மையிலேயே நான் வரவேற்கிறேன். நன்மையான காரியத்தைச் செய்வது எந்தக் கட்சியாக இருந்தாலும், யாராக இருந்தாலும் வரவேற்கிறோம் . . .

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இண்டஸ்ட்ரியல் யூனிட் கட்டுவதை நிறுத்த வேண்டுமென்று யாரும், எந்த உத்திரவும் போடவில்லை.

**திரு. ஏ. சிதம்பரநாத நாடார் :** ரொம்ப சந்தோஷம். கோவை மாவட்டத்திலும், சென்னை நகரிலும் மாத்திரம் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டு விட்டு, மற்ற மாவட்டங்களை விட்டு விட்ட காரணத்தால் புத்தியுள்ள மக்கள் உங்களைப் பற்றி நல்ல முறையில் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கூற விரும்புகிறேன்.

கருணாநிதி அழகாகப் பேசுகிறார். பார்ப்பதற்கு அழகாக இருக்கிறார். அவர் பேச்சில் மயங்காதவர்கள் இருக்க முடியாது. காங்கிரஸ்காரர்களை ஏமாற்ற வேண்டுமென்ற திட்டம் போட்டுக் கொண்டு நடந்தால் அது நடக்காது என்பதை அறிவிக்கத்தான்



இதைச் சொல்ல வந்தேன். ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தை எல்லா இடங்களுக்கும் கொண்டு வந்தால் உண்மையிலேயே அதை வரவேற்க முடியும்.

உணவுப் பொருள்களின் விலையேறி விட்டது என்பதற்காக அறிஞர் அண்ணாதுரை அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நேரத்தில் ஒரு போராட்டத்தை நடத்தினார்கள் என்பதை மக்கள் அனைவரும் அறிவார்கள். அப்போது போராட்டத்தை நடத்திய நீங்கள் இப்போது அந்த உணவுப் பொருள்களின் விலைகளை எந்தக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறீர்கள்? எதிர் கட்சியாக இருந்தபோது நாட்டிலுள்ள மக்களைக் கவர்ச்சி செய்ய வேண்டுமென்ற கள்ள எண்ணத்தோடு போராட்டத்தை நடத்தினார்கள். ஆனால் இப்போது எங்கள் ஊரில் குளச்சல் பகுதியில் ஒரு பக்கா அரிசி 2½ ரூபாய் விற்கிறது; கல்குளம் தாலுகாவில் 3 ரூபாய் விற்கிறது, விளவங்கோடு பகுதியில் 5 ரூபாய் விற்கிறது.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். 'கள்ள எண்ணத்தில்' என்று சொல்லலாமா?

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** 'கள்ள எண்ணத்தோடு' என்பதைத் தவறான வார்த்தையாகக் கொள்ள முடியாது, ஏற்றுக் கொள்ளலாம்.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** நான் மணிப்பிரவாள நடையில் பேசுகிறவன். தமிழ் வரும், மலையாளம் வரும், எல்லாம் வரும். 'கள்ள எண்ணம்' என்று சொன்னது தவறு என்று தலைவர் கூறினால் பின் வாங்கத் தயாராக இருக்கிறேன்.

எழுபத்தி ஐந்து பக்கா கொண்ட ஒரு கோட்டை நெல் 85 ரூபாய் விற்கிறது. ஒரு படி உளுந்து 3-75-க்கு விற்கிறது. ஒரு கிலோ புளி ரூ. 1-90; ஒரு படி பருப்பு ரூ. 3-25, ஒரு கிலோ கடலைப் பிண்ணாக்கு ரூ. 1-85; பட்டணம் படி எண்ணெய் ரூ. 10 இவ்வாறு விலை விஷம் ஏறுவது போல ஏறிக் கொண்டே இருக்கிறது. நீண்ட காலமாக எதிர்க்கட்சியாக இருந்து போராட்டம் நடத்தியவர்கள் இன்று இதைப் பற்றி உதாசீனமாக இருப்பதன் மர்மம் புரியவில்லை.

தி.மு.க. ஆட்சி வந்தவுடன் நாட்டில் தேனும் பாலும் ஓடுமென்று கன்னித் தமிழை வளர்க்கும் கருணாநிதி அவர்கள் பேசினார்கள். அப்படி ஓடினால் வரவேற்கலாம். ஆனால் உங்கள் ஆட்சியில் அராஜகம் நடக்கிறது என்று சொன்னால், முழுக்க முழுக்க உண்மை என்று ஒத்துக் கொள்ளாமல் இருக்க முடியாது. ஸ்ரீமதி சரஸ்வதி பாண்டுரங்கத்தின் தோட்டத்தில், நம்மைப் போன்று, உங்களைப் போன்று தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி அந்தத் தோட்டத்திலே அநியாயமாக நுழைந்து வாழை மரங்களை வெட்டி-

அழித்ததை முதலமைச்சர் அவர்களிடம் அம்மையார் அவர்கள் பல சந்தர்ப்பத்தில் சொல்லியும் பயன்படாமல் போயிற்று. இது தான் இம் மாநிலத்தில் இப்போது நடக்கும் ஆட்சி.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்தத் தோட்டத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற பிரதிநிதி தலைமையில் கலவரம் நடந்ததாக உறுப்பினர் சொல்லுகிறார். முதலிலே காங்கிரஸ் தலைவர்களாலே அவ்வாறு சொல்லப்பட்டு, பிறகு இல்லையென்று சர்க்கார் தரப்பிலே மறுக்கப்பட்ட பிறகு, அவர்களே (காங்கிரசாரே) அவ்வாறு சட்ட மன்ற பிரதிநிதியின் தலைமையில் நடைபெறவில்லை என்பதை ஏற்றுக் கொண்ட பிறகு, தவறான தகவலை வைத்துக் கொண்டு இந்தச் சபையில் பேசுவது நல்லதல்ல.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** அப்படியானால் சரி, அமைச்சர்கள் சுற்றுப் பயணம் செய்யும்போது அமைச்சர் கருணாநிதி ஏதேதோ பேசுகிறார். அமைச்சர் சத்தியவாணிமுத்து அம்மையார் பேசுவதற்கும், அவருடைய இலாகாவுக்கும் எந்த விதமான சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. இப்படியெல்லாம் பொறுப்பற்ற முறையில் அமைச்சர்கள் பேசலாமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நான் இதுவரை எனது இலாகா சம்பந்தப்பட்ட விஷயங்களைப்பற்றித் தான் பேசியிருக்கிறேனே தவிர மற்றவற்றைப்பற்றிப் பேசவில்லை. அப்படிப் பேசியிருந்தாலும் அது கூட்டுப் பொறுப்பு என்ற காரணத்தால் தவறில்லை.

**திரு. வி. எஸ். கோவிந்தராசன் :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போது உறுப்பினர் நின்று கொண்டே இருப்பது சரியா?

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** திரு. சிதம்பரநாத நாடார் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** அண்மையில் எங்கள் மாவட்டத்திற்குக் கன்னித் தமிழ் வளர்க்கும் கருணாநிதி அவர்கள் வந்திருந்தார்கள், ஒரு மண்டியைத் திறக்க, எங்கள் பகுதியில் 'டெப்போ' வை மண்டி என்று கூறுவார்கள். அவர் பேசினார்— இன்றைக்கு டிரான்ஸ்போர்ட் கண்டக்டர்களாக வர ஆசைப்படுபவர்கள் குறைந்தது 100 குறள்களாவது படிக்க வேண்டுமென்றார். அந்தக் கண்டக்டர்கள் விசில் அடிப்பார்களா, செக்கிங் இன்ஸ்பெக்டர் வந்து விடுவாரே என்று கணக்கை நேர் செய்வார்களா? அவர்கள் எதைச் செய்வது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் பேசியது கண்டக்டர்களும் குறளைப் புரிந்து கொள்ள ஆசைப்படுவார்கள் என்பதுதான். குறள் படித்தால்தான் கண்டக்டர் வேலை என்று சொல்லவில்லை.



அப்படிப்பட்ட தவறான செய்தி காங்கிரஸ் பத்திரிகையில் வந்திருக்கிறதே தவிர வேறு எந்தப் பத்திரிகையிலும் வரவில்லை.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** வேலைக்கு வர வேண்டுமென ஆசைப்படும் ஆசிரியர்கள் குறைந்தது 100 குறள் படித்திருக்க வேண்டுமென்று சொன்னால் வரவேற்கலாம். கண்டக்டர்கள் குறள் படிக்க வேண்டுமென்றால்—இவன் விசில் அடிப்பானா, வண்டியை நிறுத்துவானா என்ன பண்ணுவான் என்று புரியவில்லை.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நம் அங்கத்தினர் சொல்லிக் கொண்டு வருகிற பட்டியலில் 'வேர்வையைத் துடைப்பானா? காற்று வர சட்டையைக் கழட்டுவானா? போடுவானா?' என்றும் சேர்த்துக் கொள்ளலாம். (ஆரவாரம்).

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** நான் சொன்னது . . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** 100 குறள் படித்தால்தான் வேலை தரப்படும் என்று சர்க்காரிடத்தில் இருந்து உத்தரவேதும் இல்லாத நிலையில், அவ்வாறு பேசவில்லை என்று அமைச்சரே மறுத்த பிறகும், 'அப்படிச் செய்திருந்தால் . . . இப்படிச் செய்திருந்தால்' என்று பேசிக் கொண்டிருப்பது இந்தச் சட்ட மன்றத்திலே நிரம்ப அனுபவம் வாய்ந்த அங்கத்தினர் அவர்களுக்கு அவ்வளவு சரியல்ல.

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** அதே அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் நாகர்கோயிலில் நாகராஜர் திடலில் வந்து நின்று கொண்டு, 'கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு அரசியல் தெரியாது' என்று பேசினார். கன்னியாகுமரி மாவட்ட மக்கள் படித்த மக்கள். கவிழ்ந்து விழுந்தாலே நூற்றுக்கணக்கான பட்டதாரிகளுக்கு மேலேதான் விழவேண்டும். 'கம்பன வீட்டு கட்டுத்தறியும் கவி பாடும்' என்ற முறையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பால்மணம் மாறாத பாலர்களும் அரசியல் பேசுவார்கள் என்பதை மறந்துவிட்டார்கள் போலும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தவறான தகவல்களை வைத்துக் கொண்டே இன்றையதினம் அங்கத்தினர் அவர்கள் பேசுவதாக முடிவு செய்திருக்கிறார்கள்போல் தெரிகிறது. நான் கன்னியாகுமரி மாவட்டத்தில் பேசும்போது அங்கே 'யாருக்கும் அரசியல் தெரியாது' என்று பேசவில்லை. அப்படிப்பட்ட வார்த்தையைச் சொல்லவில்லை. அப்படிப்பட்ட அரசியல் நாகரிகத்தை நாங்கள் பெற்றவர்களல்ல. (ஆரவாரம்.)

**திரு. எ. சிதம்பரநாத நாடார் :** இந்த மாதிரிக் கை தட்டல்கள் எவ்வளவோ படி கண்டவன் நான். முதலமைச்சர் அவர்கள் காலையில் சொன்னது மாதிரி மாலை போட்டதையும் கண்டவன்; கல் போட்டதையும் கண்டவன், அதை நான் வரவேற்றவன்.

[திரு. எ. சிதம்பரநாத நாடார்] [1967 ஜூன் 22

நமது சாப்பாட்டு அமைச்சரைப் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். வஞ்சி ஆதித்தன் புதுத் தெருவில் பேசும்போது 'குளச்சல் தொகுதியில் நின்று வெற்றி பெற்ற யாருக்குமே விலாசம் இல்லை' என்று பேசினார். கனம் முதலமைச்சர் அவர்கள் கொஞ்சம் காது கொடுத்துக் கேட்க வேண்டும். நான் கடந்த 20 ஆண்டுகளாக பல மாநில மன்றங்களில் உறுப்பினராக இருந்திருக்கிறேன். இன்றுவரை உறுப்பினராக இருந்து கொண்டிருக்கிறேன். அவராவது கடந்த 1957 பொதுத் தேர்தலில் பொள்ளாச்சியில் நின்று தோற்றது நாங்கள் அறிந்ததே. அவர் என்னைப் பார்த்து 'சிதம்பரநாதனுக்கு விலாசம் இல்லை' என்று பேசினார். நான் இன்றைக்கும் ரோட்டிலே போனால் "அமைச்சர் போகிறார்" என்று மக்கள் சொல்லக் கூடிய அளவிற்கு நான் மக்களோடு ஒத்து வாழ்கின்றேன். அப்படி இல்லாமல் இருந்திருந்தால் இன்று முதலமைச்சர் முன்னாலே நின்று நான் பேச முடியாது. இப்படிப்பட்ட பேச்சு தேவையா? அமைச்சர்கள், முதலமைச்சர் பேச வேண்டுமென்றால் ஒரு வரம்பு உண்டு; திட்டம் உண்டு; ஒழுங்கு உண்டு; நீதி உண்டு; நியதி உண்டு. இவைகள் இல்லாத முறையில் 'அவன் அப்படிப் போனான்; இவன் இப்படிப் போனான்' என்று பேசுவது சரியல்ல.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: உணவு அமைச்சர் அவர்கள் என்ன பேசினார் என்று கனம் உறுப்பினர் அவர்கள்
பி. ப. -00 சொல்கிறார்கள்?

திரு. எ. சிதம்பரநாத நாடார்: உணவு அமைச்சர் வடசேரிப் பகுதியில் வஞ்சி ஆதித்தன் புதுத் தெரு என்ற தெருவில் ஒரு பொது மேடையில் பேசினார். குளச்சல் தொகுதியில் இருந்து வெற்றி பெற்ற அத்தனை பேர்களும் விலாசம் இல்லாமல் போய் விட்டார்கள் என்று பிரசாரம் செய்தார்கள். நான் குளச்சல் தொகுதியில் இருந்து வெற்றி பெற்றவன். அப்படி வெற்றி பெற்று மந்திரியாக இருந்தவன். அது என்னைத்தான் குறிக்கும். அக்காரணத்திற்காகத்தான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் அவர்கள் மந்திரி பொள்ளாச்சி தொகுதியில் நின்று தோற்று தொப்பி போடவில்லை.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அங்கத்தினர் அவர்கள் அந்தக் கூட்டத்திற்கு வந்தார்களா என்று தெரியாது. அப்படிப்பட்ட வாசகங்கள் என் பேச்சில் எப்போதும் வருவதில்லை. அது என் பாணியும் அல்ல.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: அங்கத்தினர் அவர்கள் அமைச்சராகக்கூட இருந்தவர்கள். அவருக்கு சில தகவல்களைச் சொல்ல நான் வருத்தப்படுகிறேன். திரு. மதியழகன் அவர்கள் பொள்ளாச்சித் தொகுதியில் நிற்கவில்லை. உடுமலைப் பேட்டை தொகுதியில்தான் நின்றார்.



1967 ஜூன் 22]

திரு. எ. சிதம்பரநாத நாடார்: சீப் மினிஸ்டர் திரு. சி. என். அண்ணாதுரை அவர்கள் தனிப்பட்ட முறையில் பேசும்போது எதையும் பேசலாம். ஆனால் மந்திரியாக வந்த பிறகு ஒவ்வொரு வார்த்தையையும் உணர்ந்துதான் பேசவேண்டும். பொறுப்புள்ள எந்த மந்திரியின் வாயிலிருந்து வரும் எந்த வார்த்தைகளும் யாரும் குறை கூறாத அளவில் இருக்கவேண்டுமென்றுதான் இதைச் சொல்கிறேனே தவிர மந்திரிகளைக் குறை கூறவில்லை.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: அமைச்சர்கள் அப்படிப் பேசவில்லை என்று சொல்லிய பிறகு தொடர்ந்து அதைப் பற்றி பேசுவதும், அமைச்சர்கள் இப்படி இப்படிப் பேசவேண்டும், இப்படி எடை போடவேண்டும் என்றெல்லாம் எடுத்துச் சொல்வது அவருக்கு வயது, பல வேலைகளில் இருந்த அனுபவம், எங்களிடத்திலுள்ள நட்பு போன்ற எல்லாத் தகுதிகளும் இருந்தாலும் தொடர்ந்து அதைப்பற்றிப் பேசுவது முறையல்ல.

மாண்புமிகு அவைப் பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் அமைச்சர்களைப் பற்றி, அவர்கள் பேசிய பேச்சுக்கள் பற்றிப் பேசுகிறார்கள். ஒவ்வொரு சமயத்திலும் அந்த அமைச்சர்கள் இந்தப் பேச்சை நான் பேசவில்லை என்ற கருத்தை இங்கு கூறியிருக்கிறார்கள். ஆனால் உறுப்பினர் அவர்கள் மேலும் அதைத் தொடர்ந்து பேசும காரணத்ினால் இந்த இடத்தில் இப்படிப் பேசி மற்றவர்களுக்கு ஒரு மாசு கற்பிக்கலாம் என்ற தவறான எண்ணத்தோடு உறுப்பினர் அவர்கள் இங்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் பேசுவது எல்லாம் உண்மை என்பதை நிரூபிக்கும் பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படியில்லாமல் தொடர்ந்து இப்படிப் பேசுவதை விட உறுப்பினர் பேசாமல் இருப்பதே நல்லது என்று கூறி, வேறு ஒரு உறுப்பினரை பேச அழைக்கிறேன். திரு. சுப்பையா முதலியார்.

* திரு. எ. ஆர். சுப்பையா முதலியார்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தத் திட்டம் சாதாரண 'புவர் மான்ஸ் பட்ஜெட்' என்று சொல்லத்தக்க விதத்தில் நம் நாட்டு சாதாரண மக்களுக்கு நன்மை செய்யும் வகையில் வகுக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். இதில் ஐந்து கோடி ரூபாய் அளவில் துண்டு விழுகிறது. அந்தத் துண்டை புது வரிகள் மூலமாகவும், விற்பனை வரி மூலமாகவும், பஸ்களுக்கு அதிக வரி விதிப்பதன் மூலமும், ஸ்டாம்ப் ட்யூட்டி மூலமும், அதிக மதுபான வரி மூலமும் சரிக்கட்டும் நிலை இருக்கிறது. கடன் நிலையைப் பார்க்கும்போது 1950-ல் 12 கோடி ரூபாயாக இருந்தது, 1966-67-ல் 300 கோடியாக உயர்ந்திருக்கிறது. கடனுக்காக கொடுக்கப்படக்கூடிய வட்டியாக 1950-ல் 41 லட்சம் ரூபாய் கொடுத்து வந்தது. இன்று 14 கோடியாக உயர்ந்திருக்கிறது.

[திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்] [1967 ஜூன் 22

இவை முதலீட்டிற்காக வாங்கிய கடன்கள். அதைப் பார்க்கும்போது ஆதாயம் இல்லாத முதலீடுகளாக இருந்ததினால்தான் இந்தக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இன்று நாம் அதிகமாக வரவேற்கத்தக்கது, புன்செய்யின் மீதுள்ள வரி ரத்து செய்யப்பட்டிருப்பதுதான். இதனால் 140 லட்சம் ரூபாய் துண்டு விழுகிறது. அதனால் நன்மை அடைபவர்கள் 40 லட்சம் பட்டாதாரர்கள் என்று சொல்லப்படுகிறது. இதை நான் வரவேற்றாலும் இதிலுள்ள குறைபாடுகளைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்று இதற்கு விலக்களிக்கப்பட்டிருப்பதனால் ஏற்படக் கூடிய பின் விளைவுகளைப்பற்றிச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்று வரி செலுத்தாவிட்டால், பட்டா இல்லாவிட்டால், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நிலம் யாருடையது என்று ஆராய்வதில் கஷ்டம் ஏற்படும். இன்று பட்டா இருக்கிறது. வரி செலுத்துகிறான், யாருடைய நிலம் என்று வந்தால் திர்வை செலுத்திய ரசீதைக் காட்டுகிறான். ஆனால் இந்த புன்செய் நில வரி நீக்கம் காரணமாக ரிக்கார்ட் மூலம் பாத்தியதை இல்லாத போகிற ஒரு நிலைமை ஏற்படும். ஆகவே அதைக் கொண்டு வரும்போது யோசித்துக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கன்னியாகுமரி ஜில்லாவில் பேசிக் டாக்ஸ் வைத்திருக்கிறார்கள். செண்டுக்கு ஒரு பைசா என்று சொல்வார்கள், அங்கு சக்கரம் என்று சொல்வார்கள். ஒருவனுடைய நிலம் தன்னுடையது என்பதற்கு அந்த டாக்ஸ் கட்டிய ரசீது இருக்கிறது. ஆகவே, வரி இல்லை என்று எடுத்துவிட்டால் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு பல சிக்கல்கள் ஏற்பட வழி ஏற்படும். ஒரு நாமினல் பேசிக் டாக்சாவது தேவை. கம்பவுண்டிங் வேண்டாம் என்று இப்போது சொல்கிறார்கள். ஆனால் பாகுபாடு தேவை. உணவுப் பயிருக்கு கம்பவுண்டிங் வைத்துக்கொள்ளலாம், வாணிபப் பயிர்களுக்காவது காம்பவுண்டிங் வேண்டாம். அதில் கூடுதல் வருமானம் வரும் என்று நினைக்கிறேன். கன்னியாகுமரி விவசாய வருமானச் சட்டம் பிரயோஜனப்படும் என்று சொல்கிறார்கள். அங்கு பேசிக் டாக்ஸ் இருக்கிறது. முக்கியமாக செங்கோட்டைப் பகுதியில் உள்ள அனுபவத்தைப் பார்த்தால் வருவாயைக் கணக்கெடுப்பது ரொம்பக் கீழ்த்தரமாக இருக்கிறது. கீழ்த்தரமென்றால், முரட்டடியாக விதிக்கிறார்கள். ஒரு ஏக்கர் விவசாயச் செலவிற்கு 100 ரூபாய் தான் செலவாகும் என்கிறார்கள். விவசாயம் தெரியாத நகரமக்களுக்குக்கூட தெரியும் 100 ரூபாய் காணாது என்று. அப்படியிருந்தும் சர்க்குலர் ஒன்று பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, ஏக்கருக்கு 100 ரூபாய் செலவைக் கழிக்க வேண்டுமென்று. இப்படி வரி விதிக்கிறார்கள். ஆகவே நான் சொல்வது என்னவென்றால், இப்போது விவசாயிகள் கணக்குகள் வைத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்வதினால் பல கஷ்டங்கள் ஏற்படும். டெல்டா ஏரியாக்களில் நான்கு ஏக்கர்கள் இருந்தால் 3,500 ரூபாய் க்ராஸ் இன்கம் வரும். அவர்கள் கூட கணக்கு வைக்கவேண்டிய நிலை ஏற்படும். புன்செய் நிலங்கள் சம்பந்தப்பட்டமட்டில் பேசிக் டாக்ஸை வைத்துக்கொண்டு கம்பவுண்டிங் செய்யும்போது புட்



1967 ஜூன் 22]

ப்ரொடக்ஷனுக்கு மட்டும் விலக்கு அளித்துவிட்டு வாணிபப் பயிர்களுக்கு கம்பவுண்டிங் செய்யாமல் வரி விதிக்கும் முறையில் கணக்கு வைத்துக் கொள்ளலாம் என்றால் குற்றமில்லை. எவ்வளவு ஏக்கர்கள் இருந்தாலும் குத்துமதிப்பாகத்தான் கணக்கு கொடுக்க முடியும். பத்து பேர்கள் வேலை செய்ய வந்திருப்பார்கள். ஒரு நாள் ரூபாய் கூலி கொடுப்பார்கள். ஆனால் பக்கத்தில் போட்டி ஏற்பட்டால் நான்கு ரூபாய் கூலி கொடுக்கவேண்டிய நிலை ஏற்படும், இதனால் கணக்கு வைப்பதில் கஷ்டம் ஏற்படும். ஆகவே வரி விதிப்பதை விவசாய இலாகாவிடமும், வரி வசூல் செய்வதை ரெவின்யூ இலாகாவிடமும் வைத்திருந்தால் குற்றமில்லை.

அது போக, உர வினியோகம் சம்பந்தப்பட்ட மட்டில், இன்று விலையேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதைத் தணிக்க வழி செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, அரசாங்கத்தின் வருவாயைப் பெருக்குவதற்கு எனக்குத் தெரிந்த சில யோசனைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுக்கும் திட்டம் போற்றக் கூடியது, வரவேற்கக் கூடியது, பொது மக்களுக்கு நன்மை செய்யக் கூடியது. அதற்கு ஆகக் கூடிய செலவுக்காக வேண்டிய வருவாயை எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது. இன்றைக்கு பரம்பரை மானேஜிங் டிரஸ்டிகள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அதற்குக் கணக்கே கிடையாது—கேட்பாரில்லை. இன்றைக்கு நாமினல் காம்பென்சேஷன் கொடுத்தால் போதும்--இதற்குச் சட்டமே இடம் கொடுக்கிறது—டோக்கன் காம்பென்சேஷன் கொடுத்துவிட்டால் பல லட்சக் கணக்கான ஏக்கர்கள் நமக்குக் கிடைக்கும். ஹெரிடிட்டரி டிரஸ்டிகளை அப்புறப்படுத்தும்போது, அவர்கள் கோர்ட்டுக்குப் போனாலும் நிற்காது—சட்டம் அப்படி இருக்கிறது. அதன் மூலமாக பல லட்சக்கணக்கான ஏக்கர்கள் நிலம் கிடைக்கும். அதைக் கொண்டு வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கலாம்; உணவு உற்பத்தியைப் பெருக்கலாம்; சர்க்காருக்கு வருவாயும் ஏற்படும். அதிலிருந்து கோடிக்கணக்கான ரூபாய் சர்க்காருக்கு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அதைவிட உயர்வானது இன்னொரு யோசனை. ஒரிசாவில் நடத்தக் கூடிய லாட்டரி போல நாம் நடத்தலாம். ஏனென்றால், இன்று லாட்டரி நடத்துவது தப்பிதம் என்றால் ப்ரைஸ் பாண்ட் வைத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. லாட்டரி இன்ன இன்ன காரியத்திற்காக நடத்துகிறோம் என்று சொல்லி, சர்க்கார் மேற்பார்வையில், சர்க்கார் பொறுப்பில், சர்க்காரின் திட்டத்தின் கீழ் நடத்தினால் தவறு ஏற்படாது. வேண்டுமானால் ஒரு கட்டுப்பாடு செய்யலாம். ஒருவன் தன் பெயரில் இரண்டு ஒரு ரூபாய் சீட்டுக்கள்தான் வாங்கலாம் என்ற விதி வகுக்கலாம். அதனால் பல நன்மைகள் ஏற்படும். அதன் மூலமாக கோடிக்கணக்கான

[திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்] [1967 ஜூன் 22

ரூபாய் முதல் வரும். ஓரிசாவில் எடுத்துப் பார்த்தால் மேற்படி திட்டத்தால் நன்மை அடைந்ததை பல இனங்களாகப் பிரித்து, அந்தச் சர்க்கார் விளம்பரப்படுத்துகிறார்கள். கோடிக்கணக்கில் லாட்டரி சீட்டில் வருவாய் வந்து இப்படி இப்படி செலவழித்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அந்த முறையில் நாமும் நடத்தினால் சர்க்காருக்கு வருவாய் வருவதற்கு வழி செய்யலாம்.

அது போக, அக்ரிமெண்ட் ஸ்டாம்ப் ட்யூட்டி 1½ ரூபாய் இருந்தது, புதுச் சட்டப்படி 2¼ ரூபாய் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். லட்சம் ரூபாய்க்கு காண்ட்ராக்ட் எடுத்தாலும், இரண்டு லட்சம் ரூபாய்க்குக் காண்ட்ராக்ட் எடுத்தாலும் 2¼ ரூபாய் ஸ்டாம்ப்பில் காண்ட்ராக்ட் முடிக்கப்படுகிறது. அதிலே ஸ்லாப் சிஸ்டம் ஏற்படுத்தலாம். இவ்வளவு அக்ரிமெண்ட் என்றால் இவ்வளவு ரூபாய் என்ற திட்டத்தை வைத்தால் இதன் மூலம் சர்க்காருக்கு வருவாய் வர வழி இருக்கிறது.

அது போக, உற்பத்திப் பெருக்கத்திற்கு முக்கியமான மாறுதல் தேவை. மூன்றாவது திட்டத்தின் ஆரம்பத்தில் சொல்லப்பட்ட கணக்கைப் பார்த்தால், 50 லட்சம் டன்னிலிருந்து 70 லட்சம் டன் உற்பத்தி ஆகும் என்று கணக்கிடப்பட்டது. ஆனால், 1965-66-ல் 52.59 லட்சம் டன்தான் உற்பத்தி ஆகியது. மூன்றாவது திட்டம் முடியும்போது 70 லட்சம் டன் அளவுக்கு உயர்த்தப்படும் என்று சொல்லப்பட்டது, 53 லட்சம் டன்தான் உற்பத்தி ஆகியது. ஏன் உற்பத்தி பெருகவில்லை ? ஆரம்பத்திலிருந்து உற்பத்தி பெருகும் என்று சொல்லிக்கொண்டிருந்தும், உற்பத்தி பெருகாமல் அதே நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் ட்யூயல் கண்ட்ரோல்தான். விவசாய இலாகாவைத் தனியாக வகுத்து அவர்களிடம் பொறுப்பைக் கொடுத்தால் பிரயோசனமாக இருக்கும். உற்பத்தி பெருகவில்லை என்றால், ட்யூயல் கண்ட்ரோல் இருப்பதால்தான் பெருகவில்லை என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். மூன்று திட்டங்கள் வகுத்து விட்டோம். எதிர் பார்த்த முன்னேற்றம் இல்லை—உற்பத்திப் பெருக்கம் இல்லை. மற்ற இலாகாக்கள் முன்னேற்றமாக இருக்கக் காரணம் அந்தந்த இலாகாக்கள் பொறுப்பை வைத்துக்கொண்டிருப்பதால்தான். விவசாய இலாகாவைப் பொறுத்த வரையில் ட்யூயல் கன்ட்ரோல் இருப்பதால்தான் முன்னேற்றம் இல்லை. அதை மாற்றி விவசாய இலாகாவுக்கு முழுப் பொறுப்பைக் கொடுத்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயம் அபிவிருத்தி அடைய வேண்டுமென்றால், மருந்து அடிக்கும் திட்டம் மலேரியா எராடிகேஷன் ஸ்கீம் மாதிரி அமல் நடத்தப்பட வேண்டும். இன்று எங்கே பார்த்தாலும் நெல் பயிரிடுகிறார்கள் ; உரம் வைக்கிறார்கள்—கறுப்பு மார்க்கெட்டில் வாங்கியாவது வைக்கிறார்கள். நோய் மண்டி விடுகிறது. ஒருவன் மட்டும் மருந்து அடித்தால் பிரயோசனம் இல்லை. மலேரியா



1967 ஜூன் 22] [திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்]

எராடிகேஷன் ஸ்கீம் மாதிரி எல்லோருக்கும் அமல் நடத்தும் முறையில் திட்டம் வகுத்தால்தான் உற்பத்தி பெருகும் என்று நினைக்கிறேன்.

இன்னும் பேசுவதற்கு நிறைய இருக்கிறது. தலைவரின் மணி கட்டுப்படுத்துவதால் என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். நான் இப்போது உற்பத்தி பெருக வழி சொல்லியிருக்கிறேன், வருவாய் பெருக வழி சொல்லியிருக்கிறேன். விவசாய வருமான வரி ஜாக்கிரதையாக கவனித்துச் செய்யவேண்டிய திட்டம். மக்களுக்கு நன்மை செய்வதற்குப் பதில் விவசாய மக்களுக்கு முட்டுக்கட்டையாக இருந்து, கோர்ட்டுக்குப் போக, ரெவின்யூ டிபார்ட்மெண்ட்டுக்குப் போக வழி செய்யும் முறையில் செய்து விட்டால் உற்பத்தி கண்டிப்பாக வீழ்ந்துவிடும். கமர்ஷியல் க்ராப்சுக்கும் கம்பவுண்ட் செய்யுங்கள். மூன்று பங்கு நான்கு பங்கு வேண்டுமானால் உயர்த்துங்கள். அதைவிட்டு கணக்குக் கொடுக்கும் முறையை வைத்தால் க்ஷீணதசை ஏற்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

* திரு. க. துரைசாமி : மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையின் மீது பேசுகிற வாய்ப்பைத் தந்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசின் நிதி நிலை அறிக்கையின் மீது இங்கே பேசுவதற்கு முன்பாக, இந்த மாநில அரசைப் பொறுத்த வரையில், இதற்கு முன்பெல்லாம், கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்பு, இன்றைக்கு ஆளுகிற பொறுப்பை ஏற்றிருக்கிற கட்சியைப் பற்றி, எதிர் வரிசையில் இருக்கிற பலரும் பலவிதமாகப் பேசிக் கொண்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் பல்வேறு கட்சிகளோடு கூட்டுச் சேர்ந்திருக்கிற காரணத்தினால், இந்த இயக்கம் எதிர்காலத்திலே எப்படிப்பட்ட இயக்கமாக இயங்கும் என்ற குறிப்பை அன்றைய தினம் ஆளுகிற பொறுப்பில் இருந்த பலரும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இந்த மாநிலத்தில் முதல்வர் அவர்கள் அந்தச் சந்தர்ப்பத்திலே மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நாட்டில் சமதர்ம லட்சியத்தை உருவாக்கும் என்றும், திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் ஏழை எளியவர்கள் பக்கத்தில் இருக்கும் கட்சி என்றும் அந்த நேரத்தில் மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். கடந்த 20 ஆண்டு காலமாக இந்த நாட்டில் இருக்கிற பல்வேறு தொழிற் சங்கத்தைச் சேர்ந்த தொழிற் சங்கவாதிகள் அன்றைய சர்க்காரைப் பார்த்து மே தினத்திற்கு விடுமுறை தினம் விடவேண்டுமென்று வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். அன்றைக்கு இருந்த சர்க்கார் நாட்டு மக்களைப் பார்த்துப் பேசுகிற நேரத்திலெல்லாம் இந்த நாட்டில் ஜனநாயக சமதர்மத்தைக் கொண்டுவரப் போகிறோம் என்று நாள் தவறாமல் சொல்லிக் கொண்டிருந்தாலும், மே தினத்திற்கு

விடுமுறை விடாமல் இருந்ததைப் பார்த்தோம். புதிதாக ஏற்பட்ட திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார், தொழிலாளிகள் பக்கம் இருக்கக் கூடிய சர்க்கார் என்ற காரணத்தினால், இந்தச் சர்க்கார் யார் பக்கம் இருக்கிறது என்று நாட்டுக்கும், உலகுக்கும் எடுத்துக்காட்டும் முறையில் மே தினத்தை விடுமுறை நாளாக அறிவித்த இந்த மாநில முதல்வர் அறிஞர் பெருந்தகை அவர்களுக்கு என் சார்பிலும், நான் சார்ந்திருக்கிற தொழிலாளர்கள் சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்து பேசினார்கள். அப்படிப் பேசுகிற நேரத்தில் இந்த சர்க்காரின் நிதி நிலை அறிக்கை இரகசியம் வெளியிடப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டை இந்த மன்றத்தில் எடுத்துச் சொன்னார்கள். நான் சபைத் தலைவர் அவர்கள் மூலமாக எதிர் வரிசையில் இருக்கிறவர்களுக்கு சில விவரங்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். கடந்த இருபது ஆண்டுகாலம், ஒவ்வொரு ஆண்டும், ஏற்கெனவே இருந்த சர்க்கார் நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்கிற நேரத்தில் அதன் விவரங்கள் வெளியாவதன் மூலமாக அன்றைய தினம் இருந்த விலைவாசிகள் பாதிக்கப்பட்டு, நாட்டு மக்களுக்குத் தேவையான அன்றாடப் பொருள்கள் கிடைக்காமல் இடப்பாடுகளுக்கு ஆளான நிலைமையைக் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். உதாரணத்திற்கு இந்த ஆண்டு மத்திய சர்க்கார் நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்வதற்கு முன்பாக நாம் நகரங்களில் பார்த்தோம், சிகரெட்டுகளின் விலை ஏறிவிட்டது, பெட்ரோல் கிடைக்கவில்லை, பெட்ரோல் விலை ஏறியது. இவைகளை நடைமுறையிலே பார்த்தோம். ஆனால், அப்படிப்பட்ட ஒரு கவலை, இன்றைக்கு நாட்டு மக்கள் முன்பாக நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதற்கு முன்பாக ஏற்படுகிற நெருக்கடியும், ஏற்படுகிற பற்றாக்குறையும் நம்முடைய நிதிநிலை அறிக்கையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தாக்கல் செய்கின்ற நேரத்தில் ஏற்படவில்லை என்பதைப் பார்க்கின்ற நேரத்தில், நம்முடைய நிதிநிலை அறிக்கை எந்த அளவுக்கு பத்திரமாக, முறையாக காக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்பொழுது, இந்த அமைச்சரவைக்கு பணிவன்போடு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த சர்க்கார் எப்படிப்பட்ட சர்க்காராக இருக்கும் என்றெல்லாம் கடந்த காலத்தில் பலரும் பேசினார்கள். இந்த சர்க்கார் எப்படிப்பட்ட சர்க்கார், யாருக்காக பரிந்து பேசுகிற சர்க்கார், யாருக்காக பாடுபடுகிற சர்க்கார் என்பதை இந்த நிதி நிலை அறிக்கை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியிருப்பதை நாம் பார்க்கிறோம். இந்த நாட்டில் புஞ்சை சாகுபடி பயிர் செய்கின்ற 45 லட்சம் குடும்பங்கள் இந்த சர்க்கார் புஞ்சை நிலங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த வரியை எடுத்ததன் மூலம் மகிழ்ச்சி அடைந்



திருக்கிறார்கள். அதே போலத்தான் இன்றைக்கு நாட்டிலே இருக்கிற சிறிய வியாபாரிகளுக்கு விற்பனை வரியின் மூலம் உள்ள இடர்ப்பாடுகளை இந்த சர்க்கார் அகற்றியிருக்கிறார்கள். ஏற்கனவே இருந்த சர்க்காரால் விதிக்கப்பட்டிருந்த விதிவிலக்குக்கான உச்ச வரம்பை ரூ. 10,000-லிருந்து இந்த சர்க்கார் ரூ. 15,000-க்கு உயர்த்தியதன் மூலம் இந்த நாட்டிலிருக்கிற சிறிய வியாபாரி களுக்கு சலுகை செய்திருப்பதை நாம் மிகத் தெளிவாகப் பார்க்கிறோம். அதே போலத்தான் கல்லூரியில் படிக்கின்ற மாணவர் களுக்கு, பெற்றோர்களுக்கு ரூ. 1,500-க்கு உட்பட்ட வருமானம் வருகிறவர்களுக்கு, யாராக இருந்தாலும், எப்படிப்பட்டவராக இருந்தாலும், குறைந்த வருமானம் பெறுகிற எல்லா பெற்றோர் களுடைய மாணவர்களுக்கும் இன்றைய சர்க்கார் கல்விச் சலுகை தந்திருப்பதை நாம் பார்க்கிறோம்.

இப்படி ஒரு புறத்தில் ஏழை எளிய மக்களுக்கு நன்மை செய்கிற அதே நேரத்தில், நாட்டிலிருக்கிற பெரிய நிலச்சுவான் தாரர்களுக்கு, நாட்டிலே பெரிய செல்வந்தர்களாகக் கருதப்படுகிற பல் முதலாளிகளுக்கு வரி விதித்திருப்பதை மிகத் தெளிவாகப் பார்க்கிறோம். இந்த நாட்டில் சமதர்ம லட்சியத்தைக் கொண்டு வரவேண்டும் என்று காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் இன்றைக்கு மட்டுமல்ல, நம்முடைய சென்னை நகரத்திற்குப் பக்கத்தில் இருக்கிற ஆவடியில் 1954-ல் நடைபெற்ற மகாநாட்டில் சொன்னார்கள். இந்த நாட்டில் மிகப் பெரிய சமதர்ம சர்க்காரைக் கொண்டுவரப்போகிறோம் என்று சொன்ன காங்கிரஸ் சர்க்கார், ஏறத்தாழ 1966-ம் ஆண்டு வரை 12 ஆண்டுகள் ஓடியும் கூட அப்பொழுதிருந்த சர்க்கார் பஸ் தொழிலை நாட்டுடைமையாக்க முடியவில்லை. இப்பொழுது புதியதாக வந்திருக்கிற தமிழக சர்க்கார், ஏழை மக்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கும் சர்க்காராதலால், பஸ் தொழிலை 75 மைல்களுக்கு அதிகமாக இருக்கிற எல்லா பஸ் ரூட்டுகளையும் நாட்டுடைமையாக்க நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்றால், இந்த சர்க்கார் எப்படிப்பட்ட சர்க்கார் என்பது நாட்டிற்கு நன்கு விளங்கும். அதேபோல, இன்றைக்கு தனியார் நடத்துகிற பஸ்களுக்கு ஏற்கனவே 220 கிலோ மீட்டர் அளவுக்கு ரூ. 35 விதிக்கப்பட் டிருந்த வரியை ரூ. 50-ஆக உயர்த்தியதன் மூலம், தாங்கக் கூடிய வர்களுக்கு, சக்தி படைத்தவர்களுக்கு வரிச்சுமையை உயர்த்தி, ஏழை மக்களுக்கு சலுகை செய்யக்கூடிய முறையில் நம்முடைய சர்க்கார் எடுத்த நடவடிக்கையை நாட்டு மக்கள் நல்ல முறையில் வரவேற்கிறார்கள். அதே நேரத்தில் இந்த மன்றத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில், மதுபானம் சம்பந்தமாக ஏற்கனவே இருந்த சர்க்கார் ஒரு லிட்டர் மதுபானத்திற்கு விதித்திருந்த வரி ரூ. 8 என்றால், நம்முடைய தமிழக சர்க்கார் இன்றையதினம் அதை ரூ. 18 ஆக உயர்த்தி யிருக்கிறார்கள். மதுபானத்தை அருந்துகிறவர்கள் செல்வந்தர் களாகவும், பெர்மிட் வாங்குவதற்கான வசதிகள் படைத்தவர்

[திரு. சு. துரைசாமி] [1967 ஜூன் 22

களாகவும் இருப்பதினால், அவர்கள் தாங்குகின்றவர்கள், சக்தி படைத்தவர்கள் என்று கருதி, அவர்களுக்கு வரியை புதிய தமிழக சர்க்கார் உயர்த்தியிருப்பதன் மூலம் இந்த சர்க்காருடைய நிலைமைகளை நாம் மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. இப்படிப்பட்ட வரிகளையெல்லாம் யார் தாங்கக்கூடியவர்கள், யார் மீது வரி போடவேண்டும் என்று எண்ணிப்பார்த்து தமிழக சர்க்கார் நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதே போல பத்திரங்களின் விலையின் மீது விதிக்கப்பட்ட வரியை சரிவர வசூலிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

எதிர்த்தரப்பிலுள்ள சில உறுப்பினர்கள் பேசும்பொழுது திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் ½ சதவிகிதம் விற்பனை வரியை உயர்த்திவிட்டார்கள், ஒரு சதவிகிதம் உயர்த்திவிட்டார்கள் என்றெல்லாம் குறைபாடுகளை எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு நான் பணிவன்போடு உதவி சபாநாயகர் அவர்களின் மூலமாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் நம்முடைய நாட்டில் இன்றைக்கு ½ சதவிகிதம், ஒரு சதவிகிதம் வரியை உயர்த்தியதுபற்றி குறை கூறிக்கொண்டிருக்கிறார்கள். டெல்லி சர்க்கார் விதித்திருக்கிற வரியைப் பற்றி தயவு செய்து அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய நாட்டில் ஓடுகின்ற பஞ்சாலைகள் பெரும்பகுதி நூல் தயாரிக்கக் கூடிய பஞ்சாலைகளே தவிர, துணி நெய்யக் கூடிய பஞ்சாலைகள் அல்ல. ஏற்கனவே 60-ம் நம்பர், 80-ம் நம்பர் நூலுக்கும் அதற்கு மேற்பட்ட நூலுக்கும், ஒரு கிலோ நூலுக்கு ரூ. 1.20 வரி இருந்து கொண்டிருந்தது. இன்றைக்கு அந்த வரி ரூ. 6.20 ஆக மத்திய சர்க்காரால் உயர்த்தப்பட்டிருக்கிறது. ½ சத விகிதம், ஒரு சத விகிதம் இங்கே வரி உயர்த்தியதைப் பற்றி குறைகூறினவர்கள், ரூ. 1.20-லிருந்து ரூ. 6.20-ஆக மத்திய சர்க்கார் பட்ஜெட்டில் உயர்த்தப்பட்ட வரியை சகித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். அதுமட்டுமல்ல, இந்த வரி உயர்வின் மூலம் தமிழகத்திலுள்ள பஞ்சாலைத் தொழிலுக்கே மிகப் பெரிய நெருக்கடி உருவாக்கப்பட்டிருக்கிறது. டெல்லி சர்க்கார் நிதி அமைச்சர் திரு. மொரார்ஜி அவர்கள் குஜராத் மாநிலத்தைச் சேர்ந்தவராகையால், அங்கேயுள்ள பஞ்சாலைகள் துணி தயாரிக்கக் கூடிய பஞ்சாலைகளாக இருப்பதினால், நூலுக்கு வரி போட்டால் அந்த பஞ்சாலைகளுக்கு பாதிப்பு கிடையாது. ஆனால், தமிழகத்திலுள்ள பஞ்சாலைகளில் லட்சக்கணக்கான குடும்பங்கள் வேலை செய்துகொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட பஞ்சாலைகளுக்கு ரூ. 1.20-ஆக இருந்த வரியை ரூ. 6.20-ஆக உயர்த்தியதின் மூலம் மிகப்பெரிய நெருக்கடி இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. எதிர்புறத்திலிருக்கிற நண்பர்கள், அவர்கள் சார்ந்திருக்கிற கட்சியின் மூலம் இவைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, மத்திய சர்க்கார் அதற்குத் தக்க வழிவகை செய்யக் கூடிய முறையில் ஆவன செய்ய வேண்டும் என்று உதவி சபாநாயகர் அவர்களின் மூலமாக அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



1967 ஜூன் 22] [திரு. சு. துரைசாமி]

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நேற்றைய தினம் இந்த மன்றத்தில் பேசிய எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் அங்கேயிருந்து பெரும்பான்மையான காங்கிரஸ் கட்சிக்காரர்கள் வந்திருக்கிற காரணத்தினால் அந்த மாவட்டத்து மக்களுக்கு சரிவர அரிசி கொடுக்கப்படவில்லை, அந்த மாவட்டத்தில் பற்றாக்குறை இருக்கிறது என்ற குறைபாட்டை எடுத்துச் சொன்னார்கள். இப்படிப்பட்ட நிலைமை கோவை மாவட்டத்திலும் இருந்து கொண்டிருக்கிறது. கோவை மாவட்டத்தில்கூட, அங்கு இருக்கிற பெரிய நகரங்களிலும் குடும்பக் கார்டுகளில் குறிப்பிட்ட அளவுக்கு அரிசி கிடைக்கவில்லை, அதே போல மேஜர் பஞ்சாயத்துக்கள், கிராம மக்களுக்கு அரிசி கிடைக்கவில்லை என்ற கோரிக்கை இருந்துகொண்டிருக்கிறது. அவர்கள் இதற்கு அடிப்படை காரணம் என்னவென்பதை தயவு செய்து உணர வேண்டும். முன்பிருந்த சர்க்கார், தான் நாட்டு மக்களுக்குச் செய்யவேண்டிய காரியங்களை முறையான நேரத்தில் செய்யத் தவறிவிட்ட காரணத்தினால்தான் இன்றைக்கு உணவு பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. அதுதான் அடிப்படை காரணம் என்பதை இந்த மன்றத்தின் வாயிலாக, தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்த வரையிலே ஏறத்தாழ 10 லட்சம் குளங்கள் இருக்கின்றன. அந்த 10 லட்சம் குளங்களையும் 20 ஆண்டு காலமாக முன்பிருந்த சர்க்கார் சரியான முறையில் பராமரிக்கவில்லை என்ற குற்றச்சாட்டை நான் இந்த மன்றத்தில் சுமத்துகிறேன். இன்றைக்கு நாட்டில் ஏற்பட்டிருக்கிற உணவு நெருக்கடிக்கு அடிப்படை காரணம் ஏற்கனவே இருந்த சர்க்கார் செய்ய வேண்டியதை செய்ய தவறிவிட்டதனால்தான் என்பதை மிகப் பணிவோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டு மக்களுக்கு அரிசி கொடுக்கக் வேண்டிய கடமை நம்முடைய சர்க்காருடையதாக இருந்தாலும், ஏற்கனவே ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் கொள்முதலுக்கு ஏற்ற தருணத்தில், கொள்முதல் சரியாகச் செய்யாமல் விட்டு விட்ட காரணத்தினாலேதான் இன்றைக்கு உணவு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அதேபோல மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்த வரையில், இந்த மாநில சர்க்காரைப் பொறுத்த வரையிலே உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்த போதிலும், உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான போதுமான உரம் இல்லை என்ற குறைபாடு இருந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த மன்றத்தில் சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்த முன்னாள் முதல் அமைச்சர் அவர்களே தாங்கள் எதிர்பார்த்த அளவுக்கு உரம் கிடைக்கவில்லை, இந்த நிலைமை ஒரு ஆண்டுக்கு மட்டும் அல்ல, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் முழுவதுக்குமே என்று தெரிவித்திருக்கிறார்கள். உணவு உற்பத்தி பெருக வேண்டுமென்றால் உரம் தேவை. மத்திய சர்க்காரிடமிருந்து போதிய உரம் கிடைக்கவில்லை என்பதையும் இப்பொழுது நம்முடைய முதலமைச்சர்

அவர்கள் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். உணவு உற்பத்தியை பெருகவேண்டுமென்றால் மக்களுக்குத் தேவையான அளவுக்கு உரம் கிடைக்க வேண்டும். கிடைக்கிற உரம்கூட சரியான முறையில் இன்றைக்கு மக்களுக்கு கிடைப்பது கிடையாது, குறிப்பிட்ட காலத்தில் கிடைப்பது கிடையாது. அதேபோல மின்சாரத் துறையிலும் மின்சார இணைப்பு விரைவிலே விவசாயிகளுக்குக் கிடைக்காததினால், மிகப் பெரிய நெருக்கடியை உண்டாக்குகிறது. இந்தக் குறைகளையெல்லாம் நீக்குவதற்கு புதிய சர்க்கார் அதிகத் தொகை ஒதுக்கியிருக்கிறது. மேலும் உணவு உற்பத்தியை அதிகரித்து, இந்த நாட்டு மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய முறையில் இந்த அரசாங்கம் இயங்கும் என்று சொல்லி, மாநில முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் நிதிநிலை அறிக்கையை ஆதரித்து, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மு.ப. 11-30 **திரு. க. இராமமூர்த்தி**: மாண்புமிகு அவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மிக மிக ஆவலோடு எதிர்பார்க்கப்பட்ட வரவு செலவு திட்டத்தின் பேரில் மிக மிக வேதனையோடு பேச வேண்டிய நிலையில் இருக்கிறேன். இந்த வரவு செலவு திட்டம் தமிழகத்தில் நடுத்தர மக்கள் மீது வரிப்பளுவைச் சுமத்துவதாக இருக்கிறது என்பதைக் கண்டு அதிகமாக வேதனைப் படுகிறேன். இந்த சர்க்கார் நடுத்தர மக்களுக்கு நிவாரணமும் அளிக்கவில்லை, விவசாயிகளுக்குக் கூடுதலான தொல்லைகளையும், சங்கடங்களையும் தான் கொடுத்திருக்கிறது. இன்றைய தினம் விற்பனை வரியை உயர்த்தியிருக்கிறார்கள். அதனால் விலைவாசிகள் உயர்ந்து, நடுத்தர மக்கள் அவதிப்படுவார்கள். இந்த திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் விவசாயிகளுக்கு 'கம்பௌண்டிங்' என்று சொல்லப்படும் உடன்படும் வரியைக் கைவிடுவதன் மூலமாக விவசாயிகளுக்கு கொடுமை செய்திருக்கிறது. விவசாயிகளை அதிகாரிகளுடைய தயவில் பிழைக்க வேண்டிய, அவர்கள் காலடியில் நிற்க வேண்டிய நிலையில் வைத்து விட்டார்கள். கணக்கு வழக்கு எழுதத் தெரியாத விவசாயிகளை அதிகாரிகள் தயவில் விவசாயம் செய்ய வேண்டிய நிலையில் நிறுத்தி வைத்திருக்கிறது இந்த சர்க்கார். இந்த நிலை நீடிக்குமானால், விவசாயிகள் ரெவின்யூ அலுவலகங்களில் கூட்டம் கூட்டம் ஆக நிற்க வேண்டிய நிலைதான் இருக்கும். விவசாயம் சரிவர நடக்காது.

இன்னொரு கொடிய செயலையும் இந்த சர்க்கார் செய்திருக்கிறது. ஸ்டாம்ப் ஆக்டில் திருத்தம் செய்திருக்கிறது. இந்த சர்க்கார் ஸ்டாம்ப் ஆக்ட் நிறைவேற்றப்படும் முறையில் 'வால்யுவேஷன்' குறைவாகக் காட்டி செய்யப்பட்டிருக்குமானால், அப்படிச் சந்தேகம் ரெஜிஸ்ட்ராருக்கு இருக்குமானால், அதுபற்றி விவரங்களைக் கேட்டு ரெஜிஸ்ட்ரார் கலெக்டருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம். இதனால் விவசாயிகள் பெரும் அளவில் பாதிக்கப்படுவார்கள். அவர்களுக்கு கடன் வாங்கவோ, மற்றபடி விற்கவோ வாங்கவோ முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது.



அடுத்து இந்த சர்க்கார் நம்முடைய மாணவர்களுக்கு பி.யு.சி. படிப்பை இலவசமாக அளிப்பார்கள் என்று எதிர் பார்த்திருந்தார்கள். வேண்டுகோள் கூட விடுத்தோம். ஆனால், என்ன காரணத்தாலோ, முதல் அமைச்சர் நிதிநிலை இறுக்கமாக இருக்கிறது என்று சொல்லி 1,500 ரூபாய்க்கு மேற்பட்ட வருமானம் உள்ளவர்களுடைய பிள்ளைகளுக்கு இந்தச் சலுகையை மறுத்து இருக்கிறார்கள். 1,500 ரூபாய்க்கு மேற்பட்ட வருமானம் உள்ளவர்களுக்கு இல்லை என்றால், மறுமுறையும் நடுத்தர வர்க்கத்தினரைத்தான் அது பாதிக்கிறது. அவர்களுடைய பிள்ளைகள் படிக்க முடியாத அளவில் செய்திருக்கிறார்கள். இப்படி நிதி நிலை இறுக்கமாக இருக்கிறது என்று சொல்லும்போது, எடுத்ததற்கெல்லாம் இதை அழகாகச் சொல்லும் முதல்வர் அவரால் சொல்லப்படும் சேனைக்கு, அந்த அமைப்புக்கு என்று ரூ 10 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நிதி நிலை இறுக்கமாக இருக்கும்போது, பிள்ளைகளுக்கு, மாணவர்களுக்கு இலவசமாகப் படிப்புக் கொடுக்க முடியாத நிலையில், சேனைக்கு மட்டும் தாராளமாக, ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால், இவர்கள் கட்சி வளர்ச்சிக்காக எதையும் செய்யத் துணிந்திருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது. நாட்டு மக்களின் நலனில் அக்கறை கொண்டவர்களாக அவர்களுடைய போக்கு அமையவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து சேலம் உருக்காலையைப் பற்றி, ஒரு பெரிய போராட்டத்தைப் பற்றி, முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மறந்து குழி தோண்டி புதைக்கப்பட்ட திராவிட நாடு பிரச்சினைக்கு மீண்டும் உயிர் கொடுக்கும் அளவில் இந்தப் போராட்டத் திட்டம் அமைந்திருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவிக்கிறேன். இந்த திட்டத்தின் மூலம் மறந்த திராவிட நாடு புதிய முறையில் பின்புற வழியாக, நம்முடைய ஆளும் கட்சியினரும், முதல்வரும், உயிரூட்டி முன் வைக்கும் திட்டம் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இன்றைக்கு யாரை எதிர்த்துப் போராடுவது? அவர்களே ஈடுபட்டு, தலைமை தாங்கி நடத்தினால், கீழே இருக்கும் போலீஸ் இலாகாவின் பொறுப்பு என்னவாகும் என்பதை முதல்வர் பெருந்தன்மையோடு யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னொன்றையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இன்றைய தினம் எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்காரைக் குறை சொல்லுகிறார்கள். இன்றைய அமைப்பில், மத்திய சர்க்காரால் தான் எதுவும் செய்யமுடியவில்லை என்று குறிப்பிடுகிறார்கள். இதற்கு முன்பும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் இதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏறக்குறைய இதே போன்ற நிலையில் காங்கிரஸ் தன்னுடைய சர்க்காரை 1937-ம் ஆண்டில் அமைத்து அன்று ஆட்சியை நடத்தியிருக்கிறது. அந்தக் காலத்தில், காங்கிரஸ் தன்னுடைய கொள்கைகளை வைத்து 1935-ம் ஆண்டு சட்டப்படி

பதவிக்கு வந்து, அன்றிருந்த வெள்ளைக்கார ஆட்சியை, வெள்ளைக் கார ஏகாதிபத்தியத்தை, வெள்ளைக்கார கவர்னரை எதிர்த்து, காரியங்களைச் செய்திருக்கிறது. அன்று ப்ரேகன் பரி என்ற சீப் செக்ரடரி இருந்தார், அவர்களையும் அன்றைய தினம் இன்ஸ் பெக்டர் ஜெனரலாக இருந்த கன்னிங்ஹாம் என்பவரையும் எதிர்த்து காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட உயர் வெள்ளை அதிகாரிகள் இருந்தும், காங்கிரஸ் சர்க்கார் தன்னு டைய கொள்கைகளை நிறைவேற்றி இருக்கிறது. அப்பொழுது, காங்கிரஸ் சர்க்கார் மதுவிலக்கு திட்டத்தை அமல் செய்தது; ஆலயப் பிரவேச திட்டத்தையும், ஜமீந்தாரி ஒழிப்பு திட்டத்தை யும் அன்றைக்கு காங்கிரஸ் சர்க்கார் அமல் செய்தது. விபசார தடைச் சட்டத்தையும் கொண்டு வந்தது என்பதையும் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். இவற்றையெல்லாம் ஏன் சொல்லு கிறேன் என்றால், எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்காரையே குறை கூறி, மத்திய சர்க்கார் குறுக்கே நிற்கிறது என்று சொல்பவர்கள், கடந்த காலத்தில் காங்கிரஸ் சர்க்கார் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியை மேலே வைத்துக் கொண்டு, தன்னுடைய கொள்கை களையும் நிறைவேற்றி ஆட்சி நடத்தியிருக்கிறது என்பதை தெளிவு படுத்தவேதான். ஆகவேதான், இனியாவது நம் முதல்வர் அவர் கள் மத்திய சர்க்காரைக் குறை கூறுவதை விட்டு, ஆக்கபூர்வமான வேலைகளில் ஈடுபடவேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, நம்முடைய கதர் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். முதல்வர் அவர்களும், இங்கே பேசிய மற்ற உறுப்பினர்களும், அந்த திட்டம் உதவாக்கரைத் திட்டம், வெட்டி யான திட்டம் என்றெல்லாம் பேசினார்கள். அவர்களுடைய தெளிவிற்காக மிக்க வேதனையோடு பதில் சொல்லக் கடமைப்பட் டிருக்கிறேன். கதர் ஒரு உதவாக்கரைத் திட்டம், வெட்டியானது என்று சொல்பவர்கள் யார்? வேறு யாரும் இல்லை, சுதந்திரப் போராட்ட காலத்தில் வெள்ளையரிடம் கையாட்களாக . . . . . . ** இருந்தவர்கள்தான் அப்படிப் பட்ட பேச்சைச் சொல்லுகிறார்களே தவிர, மற்றவர்கள் அப்படிப் பட்ட முடிவுக்கு . . .

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்**: அங்கத்தினர் அவர்கள், ** . . . . . . சில சொற்களைக் கையாண்டார்கள். இந்த மன்றத்திலே அவற்றைக் குறிப்பிடுவது சரியல்ல. அவற்றை அங்கத்தினர் வாபஸ் பெற வேண்டும். நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்றும் நான் ஆணையிடுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி**: அராஜக ஆட்சி இந்த நாட்டிலே இன்றைய தினம் நடக்கிறது என்று நாங்கள் சொல்லிய போதெல் லாம், ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்கள் தரப்பிலிருந்து மறுப்பு

* * பேரவைத் தலைமையின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.



வந்துகொண்டே இருந்தது. நான் இந்தச் சபைக்கு இரண்டு மூன்று விவரங்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய மாவட்டத்திலே மந்திரியாக நியமிக்கப்படாத ஒருவருடைய பெயர், 'தமிழக உள்துறைத் துணை அமைச்சர்' என்று குறிப்பிடப்பட்டு, நீத்தார் நினைவு நிகழ்ச்சியொன்றுக் கான அழைப்பிதழ் சென்ற ஏப்ரல் மாதம் 3-ஆம் தேதியன்று பலருக்கும் அனுப்பப்பட்டது. அதில் மிக மிக வேதனைப்படக் கூடிய நிகழ்ச்சி என்னவென்றால், அந்த அழைப்பிதழில் குறிப் பிடப்பட்ட உள்துறைத் துணை அமைச்சர் உயர்திரு. இரா. இளம் வழுதி, எம்.எல்.ஏ. அவர்களும், நமது தமிழக உணவு அமைச்சர் உயர்திரு கே. ஏ. மதியழகன் அவர்களும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இருக்கிறார்கள். இதை ஏதோ தெரியாத்தன மாக அச்சடித்துப் பத்திரிகை போட்டவர் போட்டுவிட்டார் என்று கூடச் சொல்ல முடியாது. காரணம், பத்திரிகை போட்ட வர் படித்தவர்: ஸ்டேட் பாங்கில் உத்தியோகத்தில் இருப்பவர்.

அதைப்போலவே, இன்னொன்றையும் கூட நான் இந்த மன்றத் தின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஏப்ரல் 29-ம் தேதியன்று என்னுடைய மாவட்டத்தில் செஞ்சி வட்டத்தில் உள்ள வீரணாமூர் என்ற கிராமத்திற்கு வருவதாக இருந்தது. ஆனால், இன்றைய தினம் ஆளும் கட்சியில் உள்ள எம்.எல்.ஏ. ஒருவருடைய தலையீட்டினால், அந்த நிகழ்ச்சிக்கு அமைச்சர் அவர்கள் போக முடியாத பரிதாப நிலை ஏற்பட்டது. இதை நான் ஏதோ விளையாட்டாகச் சொல்லவில்லை. அதற்கான ஆதாரங்களை வைத்துக்கொண்டு நான் பேசிக்கொண்டிருக்கிறேன். தமக்குப் பிடிக்காத ஒருவர் அந்த ஊரில் பஞ்சாயத்துத் தலைவராக இருக்கிறார் என்ற காரணத்தால், அந்த எம்.எல்.ஏ. மின்சார இலாகா அசிஸ்டெண்ட் இன்ஜினியரிடம் சென்று, அந்த நிகழ்ச்சியை நிறுத்துமாறு மிக வேகமாகச் சொல்லிவிட்டார்கள். ஆகவே, அந்த நிகழ்ச்சி மின்சார இலாகாவினரால் தெருமின் விளக்குக்கான பவர் சப்ளை கொடுக்கக் கூடிய அந்த நிகழ்ச்சி— ரத்து செய்யப்பட்டது. அதன் விளைவாக அந்தக் கிராமத்தில் கொந்தளிப்பு ஏற்படும் என்ற நிலை இருந்ததன் காரணமாக, அமைச்சர் அவர்கள் அன்றைய தினம் காலையில் ஒரு நிகழ்ச்சிக் கும் மாலையில் ஒரு நிகழ்ச்சிக்கும் அந்தக் கிராமத்திலே ஏற்றுக் கொண்டிருந்தார்கள். இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் போக முடியாத ஒரு பரிதாப நிலை ஏற்பட்டது. அமைச்சருக்கு ஏற்பட்ட பரிதாப நிலையோடு, அந்த மக்கள் அமைச்சருக்கு வரவேற்பிதழ் அச் சடித்து, அதற்காகச் செலவு செய்து, அவர்களும் பரிதாபத்திற் குரிய நிலைக்கு ஆளாக வேண்டி ஏற்பட்டது. "பிலவங்க ஆண்டு சித்திரைத் திங்கள் பதினாறாம் நாள் 29—4—1967 சனிக்கிழமை யன்று வீரணாமூர் கிராமத்தில் தெரு மின் விளக்கை ஏற்றி வைத்த போற்றுதற்குரிய தமிழக விவசாய அமைச்சர் உயர்திரு. கோவிந்தசாமி அவர்களுக்கு வாசித்தளித்த வரவேற்பிதழ்" வாசிக்கப்படாம

லேயே நின்றுவிட்டது. அசிஸ்டெண்ட் இன்ஜினியர் அவர்கள் பஞ்சாயத்துத் தலைவருக்கு அனுப்பிய கடிதத்தைக் கூட நான் என்னிடம் வைத்துக்கொண்டிருக்கிறேன்.

அதேபோல், இன்னொரு நிகழ்ச்சியும் என்னுடைய தொகுதியில் நிகழ்ந்திருக்கிறது. என்னுடைய தொகுதியில், அங்கிருக்கும் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலே ஒரு மதுவிலக்கு வழக்கு சந்தேகப்படுவதற்கான முறையிலே வாபஸ் பெறப்பட்டது. அதுபற்றி நம்முடைய முதல்வர் அவர்களுக்குத் தனிப்பட்ட கடிதம் 1-4-1967 அன்று நான் எழுதினேன். என்னுடைய அந்தக் கடிதத்தில்,

"The public is agitated over the matter as this is the first time that a withdrawal of his kind has taken place. And the public at large is left to feel that anything can be done provided he has the pull and presence."

என்று எழுதியிருக்கிறேன். முதல்வர் அவர்களுக்கு விளக்கமாக, அந்தக் கேஸ் நம்பர், "C.C No. 591 of 1967 on the file of the Sub-Magistrate, Tindivanam" என்பதையும் தெளிவுபடுத்தி எழுதினேன். என்னுடைய கடிதம் எழுதி 19 நாட்களுக்குப் பிறகு, கோட்டையிலுள்ள உள்துறை துணைச் செயலாளர் அவர்களிடமிருந்து,

"I am directed to acknowledge the receipt of your letter cited".

என்று எனக்குக் கடிதம் வந்தது. அதற்குப் பிறகு 31-5-1967 வரை வேறு பதில் ஏதும் வராத காரணத்தால், அன்றைய தினம் மறு முறையும் முதல் அமைச்சர் அவர்களுக்கு நான் கடிதம் அந்தக் கடிதத்திலே எழுதினேன். "I am only sorry that in spite of a lapse of two months I have not been informed of the action taken on my letter or as to the necessity to withdraw the case" என்று எழுதினேன். அதற்கு இன்றைய தினம் வரை எந்தவித பதிலும் இல்லை. இதில் இன்னும் வருந்தத்தக்க நிலை என்னவென்றால், அந்த வழக்கு மிக மிக சந்தேகத்திற்குரிய நிலையில் வாபஸ் பெறப்பட்டது என்பதாகும்.

இந்த நிகழ்ச்சிகள் மட்டுமல்லாமல், என்னுடைய வீட்டுக்குப் பக்கத்திலேயே இரவு 11½ மணி வரை பொதுக் கூட்டம் நடத்தப்படுகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அங்கே இருக்கிறார்கள். திண்டிவனம் நகரத்திலே என்னுடைய வீட்டின் மதிற்சுவருக்குப் பக்கத்திலேயே, இரண்டு திராவிட முன்னேற்றக் கழக எம்.எல்.ஏ.க்களை வைத்துக் கொண்டு, சட்டத்தை மீறி இரவு 11½ மணி வரை கூட்டம் நடந்தது. நானும் கேட்டுக் கொண்டிருந்தேன். அந்த எம்.எல்.ஏ.க்களும் மறக்க மாட்டார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால், இந்த ஆட்சி நல்ல முறையில் நடக்கின்ற ஒரு ஆட்சியாக இருக்காது. இந்த ஆட்சி ஒரு அராஜகத்திற்கு வழி வகுக்கின்ற அல்லது அதற்குத் துணை புரிகின்ற ஒரு ஆட்சியாகத்தான் மாறிவிடும். இப்படிப்பட்ட நிலை, தமிழகத்தில் வழங்குகின்ற ஒரு பழமொழியைத் தான் நினைவுறுத்துகிறது என்பதை இந்தச்



சபையின் கவனத்திற்குக் கொண்டுவந்த என்னுடைய உரையை முடிக்கிறேன். சாதாரணமாக, தமிழகத்தில் பல இடங்களில் சொல்லுவார்கள். தாலி அறுத்த வீட்டில் தலைக்குத் தலை பெரிய தனம் என்று சொல்லுவார்கள். தமிழகத்தில் இன்றைய தினம் ஆட்சி நடந்தாலுங்கூட, யார் அமைச்சர்கள், யார் அதிகாரிகள் என்ற வரையறை இல்லாதபடி, எல்லோருமே அமைச்சர்களாகவும் எல்லோருமே எம்.எல்.ஏ.க்களாகவும், எல்லோருமே அதிகாரிகளாகவும் இருக்கின்ற நிலை இன்றைய தினம் நாட்டில் உருவாகிக் கொண்டிருக்கிறது. அதனையும் நம்முடைய முதல்வர் அவர்கள் கண்டித்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய தொகுதியிலே விடுதில் . . . (மணி அடிக்கப்பட்டது).

*** திரு. சா. மெய்யப்பன்:** மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையைக் குறித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்கு எனக்கு இடம் தந்தமைக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையைப் பொதுவாக நான் வரவேற்கிறேன் என்று பெருமையாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குறுகிய காலத்திற்குள்ளே, அவையடக்கமாக, அழகிய தமிழிலே கொண்டுவந்து இருக்கிற இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கை, மக்களிடத்திலே நிகழ்ந்து கொண்டிருக்கிற ஒரு ஐயப்பாட்டைப் போக்கும் வகையில், 'கோர்ட் லாங்வேஜ்' என்று சொல்லப்படுகிற, நீதிமன்றங்களிலே வரப்போகிற 'லாங்வேஜ்' இன்னும் மற்றும் விஞ்ஞான ரீதியில் வரப்போகின்ற அத்தனையையும் தமிழிலே கொண்டுவர முடியும் என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறது என்பதையும். அதன் காரணமாகத் தமிழ்த் தாய்க்கு வணக்கம் செலுத்தும் வகையில் இந்தத் தமிழக அரசு தந்திருக்கிற பட்ஜெட்டை மிகுந்த அன்புடனே வரவேற்கின்றேன் என்பதையும் நான் சொல்லிக்கொள்ளுகிறேன்.

நேரம் குறைவாக இருக்கிற காரணத்தால், அதற்கு அடுத்து, ஒரு குறிப்பான பொருளை மட்டும் எடுத்துக் கொண்டு பேசுவது நல்லதென்று நினைக்கிறேன். இந்தப் போக்குவரத்தை நாட்டுடைமையாக்குவது என்பதை மட்டும் எடுத்துப் பேசி, பிறகு நேரம் இருந்தால், அதற்குத் தகுந்த அளவு பேசிக் கொண்டு நிறுத்தலாம் என்று நினைக்கின்றேன்.

நிதி நிலை அறிக்கையில் 15-வது பாராவில், "இவ் வரவு-செலவுத் திட்டம் செயல்படுத்த முற்படும் அரசின் மற்றொரு முக்கியக் கொள்கை பஸ் போக்குவரத்தினை நாட்டு உடைமையாக்குவதாகும்" என்று இருக்கிறது. நாட்டுடைமையாக்குவது என்பதைக் கொள்கையாகக் கொண்டு, அதன்பின்பு அதற்கு வழி என்ன என்பதும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. 17-வது பக்கத்தில், "75 மைல்களுக்கும் அதற்கு மேலும் உள்ள பஸ் வழித் தடங்கள் அனைத்தையும் தமிழக அரசு போக்குவரத்துத் துறை மேற்கொள்ள

[திரு. சா. மெய்யப்பன்] [1967, ஜூன் 22

வேண்டுமென அரசு முடிவு செய்துள்ளது” என்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. மேலும், “இந்த பஸ் வழித் தடங்களின் தற்போதைய அனுமதிச் சீட்டுகள் முடிவடையும் தருணத்தில் அவற்றை அரசு மேற்கொள்ளும். தவிர, சென்னை மாநகரிலிருந்து தொடங்குகின்ற அல்லது முடிவுறுகின்ற வழித் தடங்கள் அனைத்தையும் தற்போதைய பஸ் வழித்தட அனுமதிச் சீட்டுகள் முடிவடைந்தவுடன் நாட்டுடைமையாக்க வேண்டுமென்றும் அரசு கருதியுள்ளது” என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கும்போது, நாம் இதுவரை தேசியமயமாக்க வேண்டும் என்பதற்குக் கொண்டிருந்த பொருள், அதற்குரிய இலக்கணம் எல்லாம், மாற்றம் அடைந்திருக்கின்றது என்று நினைக்கிறேன். நாட்டுடைமையாக்குவதென்றால், அந்தச் சமயத்திலே இருந்த பஸ்கள், அந்தச் சமயத்திலே இருந்த பொருள்கள் அத்தனையையும் விலை கொடுத்து வாங்கி, அது சம்பந்தப்பட்ட தொழிலாளிகள் அத்தனை பேருக்கும் வேலை கொடுக்க வேண்டும் என்ற அளவிற்குத் தான் ‘நாட்டுடைமை’ என்பதற்குப் பொருளாக இதுவரை கருதப்பட்டு வந்தது. ஆனால், இப்பொழுது ‘நாட்டுடைமை’ என்று சொல்லி, பஸ்களையும், தொழிலாளிகளையும் அப்படியே விட்டுவிட்டு, அந்த ‘ரூட்’ புதுப்பிக்க வரும் காலத்திலே, அவர்களை அப்படியே வைத்துவிட்டு, பஸ் முதலாளிகள் நஷ்டம் அடையும்படி விட்டுவிடுவது தேசியமயமாக்கும் திட்டம் என்பதிலே வருமா என்பது ஐயப்பாடாக இருக்கிறது. அப்படிச் செய்வது சட்ட பூர்வமாகக்கூட மிகுந்த தவறுதலாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். காரணம் என்னவென்றால், ரூட் என்பதும் பஸ் பர்மிட் என்பதும் இரண்டும் உடலும் உயிரும் போன்றதாகும். உடலை விட்டு உயிர் பிரிந்தாலும், உயிரைவிட்டு உடல் பிரிந்தாலும் எந்த விதமான உபயோகமும் இல்லாமல் போய்விடும். ரூட்களை வைத்துக்கொண்டு, அதற்கு விலை வைத்து, அதற்காகத் தங்களுடைய மதிப்புகளை வைத்து, வெளியில் சென்று கடன் வாங்கி, பஸ்களை நன்றாகப் பார்த்துக் கொண்டால் பஸ் போக்குவரத்து நன்றாக இருக்கும். அதில் கவனம் செலுத்தினால் லாபம் வரும் என்று நினைத்து பஸ் முதலாளிகள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். இனிமேல் அவர்களுடைய கதி என்ன, அவர்களுக்குக் கடன் கொடுத்தவர்களுடைய கதி என்ன, என்று தெரியாமல் இருக்கிறார்கள். உடலும் உயிர் போன்ற பஸ் ரூட்களை விட்டுவிட்டு பஸ் என்கிற [illegible] வைத்துக் கொண்டு என்ன செய்வது? பர்மிட் கொடுக்கப்படும்போது, சட்டப்படி அவர்களுக்கு உரிமைகள் இருக்கின்றன. நாச்சுரல் ஜஸ்டிஸ், ஈக்விடி, குட் கான்ஷியன்ஸ் என்ற மூன்று விஷயங்கள் இருக்கின்றன. இந்த மூன்று தாத்பரியங்களுக்கும் ஆகிய தமிழில் வார்த்தைகள் எனக்கு அவ்வளவாகத் தெரியாவிட்டாலும், எனக்குத் தெரிந்த தமிழில் சொல்ல வேண்டுமானால், இயற்கையான ஒரு நியாயம், சாத்தியம், சரியான மனச்சாட்சி என்று சொல்லலாம். இந்த மூன்றையும் அடிப்படையாகக் கொள்ள வேண்டும். பர்மிட் கொடுக்கும் அதிகாரி எப்படி இருக்க வேண்டும் என்றால், நன்று



1967, ஜூன் 22] [திரு. சா. மெய்யப்பன்]

டைய இச்சைப்படி, நீதியைப் பொறுத்த மட்டில் க்வாசி ஜுடிஷியல் அதாரிடியாக இருக்க வேண்டும். அதில் அவர் கொள்ள வேண்டிய கொள்கை, ஜஸ்டிஸ், ஈக்விடி, குட் கான்ஷியன்ஸ் என்ற மூன்றுமாகும். அப்படிப் பார்க்கும்போது, அவர்கள் சட்டப்படி பர்மிட் கொடுக்க வேண்டும் என்று இருக்கும்போது, அந்த பர்மிட் கொடுப்பதற்காக என்ன என்ன வரையறைகள் உள்ளன என்று நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றன. சட்டத்திற்குட்பட்டு சில விதிமுறைகள் இருக்கும்போது, சட்டத்திற்குப் புறம்பாகச் செய்தால், ரூட்களுக்குப் பர்மிட்டைப் புதுப்பிக்கக் கூடிய காலத்தில், அதை நிறுத்த வேண்டும் என்று செய்தால், சட்டப் பேரவையைப் பற்றி வெளியிலே என்ன பேசுவார்கள் என்பதைக் குறித்து எனக்கு ஐயப்பாடாக இருக்கிறது. இங்கே சட்டம் பிழைக்கக் கூடாது என்கிறார்கள். மற்றும் ஏற்கெனவே இருந்த அளவைப் பார்க்கிறபோது, பஸ் ஓனர்கள் அதிகமாக இருக்கிறார்கள். இன்றைக்குப் பஸ்களை தேசிய மயமாக்க வேண்டுமென்றால் அவர்களுக்கு எந்தவிதமான பயமும் இல்லாமல், குறைபாடும் இல்லாமல் நஷ்ட ஈடு கொடுத்துவிட்டு வாங்கிக் கொள்ள வேண்டும். பஸ்களை தேச உடைமையாக்க வேண்டுமென்று சொல்லும்போது, அந்த பஸ் ஓனர்களும் நம்முடைய மக்களே; அவர்களும் தமிழக அரசின் மக்களே; அவர்களுக்கு எவ்விதக் கோளாறும் ஏற்படக் கூடாது என்று எண்ணி நம்முடைய அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு விளக்கமாக ‘மோட்டார் வெகிக்கிள்ஸ் ஆக்ட், 58-வது செக்ஷன்படி,

“A permit other than a temporary permit issued under Section 62 shall be effective without renewal for such period, not less than three years and not more than five years, as the Regional Transport authority may in its discretion specify in the permit ......”

‘A permit may be renewed on an application made and disposed of as it were an application for a permit.’

ஆகவே, பர்மிட்டை புதுப்பித்தலுக்கு (ரென்யூவல்) என்னென்ன லட்சணம்? அந்த லட்சணங்கள் கொண்டு என்ன செய்ய வேண்டுமென்று கூற அப்பலேட் அதாரிடி இருக்கிறது. அதற்கும் மேலாக நம்முடைய சட்டமன்றம் இருக்கிறது. ஆனால் அந்த சட்டமன்றத்தில் அவர்கள் இதைச் செய்ய முடியாது. நிர்வாகத் துறையிலே மாற்றம் செய்யலாமே யொழிய சட்டத்தை மாற்றிவிட முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதற்கு ஆதாரமாக 1964-ம் ஆண்டு சுப்ரீம் கோர்ட்டில் நடந்த வழக்கில் 1578-ம் பக்கத்தை நம்முடைய அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அந்தப் பக்கத்தைப் பார்க்கும்போது,

‘In interpreting Section 43A, it would be legitimate to assume that the legislature intended to respect the basic and elementary postulate of the rule of law, that in exercising their authority and in discharging their quasi-judicial function the Tribunals constituted under the Act must be left absolutely free to deal with the matter according to their best judgment. It is

of the essence of fair and objective administration of law that the decision of the Judge of the Tribunal must be absolutely unfettered by any extraneous guidance by the executive or administrative wing by the state. If the execusive of discretion conferred on a quasi-judicial tribunal is controlled by any such direction, that forges fetters on the exercise of quasi-judicial authority and the presence of such fetters would make the exercise of such authority completely inconsistent with the well accepted notion of judicial process. It is true that law can regulate that exercise of judicial powers . . .

' other important consideration why section 43A should not be interpreted as authorising the Government to issue orders and directions in exercise of their judicial and quasi-judicial powers, indicated, '

என்று இருக்கிறது. ஆகையால் இதைப் பார்க்கும்போது, சட்டத்தைப் பொறுத்தமட்டில், சுப்ரீம் கோர்ட்டிலே இதேமாதிரியான சிக்கல்கள் நிறைய எழுப்பப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது சட்ட மன்றமே இதைச் செய்யக் கூடாது என்று தெரிகிறது. டிரான்ஸ்போர்ட் அதாரிடி அதற்கென்று இருக்கும்போது நாம் ரென்யூவலை கட் பண்ண வேண்டும், வெட்ட வேண்டுமென்று சொன்னால் அது சட்டத்திற்குப் புறம்பாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, பேரணியைப்பற்றி நாம் ஒன்றும் சொல்ல வேண்டிய நிலைமையில் இல்லை. பேரணி, பேரணி என்று முன்பு சிலர் சொல்லிச் சொல்லி வந்தார்கள். இப்பொழுது சீரணி என்று சொல்கிறோம். இங்கு நமக்கு வேண்டுவது எல்லாம் சீரணியே ஆகும். அதன்மூலமாக நாம் நம்முடைய நாட்டு வளத்தையும் பெருக்கி, நமது சட்ட மன்றத்தின் மதிப்பையும் உயர்த்தி நல்ல பயன் அடைய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சட்டமன்றம் டிரான்ஸ்போர்ட் போக்குவரத்தை நன்கு கவனிக்கும் என்று கூறி, அவைத் தலைவருக்கு நன்றி கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. மு. ச. சிவசாமி:** அவைத் தலைவர் அவர்களே, 1967-68-வது ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இன்றைய அரசாங்கத்தின் 1967-68-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை இந்த மன்றத்தில் ஒரு சிலர் ஆதரிக்காவிட்டாலும்கூட, பெரும்பகுதியான உறுப்பினர்கள் ஆதரிக்கின்ற நிலையை கடந்த மூன்று தினங்களாகச் சட்டமன்றத்தில் நடக்கின்ற பேச்சுக்களின் மூலம் கண்டறிகிறோம். தமிழகத்திலுள்ள தினசரி ஏடுகளில், ஒரு தினசரி ஏட்டைத் தவிர மற்ற அத்தனை ஏடுகளும் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி எழுதியிருப்பதிலிருந்தே இந்த தமிழக அரசின் நிதி நிலை அறிக்கை மக்களால் நல்ல முறையில் ஏற்கப்படும், என்பது சொல்லாமலேயே விளங்கும். நிலத்தீர்வையை ரத்து செய்திருப்பதைப்பற்றி எதிர்க்



கட்சி உறுப்பினர்கள், இது புஞ்சை நிலத்திற்கு மாத்திரம்தானா? நஞ்சை நிலத்திற்கு இல்லையா? நாங்கள் ஆட்சிக்கு வந்திருந்தால் அதை ரத்து செய்திருப்போம்" என்று கூறினார்கள். "அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா" என்ற பழமொழியைப் போல்தான் இருக்கிறது. . இருபது ஆண்டுக் காலமாக இந்த நாட்டை ஆண்டு வந்த அவர்கள்—இருபது ஆண்டுகளிலே புஞ்சை நிலத்திற்குத் தீர்வையைப் ரத்து செய்யாமல், நாங்கள் ஆட்சிக்கு வந்திருந்தால் ரத்து செய்வோம் என்று கூறுவதிலே பொருள் இருக்கிறதா என்றால் இல்லையென்றே சொல்ல வேண்டும். இன்றைய அரசாங்கம் புஞ்சைத் தீர்வையை ரத்து செய்திருப்பதன் மூலம் தமிழகத்தின் சரித்திரத்தில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. நாம் தமிழக சரித்திரத்தை எடுத்துப் பார்ப்போமானால், பாண்டிய மன்னர்கள் ஆண்ட காலத்தில் செய்யாத காரியத்தை, பின்னால் வந்த நாயக மன்னர்கள் செய்யாத காரியத்தை--பின்னால் நவாப்புகள் செய்யாத காரியத்தை வெள்ளைக்காரர்கள் செய்யாத காரியத்தை—காங்கிரஸ் செய்யாத காரியத்தை, திராவிட முன்னேற்றக் கழகம் செய்திருப்பது இந்நாட்டு சரித்திரத்தில் முக்கிய இடம் பெறக்கூடிய பிரச்சினையாக இருப்பதை எல்லோரும் வரவேற்றிருக்க வேண்டும். ஆனால் என்ன காரணத்தினாலோ பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு வரவேற்க மனம் வரவில்லை. என்றாலும் கூட நாட்டு மக்கள் நல்ல முறையில் இதை வரவேற்றிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறோம். கடந்த பத்தாண்டுகளாக ஜனநாயக சோஷலிசம், ஜனநாயக சோஷலிசம் என்று பேசப்பட்டு வந்ததே, அந்த சோஷலிசத் தத்துவத்தின் அடிப்படையில்தான் இன்றைய தினம் அரசாங்கம் தனியார் பஸ்களையும் நாட்டுடமையாக்க முன் வந்திருக்கிறது. உண்மையில் ஜனநாயக சோஷலிசம் இந்த ஆட்சியில்தான் இருக்கிறதே தவிர, முந்தைய அரசாங்கத்தில், ஜனநாயக சோஷலிசம் என்பது வார்த்தை அளவில்தான் பேசப்பட்டதே தவிர, செயல் அளவில் நடைமுறைக்கு வரவில்லை. இந்த நிதி நிலை அறிக்கை உண்மையான ஜனநாயக சோஷலிசத்தை நிலைநாட்டுகிறது; இன்னும் நிலை நாட்டும் என்பதுதான் இதன் முக்கிய பொருள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ளுகிறேன்.

அதேபோல்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பின்தங்கிய மக்களுக்கும், கல்லூரிகளில் படிப்பதற்கு 1,500 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக் கெல்லாம் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. இருபது ஆண்டுக் காலமாகச் செய்ய முடியாததை ஏழைப் பிள்ளைகள், தொழிலாளர்களுடைய பிள்ளைகள் இலவசமாகப் படிப்பதற்கு நிதி நிலை அறிக்கையில் நல்ல முறையில் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். என்றாலும் கூட நம்முடைய பெருமதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஸ்காலர்ஷிப்

வழங்குவதில் மத பாகுபாடற்ற முறையில், கிறிஸ்தவ மாணவர்களுக்கும் கிடைப்பதற்கு இதில் வகை செய்ய வேண்டுமென்று மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதுபோல நமது நிதிநிலை அறிக்கையில் முப்பத்தாறு லட்சத்து
ந. ப. 12-00 எண்பத்து நான்காயிரம் ரூபாய் பல்கலைக் கழகங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் சென்னை பல்கலைக் கழகத்திற்கு 19 லட்சம் ரூபாயும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு பதினொரு லட்சத்து எண்பத்து நான்காயிரம் ரூபாயும், மதுரை பல்கலைக் கழகத்திற்கு 6 லட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நான் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களை மிகமிகப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். எங்கள் பகுதியில் இருக்கிற மதுரைப் பல்கலைக் கழகம் குழந்தைப் பருவத்தில் இருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகமும், அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் வாலிபப் பருவத்தில் இருக்கின்றன. இரண்டாண்டு நிலையிலேயே வளர்ந்த குழந்தைப் பருவத்தில் இருக்கிற மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு அருள்கூர்ந்து 6 லட்சம் என்பதை 10 லட்சமாகவாவது உயர்த்திக் கொடுத்தால் தான் தென்பகுதியில் உள்ள மாணவர்கள் இன்னும் நல்லமுறையில் படிப்பதற்கு ஏற்ற வசதி இருக்கும். அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று மிக மிகப் பணிவுடன் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள், "சிரணிப் படை வேண்டாம், ஊரணிப் படை வேண்டும்" என்றார்கள். ஊரணிகள் இருக்கின்றன. இருந்தாலும் கவனிப்பாரற்றுக் கிடக்கின்ற அவற்றைச் செப்பனிட சிரணிப் படை இருந்தால் தான் ஊரணிகளில் தண்ணீர் வந்து சேர்ந்து நிரம்ப முடியும். இருக்கின்ற ஊரணிகளைச் செப்பனிடுவதற்காகவாவது சிரணிப்படை தேவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோல இன்னொரு உறுப்பினர் கூறினார்கள், சிரணிப் படை என்பது குழி தோண்டிப் புதைக்கப்பட்ட திராவிட நாட்டுப் பிரச்சினையைக் கொண்டுவருவதற்காக என்று கூறினார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியாளரின் அடக்குமுறைக்குப் பயந்தோ, பயமுறுத்தல்களுக்குப் பணிந்தோ திராவிட நாட்டுப் பிரச்சினையைக் கைவிடவில்லை. நாங்களாகவே கைவிட்ட பிரச்சினை அது. நாங்களாகவே கைவிட்ட பிரச்சினைக்கு உயிரூட்ட சிரணிப் படையைக் கொண்டு வர வேண்டிய நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்னும் கூறுவேன். அந்தச் சிரணிப் படையின் நோக்கத்தை, அதன் தத்துவத்தைக் கூர்ந்து பார்க்காத நிலையில் தான் இவ்வாறு கூறினார்கள் என்று நான் கருதுகிறேன். நமது முதல் அமைச்சர் அவர்களுடைய நிதி நிலை அறிக்கையில் சிரணிப் படையில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் மாத்திரம் தான் இருக்க வேண்டுமென்று இருக்கிறதா என்றால் இல்லை. யார் யார் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்ற நிலை இருக்கிறதா என்றால் இல்லை.



திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள்
சிரணிப் படையில் திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள்
சேரலாம். காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் சேரலாம். கம்யூனிஸ்ட்
கட்சித் தொண்டர்கள் சேரலாம். இப்படிப்பட்ட தன்மை இருக்கிற
போது அவர்கள் திராவிட நாட்டுப் பிரச்சினையோடு இதை
முடிச்சிப்போட்டு நாட்டு மக்கள் மத்தியில் தவறான கருத்தை
உண்டாக்கச் செய்கிற தவறான பேச்சு இது என்று தெரிவித்துக்
கொள்கிறேன். சிரணிப்படைக்காக பத்து லட்சம் ரூபாய்
ஒதுக்கப்பட்டிருக்கிறதே என்றார்கள். இந்தத் தொகை எதற்
காக ஒதுக்கப்பட்டுள்ளது ? மாதம் ஒன்றுக்கு இவ்வளவு சம்பளம்
என்பதாக சிரணிப் படையைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுப்பதற்
காக ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. தங்களுடைய
ஓய்வு நேரத்தில் இந் நாட்டு நலனுக்காகப் பணி செய்ய வருகிறவர்
களுக்குத் தேவையான கருவிகள் கொடுப்பதற்காக இந்தத் தொகை
ஒதுக்கப்பட்டிருக்கிறது. தூர்ந்து கிடக்கிற குளங்கள், ஏரிகள்,
கால்வாய்கள் இவற்றைச் செப்பனிட ஊதியம் இல்லாமல் அவர்கள்
வேலை செய்ய முன் வருகிறபோது இந்தக் கருவிகளைக் கொடுத்து
வேலை செய்யச் சொல்வதற்குத்தான் இது ஒதுக்கப்பட்டிருக்கிறது.
அப்படி இருக்க இல்லாததை இருப்பதாகக் கற்பனை செய்து
கொண்டு பேசுவது சரியல்ல என்று நான் அவர்களுக்குக் கூறிக்
கொள்ள விரும்புகிறேன்.

நிதி நிலை அறிக்கையில் இந்த ஆண்டு குடி தண்ணீர் திட்டத்
திற்காக ஒரு கோடியே எண்பது லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்
கிறது. இந்தத் தொகை போக இன்னும் ஒரு கோடி ரூபாய்
இருக்கிறது. நான் அரசாங்கத்திற்குப் பணிவுடன் தெரிவித்துக்
கொள்கிறேன். நெல்லை மாவட்டத்தில் உள்ள கோவில்பட்டி
நகரம் வெகுவேகமாக வளர்ந்து வருகிற நகரம். அங்கே குடி
தண்ணீர் பிரச்சினை மிகக் கடுமையாக இருக்கிறது. சுற்றுப்
புறங்களில் இருந்து சைக்கிள்களிலும், வண்டிகளிலும் கொண்டு
வந்து தண்ணீரை உபயோகப்படுத்துகிறார்கள். பதினைந்து,
இருபது ஆண்டுகளாகவே அந்த நகரத்தினுடைய குடி தண்ணீர்
பிரச்சினையைத் தீர்த்துக் கொடுக்க வேண்டுமென்று அங்குள்ள
மக்கள் கட்சிப்பாகுபாடின்றி அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு
வந்தும் இன்னும் ஒன்றும் செய்யவில்லை. எனவே முதல் அமைச்
சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால் ஒரு
கோடி எண்பது லட்சத்தில், எஞ்சியிருக்கிற ஒரு கோடியில்
கோவில்பட்டிக்கு குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க முதலிடம்
கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அதுபோல் நான் பிரதிநிதித்துவம் வகிக்கிற சாத்தூர்குடி
நகரம் வெகுவேகமாக வளர்ந்து வருகிற நகரம். அங்கே 90
லட்சம் ரூபாயில் துறைமுகத்திற்கும், நகரத்திற்கும் குடி தண்ணீர்
வசதிக்கான திட்டம் அமுலாக்கப்படுகிறது. அதை வெகு துரித
மாக நிறைவேற்றத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டு

மென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். தூத்துக்குடியில் அமைப்பதாக இருந்த அனல் மின்சாரத் திட்டம் கைவிடப்படக் கூடிய நிலையில் இருக்கிறது. தூத்துக்குடி துறை முகத் திட்டமும் கைவிடப்படும் நிலையில் இருக்கிறது. இந்தியாவி லேயே நவீன துறைமுகம் என்ற முறையில் முதன்முதலாக 1863-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட துறைமுகம் இந்தத் தூத்துக்குடி துறைமுகம் தான். அதற்கு மறு ஆண்டு 1864-ஆம் ஆண்டில் பம்பாயில் இரண்டாவதாக நவீன துறைமுகம் அமைக்கப்பட்டது. 1865-இல் தான் சென்னையிலும், கல்கத்தாவிலும் நவீன துறை முகம் அமைக்கப்பட்டது. ஆனால் இந்தியாவில் முதன் முதலாக தூத்துக்குடியில் ஆரம்பிக்கப்பட்ட நவீன துறைமுகம் அதே நிலை யில் இருக்கிறது. ஆனால் அதற்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட பம்பாய், கல்கத்தா, சென்னை துறைமுகங் கள் பிரும்மாண்டமான முறையில் வளர்ச்சி அடைந்துவிட்டன. தூத்துக்குடி துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதாக டெல்லிக்குப் பல தூதுகோஷ்டிகள் போய் இருக் கின்றன. அதன்பேரில் அவர்கள் அமைத்த நஞ்சுண்டையா கமிட்டி, இராமசாமி முதலியார் கமிட்டி, பொருளாதார நிபுணர் லோகநாதன் கமிட்டி ஆகியவை எல்லாம் இதைப் பரிசிலனை செய்து திட்டமிட்டதின்பேரில் 22½ கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். அந்த 22½ கோடியில் 5½ கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். மூன்று கமிட்டிகள் அமைக்கப்பட்டு பல கோணங்களில் பரிசிலனை செய்து இது கட்டுபடியான துறைமுகம் என்று தீர்மானித்து 22½ கோடி ஒதுக்கி 5½ கோடியும் செலவு செய்தாகிவிட்டது. ஆனால் 1967-68-ஆம் ஆண்டு இந்தத் திட்டத் திற்குத் தேவையான பணம் 5 கோடி ரூபாய். குறைந்தபட்சம் 3 கோடியாவது ஒதுக்கியிருந்தால் தான் அங்கே நடைபெறுகிற வேலைகள் தொடர்ந்து நடைபெறும். ஆனால் மத்திய சர்க்காரில் 1967-68-க்கு ஒதுக்கி இருக்கிற பணம் 50 லட்சம் தான். இந்த ஐம்பது லட்சத்திற்கு ஏப்ரல், மே, ஜூனுக்குள் 45 லட்சம் ரூபாய் செலவாகிவிட்டது. எஞ்சியிருக்கிற பணம் ஐந்து லட்சம் தான். இந்த ஐந்து லட்சத்தைக் கொண்டு எந்தவிதமான வேலையும் செய்ய முடியாது. மத்திய சர்க்கார் உடனடியாக மேற்கொண்டு தொகை ஒதுக்காவிட்டால் அங்கேயே வேலை செய்து கொண்டு வருகிற இரண்டாயிரம் தொழிலாளர்கள் இன்னும் 15 தினங்களில் வீட்டிற்குப் போக வேண்டிய நிலைதான் இருக்கிறது. நமது மாநில அரசாங்கம் இதை ஆழ்ந்த கவனத்தோடு பரிசிலனை செய்து இதற் காகக் கிளர்ச்சிகூட நடத்த வேண்டும் என்ற நிலையை மேற்கொண் டிருப்பதற்காக நான் தூத்துக்குடி பிரதிநிதி என்கிற முறையில் மனமாரப் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். மத்திய சர்க்கார் பணம் இல்லை, பணம் இல்லை என்று சொல்கிறார்கள். நான்காவது திட்டத்தில் துறைமுகத்திற்கு 234 கோடி ரூபாய் ஒதுக்கியிருக் கிறார்கள். தூத்துக்குடி துறைமுகத்திற்கு இன்னும் தேவைப் படுவது 17 கோடி ரூபாய் தான். 234 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்





பதில் இந்தப் 17 கோடி ரூபாயை ஒதுக்கித் தருவது பெரிய காரியம் அல்ல. பணம் இல்லை என்று சொல்வதற்கு அர்த்தமில்லை. எனவே இந்த அரசாங்கம் தூத்துக்குடி துறைமுகத்தை நிறை வேற்றித்தர எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருப்பதற் காக நான் மனமார நன்றி தெரிவித்து வரவேற்கிறேன்.

கொள்முதலைப்பற்றிப் பேசும்பொழுது, இந்த பட்ஜெட் பேச்சை துவக்கி வைத்த ஒருவர் பேசுகின்றபொழுது சிவத்தையா புரத்தில் போலீசார் ஒரு விவசாயியை ஹிம்சைப் படுத்தி நெல் அளந்தார்கள் என்று சொன்னார்கள். "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு" என்பது குறள். அங்கே நடந்தது என்ன? ஒரு விவசாயி நெல்லை கொள்முதலுக்காக அளக்கவே இல்லை. அவரை நெல் அளக்க வேண்டுமென்று ரெவின்யூ இன்ஸ்பெக்டரும், தாசில்தாரும் போய்க் கேட்டபொழுது, இப்பொழுது வந்திருக்கிற தி.மு.க. அரசாங்கத்திற்கு, அண்ணாதுரை அரசாங்கத்திற்கு நெல் அளக்கவே முடியாது என்று சொல்லிவிட்டார். அவரிடம் கொள் முதல் செய்வதற்காக ஒரு நோட்டீஸ் ஒட்டினார்கள். ஆனால் ஒட்டிய நோட்டீசை அவர் கிழித்து எறிந்து விட்டார். கிழிக்காதீர்கள் என்று ரெவின்யூ இன்ஸ்பெக்டர் தடுத்தபோது அவரை அடிக்கப் போயிருக்கிறார். அந்த அதிகாரிகள் பயந்து போய்விட்டார்கள். ரெவின்யூ இன்ஸ்பெக்டரும், தாசில் தாரும் உடனே சப்-இன்ஸ்பெக்டரிடம் சென்று கம்ப்ளெயின்ட் செய்தார்கள். 'ஏன் சர்க்கார் அதிகாரிகள் கொள்முதல் செய் வதற்குத் தடங்கலாக இருக்கிறீர்கள்? ஏன் பலாத்காரத்தை உபயோகிக்கிறீர்கள்?' என்று கேட்கிறார். ஆனால் அப்படிக் கேட்ட அந்த சப்-இன்ஸ்பெக்டரையும் அரிவாளால் வெட்ட வருகிறார் அந்த ஆள். அவர் இதற்கு முன்பு கொலை செய்து தண்டனையாகி சமீபகாலத்தில்தான். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாகத்தான் விடுதலையாகி வெளியே வந்தவர். ரெவின்யூ இன்ஸ்பெக்டர், தாசில் தார் இவர்களை அடிக்கப் போகும்பொழுது, போலீசார் கையைக் கட்டிக்கொண்டு இருப்பார்களா, நடவடிக்கை எடுக்கமாட்டார் களா? அவர் இதற்கு முன்பும் 6, 7 ஆண்டுகளாக எந்தவிதமான லெவியையும் அளக்கவில்லை. நடந்த காலத்தைப்போல் இந்த ஆண்டும் நெல் அளக்காமல் இருக்கலாம் என்று நினைத்துக் கொண்டுதான் அவர் அப்படி உருட்டினார், மிரட்டினார். இதைப் பிரமாதப்படுத்தி விடலாம் என்று காங்கிரஸ்காரர்கள் நினைத்திருப் பார்கள். அதற்காகத்தான் ஊர்வலம் கூட நடத்தினார்கள். அதில் சென்றவர்கள் 300 பேர்கள்தான். உண்மையிலேயே போலீஸ் காரர்கள் செய்தது தவறு என்றால் ஆயிரக் கணக்கான மக்கள் அல்லவா ஊர்வலத்தில் சென்றிருப்பார்கள். 300 பேர்கள் தானே சென்றார்கள். அதற்குப் பதிலாக சர்க்கார் எடுத்த நடவடிக்கை சரியானதுதான் என்பதற்காக 3 ஆயிரம் பேர்கள் ஊர்வலம் சென்றார்கள். இது ஒன்றே போதும் சர்க்கார் செய்தது சரி என்ப தற்கான அத்தாட்சி. இந்த நிதி நிலை அறிக்கை சோஷலிசத்தைக்

கொண்டுவருகிற அறிக்கை, ஏழை மாணவர்களுக்குக் கல்வி பயில்வதற்காகச் சலுகைகள் அளிக்கின்ற நிதி நிலை அறிக்கை, பாம்பரை பாம்பரையாகப் பெற்று வந்த நிலவரியை ரத்து செய்த நிதிநிலை அறிக்கை. எனவே இதை ஏழை மக்களுடைய பட்ஜெட், தொழிலாளர்களுடைய பட்ஜெட் என்று கூறிக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. பி. வேலுசாமி : சபைத் தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கை சம்பந்தமாகச் சொல்லும்பொழுது, இதுவரையில் 20 ஆண்டுகளாகச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் எல்லாம் நிறைந்த அனுபவம் பெற்றவர்களே, ஆற்றல் பெற்றவர்களே சமர்ப்பிப்பது வழக்கமாக இருந்தது. ஆனால் இந்த ஆண்டு வழக்கமாக இருப்பதற்கு மாறாக அனுபவத்திலே மிகவும் குறைந்தவர்களாலே, குறைந்த நாட்களிலே ஒரு நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இருபது ஆண்டுகளாக வழக்கமாகச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையையும், இந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையையும் கூர்ந்து பார்க்கின்ற காலத்தில் ஜனநாயக சோஷலிச வழிகளைப் பின்பற்றுவதாகச் சொல்லிக் கொண்டு இருந்தவர்கள் வரிகளைப் போட்டதற்கும், பிரச்னையை அணுகியதற்கும், புதிய அமைச்சரவை வரிகளைப் போடுவதற்கும், பிரச்னைகளை அணுகியதற்கும் முறையிலே நேர்மாறான தன்மை இருப்பதைப் பார்க்கிறோம். ஜனநாயகத்தைப் பேசியவர்கள், சோஷலிசத்தைப் பற்றி அதிகமாகச் சொல்லிக் கொண்டிருந்தவர்கள் செய்து காட்டியதைக் காட்டிலும் ஜனநாயகத்தைச் செய்து காட்டியவர்கள், சோஷலிசத்தைப்பற்றிக் குறைவாகப் பேசியவர்கள் இன்றைக்குப் பிரச்னைகளை அணுகுகின்ற முறை ஒரு புதிய முறையாகத்தான் இருக்கிறது. வரிகள் கொடுப்பதற்கு யார் தகுதியுடையவர்கள், வரிகள் கொடுப்பதற்குச் சக்தியற்றவர்கள் யார் என்பதைத் தீர்மானித்து யாரிடத்திலே வசூலிப்பதற்குச் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன, யாரிடத்திலே வசூலிப்பதற்குச் சந்தர்ப்பங்கள் குறைவாக இருக்கின்றன என்பதைப் பார்த்து வரிகள் போடப்பட்டிருப்பது சரியான சோஷலிசக் கண்ணோட்டத்தோடு நிறைவேற்றப்பட்டிருக்கிறது இந்த நிதி நிலை அறிக்கையில் என்பதுதான் எங்கள் கருத்து. மூன்று மாதங்கள் அனுபவம் உடைய இந்தச் சர்க்கார் இவ்வளவு சரியான ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்து இருக்கிறார்கள் என்று சொன்னால் வருகின்ற ஐந்து ஆண்டுகளுக்குள் [illegible] ஒரு வித்தாக தமிழகம் சிறப்பாக இருக்கும் என்ற நிலையைக் கொண்டுவரும் என்பதைப்பற்றிச் சந்தேகமே இல்லை. அதற்கான முறைகளை இந்தச் சர்க்கார் கையாண்டு நிறைவேற்றும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது.

அடுத்தபடியாக, நிலச்சீர்திருத்தம் சம்பந்தமாக எடுத்துக் கொண்டால் புஞ்சை நிலங்களிலே வேலைசெய்கிறவர்கள் வரி செலுத்துவதற்குச் சாத்தியக்கூறுகள் குறைவாக இருக்கின்றன,



அவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கவேண்டுமென்ற முறையில் இந்தச் சர்க்கார் அந்தப் பிரச்னையை அணுகியது சோஷலிஸத்திற்கு ஒரு சரியான வழியாக இருக்குமென்று கருதுகிறேன். அதோடு மட்டுமல்ல, குறைந்த வருவாய் உள்ளவர்கள் அவர்களுடைய குழந்தைகளுக்குக் கல்வியளிக்கச் சரியான வாய்ப்புக்கள் ஏற்படாமல் இருக்கக் கூடாது என்ற அளவிலே சாதாரணமாக ஏழைக் குழந்தைகளுக்குப் படிப்பதற்கு வசதி செய்து கொடுக்கக் கூடிய முறையில் வருவாய் வரம்பை இரண்டாயிரமாக உயர்த்தியிருப்பது சிறப்புதான், இருந்தாலும் அதை இன்னும் இரண்டாயிரத்து ஐந்நூறு அளவிற்கு நியமித்து இருந்தால் அது இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என்பது என்னுடைய கருத்து. இரண்டாயிரம் என்பது சிறப்பு, இரண்டாயிரத்து ஐந்நூறு என்பது இன்னும் சிறப்பாக இருக்கும்.

அடுத்தபடியாக, வரிகள் சம்பந்தமாகச் சொல்லுகின்ற பொழுது, சர்க்கார் தொழில்கள் நடத்துவது சம்பந்தமாக ஒரு நண்பர் குறிப்பிட்டு இருக்கிறார். நாம் எல்லாம் கசாப்புக் கடை வைத்தால் நன்றாக இருக்கும், முட்டைக் கடை வைத்தால் நன்றாக இருக்கும். எத்தனை கோழி வளர்த்தால் எத்தனை முட்டைகள் கிடைக்கும், எத்தனை ஆடுகள் வைத்திருந்தால் எத்தனை கசாப்புக் கடைகள் வைக்கலாம் என்றெல்லாம் சொன்னார்கள். அவர்கள் டீ கடையைப் பற்றிச் சொல்லியிருக்கலாம். டீ கடைகளையெல்லாம் அரசாங்கமே ஏற்று நடத்தினால், ஒரு டீ கடைக்கு 5,000 ரூபாய் வரை கிடைக்குமே, இப்படியே மாநிலம் முழுவதிலுமுள்ள டீ கடைகளை அரசாங்கம் நடத்தினால், அதன்மூலம் கிடைக்கின்ற வருவாயைக் கொண்டு, இந்த மாநிலத்தின் பட்ஜெட்டையே வரிகளைப் போடாமலே தயாரித்துவிடலாமே என்று அவர்கள் சொல்லுவார்கள் என்று தெரிகிறது. மைசூர் மாநிலத்தை எடுத்துக் கொண்டால் அங்கே கசாப்புக் கடை வைத்திருக்கிறார்களா, முட்டைக் கடை வைத்திருக்கிறார்களா என்று தெரியவில்லை, அதேபோல் ஆந்திர மாநிலத்தை எடுத்துக் கொண்டாலும்கூட அவ்வாறு கசாப்புக் கடையும், முட்டைக் கடையும் வைத்திருக்கிறார்களா என்று தெரியவில்லை. ஆகவே அண்டை மாநிலங்களில் உள்ள நிலைமையைக் கூர்ந்து கவனித்துச் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். இங்கு 80 பஞ்சாலைகள் இருக்கின்றன. சிமின்ட் பாக்டரிகள் இருக்கின்றன, அலுமினியம் பாக்டரிகள் இருக்கின்றன, ரேயான் பாக்டரிகள் இருக்கின்றன. இரும்புத் தொழிற்சாலைகள் இருக்கின்றன, பெரிய பெரிய தொழிற்சாலைகள், கோடிக்கணக்கான பணம் வருவாய் தருகின்ற தொழிற்சாலைகள் சென்னை மாநிலத்திலே இருக்கின்றன. கோயம்புத்தூரில் உள்ள ஒரு தொழிற்சாலையின் வருவாய், மூலதனக் கணக்கை எடுத்துப் பார்த்தால் இரண்டரைக் கோடி ரூபாய் வருவாய் வந்திருப்பதாகத் தெரிகிறது. ஆகவே பெரிய பெரிய கனரகத் தொழில்கள், சிமின்ட் பாக்டரிகள், இரும்புத் தொழிற்சாலைகள், மெஷினரி

தொழில்கள் இவற்றை உடனடியாகத் தேசிய மயமாக்கி அதனால் பெறுகின்ற லாபத்திலே நாட்டு மக்களுக்கு வாழ்வை அளிக்கின்ற முயற்சியை இந்த அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருப்பார்களானால் அவர்களைப் புகழலாம்; போற்றலாம். ஆனால், அப்படிச் சொல்லாமல் அதற்குப் பதிலாக முட்டைக் கடை, காப்புக் கடை வை என்று சொல்வது கேலி செய்வதைப் போல்தான் இருக்குமென்று கருதுகிறேன்.

கள்ளுக்கடை சம்பந்தமாக எனக்கு ஒரு சந்தேகம். மற்றைய மாநிலங்களில் இருந்து வருகிற பலரும் இந்த மாநில முதலமைச் சரைப் பார்த்து 'உண்மையான காந்தியவாதியாக இருக்கிறார்கள்' என்று சொல்லுகிறார்கள். இவ்வாறு சொல்லுகிறவர்கள் எல்லாம் அவர்களுடைய மாநிலத்திலே கள்ளுக் கடையை வைத்திருக் கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** மற்ற மாநிலங்களைப் பற்றிய குறைகளை இந்த அவையில் சொல்ல வேண்டாம்.

**திரு. பி. வேலுசாமி:** நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த மாநிலத்தில் கள்ளுக் கடையைத் திறக்காமல் இருந்தால் அண்டையில் உள்ள ஆந்திரம், கேரளம், கர்நாடகம் போன்ற இடங்களுக்கு நம்முடைய தமிழ் மக்கள் சாரி சாரியாகச் சென்று நமது பணத்தைக் கொடுத்துக் கொண்டிருப்பதன் மூலம் அவர்களுக்கு வருமானம் அதிகம் வரும் என்ற காரணத்தால் 'இவர் காந்தியவாதி' என்று சொல்லுகிறார்களோ என்ற ஐயப்பாடு எழுகிறது. ஒருவரைப் புகழுகின்ற போது அவர்களுடைய மாநிலத்தில் சரியாகச் செய்திருந்தால் அதற்கு அர்த்தமும், விவேகமும் இருக்கும். மாறாக அவர்களுடைய மாநிலத்திலே கள்ளுக் கடைகளுக்குத் திறப்பு விழாச் செய்து கொண்டிருக் கிறார்கள். நம்முடைய முதலமைச்சரைப் பொருத்தவரை இந்தக் கஷ்டமான நேரத்திலும் கூட, காந்தியார் வழிகளை, நெறி முறைகளைச் சரியான முறையில் கடைபிடித்து வருவதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அடுத்து, என்னுடைய சில குறைகளைக் கூற விரும்புகிறேன். விவசாயிகள் சம்பந்தப்பட்டவரையில் இனி 12½ எக்கருக்கு மேல் வைத்திருப்பவர்கள் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டுமென்ற முறை வந்திருக்கிறது. இரண்டு தினங்களுக்கு முன்பு கிராம முனிசீப் கரும்புக்கு கம்பு என்று எழுதுவார், கம்புக்குக் கரும்பு என்று எழுதுவார் என்று பேசினார்கள். கிராம முனிசீப்புக்கே அந்த நிலை என்றால் விவசாயி என்ன எழுதுவான்? 12½ எக்கருக்கு மேல் இருக்கின்றவர்களுக்கு பூமியின் மேல் கொஞ்சம் வரியைக் கூட்டி விதித்திருந்தால் கூட செய்கின்ற காரியங்கள் சுலபமாக இருந்திருக்கும். இனி அவர்கள் எல்லாம் கொஞ்சம் படித்தவனை எதிர்பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. கணக்குகளை



எழுதி வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பதிலாக பூமியின் பேரிலே வரி விதிக்கப்பட்டிருந்தால் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.

கிராமங்களில்தான் பொதுவாக பூமிக்கு உச்ச வரம்பு கட்டப்பட்டிருக்கிறது. நகரத்தில் இருப்பவர்கள் எத்தனை லட்சம் சம்பாதித்தாலும் கவலை இல்லை என்ற நிலை இருக்கிறது. நகரத்தில் இருப்பவர்களுடைய வருவாய்க்கு உச்ச வரம்பு கட்ட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தஞ்சை ஜில்லாவில் பூமியை விற்றவர்கள் நகரத்தில் 100 வீடு கட்டி எல்லாவற்றையும் வாடகைக்குக் கொடுத்திருக்கிறார்கள்; வருமானம் வந்து கொண்டிருக்கிறது. மத்திய சர்க்காரில் 98 வீடுகளுக்கு மேல் யாரும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று ஒரு சட்டம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. நம்முடைய சர்க்கார் ஐந்து வீடுகளுக்கு மேல் யாருக்கும் இருக்கக் கூடாது என்று விதித்து விட்டால் சிறப்பாக இருக்கும். நகரப்புறத்தில் இருக்கும் அத்தனை பேருக்கும் வருவாய்க்கு வரம்பு கட்டி குறைந்த பட்ச வருவாய், அதிகபட்ச வருவாய் இவ்வளவுதான் இருக்கவேண்டுமென்று செய்வது சிறப்பாக இருக்கும். கிராமப் புறங்களில் நிலச் சுவான்தார்கள் ஏழை விவசாயிகளைச் சுரண்டுவதைத் தடுக்க வருவாய்க்கு வரம்பு கட்டியதைப் போல் நகரப் புறத்தில் ஏழைத் தொழிலாளிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் வருவாய்க்கு வரம்பு கட்டி ஏழைத் தொழிலாளிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் பொறுப்பை நமது சர்க்கார் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்னை நகரத்தில் இத்தனை வீடுகளுக்கு மேல் வைத்துக்கொள்ளக் கூடாது என்ற வரம்பு கட்டியாக வேண்டும். அவ்வாறு வரம்பு கட்டுவது சிறப்பாக இருக்கும்.

பஸ்களைத் தேசிய மயமாக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி ஜில்லாவில் உள்ள பஸ்களை எல்லாம் தேசிய மயமாக்கப்பட்டிருக்கின்றன. கன்னியாகுமரி மெம்பர்கள் கோபிக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்—அங்கு காசு குறைவாகத்தான் இருக்கிறது. கோவையில் உள்ள பஸ்கள் தேசிய மயமாக்கப்பட்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். அது காசு கூடுதலாக வைத்திருப்பவர்கள் உள்ள மாவட்டம். இரண்டு மாநிலங்கள் அதன் எல்லையில் இருக்கின்றன. மத்தியில் கோவை நகரம் இருக்கிறது. அநேகமாக மற்ற மாவட்டங்களில் பஸ் விட்டு முன்னுக்கு வந்தவர்களைக் காட்டிலும் கோவை மாவட்டத்தில் பஸ் வைத்து நடத்தியவர்கள் சீக்கிரத்தில் வசதி படைத்தவர்களாக ஆனதை நான் பார்த்திருக்கிறேன். ஆகவே, கோவையில் முதலில் பஸ் தேசியமயமாக்கப்பட்டிருந்தால் சிறப்பாக இருக்கும். சர்க்கார் செய்யும் தொழில் சரியாக இருக்காது என்ற பொதுவான கருத்துக்கு மாறாக அந்த மாவட்டத்தில் பஸ் தொழிலை தேசியமயமாக்கியிருந்தால் லாபகரமாக இருந்திருக்கும்.

கல்விக்கு ஸ்காலர்ஷிப் ஜாதி வாரியாகக் கொடுப்பதற்குப் பதிலாக வருவாய் அடிப்படையில் கொடுக்கவேண்டும். தாழ்த்தப்பட்ட சமூகத்தில் இருக்கிறவர்களுக்குக் கூட அதிக வருவாய் வருமானால் அப்பேர்ப்பட்டவர்களுக்கு ஸ்காலர்ஷிப் தேவையில்லை. உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் ஏழையாக இருந்தால் ஸ்காலர்ஷிப் கொடுக்கவேண்டும். ஆகவே, வருவாய் அடிப்படையில் இதை அமைத்தால் சிறப்பாக இருக்கும்.

நான் பஞ்சாலைகள் நிறைந்த பகுதியிலிருந்து வந்தவன், தற்போது ஏழு மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. மேலும் 10 மில்கள் மூடப்படும் நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. தற்போது கூட்டுறவு மில்களை அதிகமாக நிறுவுவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. புதிதாகக் கூட்டுறவு மில்களை ஆரம்பிப்பதற்குப் பதிலாக ஏற்கெனவே மூடப்பட்ட மில்களை சர்க்காரோ அல்லது கூட்டுறவின் மூலமாகவோ எடுத்து நடத்தி அந்தத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். மேலும் மூடப்படும் நிலைமையில் உள்ள மில்களும் மூடப்படாமல் இருப்பதற்கான ஏற்பாடுகளைச் சர்க்கார் எடுத்துக் கொள்ளவேண்டும்.

தற்போது சுமார் 15,000 தொழிலாளிகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து கொண்டிருக்கும் நேரத்தில், மில்களை மூடிக் கொண்டிருக்கும் நேரத்தில் கைத்தறி நெசவாளர்களும் சொல்லொணாத் துன்பத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். உணவுத் துறையிலே விவசாயிகளைப் போல் நெசவுத் துறையில் கைத்தறி நெசவாளர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்கள் நிலை நாளுக்கு நாள் மோசமாகப் போய்க் கொண்டிருக்கிறது. தறிக்காரர்களுக்கு நூல் கிடைக்கவில்லை. உணவுக்கு ரேஷன் கார்டு போல் நூல் விநியோகிப்பதற்கும் கார்டு கொடுத்து நூல் விநியோகிக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு மூலமாக நடத்தப்படுகின்ற ஸ்டோர்களுக்குக் கூட பல இடங்களில் வருவாய் இல்லாமல் இருந்து கொண்டிருக்கின்றன. அது பற்றியும் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். புதிய அமைச்சரவை பொறுப்பேற்று மூன்று மாத காலத்தில் சிறப்பான, சோஷலிஸக் கண்ணோட்டத்தோடு கூடிய ஒரு பட்ஜெட்டைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். சாதாரணமாக முன்பு இருந்தவர்களால் பேசப்பட்டு வந்த ஒரு வார்த்தை என்னவென்றால் சர்க்காரை யாரிடத்தில் கொடுத்து விட்டுப் போவது?' என்பதாகும். யார் இருக்கிறார்கள், இந்த நாட்டிலே யாரும் கிடையாது, ஒரே கட்சிதான் இருக்கிறது, அவர்களுக்கு மட்டும்தான் தகுதியிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். யாரிடம் கொடுப்பது என்பது மட்டுமல்ல, மூன்று மாத அனுபவம் உள்ளவர்கள் இருபது ஆண்டு அனுபவம் உள்ளவர்களை விட சிறப்பானதொரு நிதிநிலை அறிக்கையை தயாரித்து வெளியிட்டு தமிழக மக்களுக்கு ஒரு





உற்சாகத்தையும், ஊக்கத்தையும் தந்து அவர்களுக்கு நம்பிக்கை யூட்டியுள்ள தமிழக முதல் அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத்தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. பி. துரைராஜ்: மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக அரசின் தமிழக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 1967-68-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை ஆதரித்து பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மன்றத்திலே இடைக்கால நிதிநிலை அறிக்கையை வைத்தபோது ஜூன் திங்களில் வைக்கப்படும் நிதிநிலை அறிக்கையானது தமிழகத்திலுள்ள எல்லா மத்தியதரப்பட்ட மக்களுக்கும் நன்மை பயக்கத்தக்க வகையில் இருக்கும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். அதற்கொப்ப தற்சமயம் வைத்துள்ள 1967-68 ஆண்டின் நிதிநிலை அறிக்கையை சீர்தூக்கி பார்க்கும்போது இதுவரை தமிழக ஆட்சியில் காணவாய்ப்பு பெறாத ஒரு நிதிநிலை அறிக்கையை நாம் இன்று பெற்றமைக்காகப் பெருமைப்படுகிறோம்.

மு.ப. 12-

மத்திய அரசுக்கும், மாநில அரசுக்குமிடையே மறைந்து கிடந்த நிதி உதவி உறவுத் தொடர்பு படம் பிடித்துக் காட்டப்பட்டிருக்கிறது. இவ்வளவு இக்கட்டான கடன் சூழ்நிலையில் தமிழகம் இருந்தும் கூட ஏழை மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் நன்மை பயக்கக் கூடிய பல புரட்சிகரமான திட்டங்களையும், சலுகைகளையும் வழங்கியுள்ள பெருந்தன்மையைக் கண்டு நாட்டிலுள்ள நல்லவர்கள் யாவரும் போற்றுகின்றனர்.

இம்மன்றத்தில் பேசிய காங்கிரஸ் தோழர்கள் சிலர் நிதிநிலையைப் பற்றிப் பேசும்போது இவ்வறிக்கையில் ஏதும் புரட்சியில்லை, பாராட்டுவதற்கு ஒன்றுமில்லை என்றும் பேசினார்கள். கடந்த 19 ஆண்டுகாலமாக எந்தவிதப் புரட்சிகரமான திட்டத்தையும் காணக்கூடிய வாய்ப்பைப் பெற்றிராத காரணத்தினால் அவர்கள் இப்போதும் அப்படிப் பேசிவருவதில் வியப்பு ஒன்றுமில்லை. ஆனால், தமிழகத்தில் இன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காங்கிரஸ் தோழர்களுக்கு திருப்தி ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் இந்த அறிக்கையைத் தயாரிக்கவில்லை என்பதை நான் அவர்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

உணவுப் பொருட்களை அபிவிருத்தி செய்வதற்கு நிதிநிலை அறிக்கையில் அதிக முக்கியத்துவம் கொடுத்திருப்பதிலிருந்து நாட்டு மக்கள் அனைவருக்கும் உணவு அளிக்கவேண்டிய பொறுப்பினை எந்த அளவிற்கு உணர்ந்திருக்கிறது என்பதை எண்ணிப் பாராட்டவேண்டும். எவ்வளவு சிரமம் இருந்தாலும் ரூபாய்க்கு

ஒரு படி அரிசி வழங்கியிருப்பதை பாராட்டவேண்டும். அதைப் படிப்படியாக மாநிலம் முழுவதும் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி மத்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பும் கிடைக்குமானால் 20 கோடி அளவுக்குத் திட்டமிட்டு தமிழகத்தின் உணவுத் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வெளி மாநிலங்களுக்கும் உதவக் கூடிய அளவுக்கு உணவுப் பொருள் உற்பத்தி செய்யமுடியும். இதற்குக் காங்கிரஸ் தோழர்கள் மத்திய அரசினிடம் உதவி அளிக்கும்படி வேண்டிக் கொண்டால் உண்மையில் அவர்களுக்கு நன்றி செலுத்த, பாராட்ட நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக, கல்வி. கல்விக்காக தமிழக வருமானத்தின் 25 சதவிகிதத்தை செலவு செய்ய வகை செய்யப்பட்டிருப்பதிலிருந்து கல்வியில் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது இந்த அரசு என்பது புலனாகிறது. ஜாதி அடிப்படையில் இன்றி பொருளாதார அடிப்படையில் 1,500 ரூபாய் வருமானம் உள்ள அனைவருக்கும் கல்விச் சலுகை அளித்திருப்பதின் மூலம் உண்மையில் காங்கிரசை விட, காங்கிரஸ் அரசை விட திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியிருப்பது கண்டு தமிழகத்திலுள்ள எல்லா ஏழை மக்களும் போற்றுகின்றனர். ஆனால் மத்திய தர நிலையில் உள்ள ஆரம்ப ஆசிரியர்கள் பயன்படத்தக்க வகையில் இந்த வருமான வரம்பை சற்றுக் கூட்டி 2,000 ரூபாய் அளவிற்கு உயர்த்தவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். காங்கிரஸ் அரசினர் ஐந்து ஏக்கருக்குக் குறைந்தவர்களுக்கு நில வரி ரத்து செய்வதாகக் கூறினர். ஆனால் இன்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி உச்சவரம்பு குறிப்பிடாது எல்லா புன்செய் நிலத்திற்குரிய அடிப்படை நில வரியை ரத்து செய்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும். அடுத்தபடியாக, 75 மைல் தூரத்திற்கு மேற்பட்டு ஓடும் பஸ்கள் அனைத்தையும் அரசாங்கமே ஏற்று நடத்த முடிவு செய்திருப்பது மாபெரும் புரட்சிகரமான திட்டமாகும். பஸ்களுக்கு வரி கூட்டியிருப்பதன் காரணமாக பிரயாணிகளின் தனியார் பஸ் கட்டணத்தைக் கூட்டாது அரசு பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் ஏற்கனவே அரசாங்க பஸ் கட்டணத்தை விட தனியார் பஸ் கட்டணம் உயர்ந்திருக்கிறது.

அடுத்தபடியாக, கலப்பு மணம் செய்பவர்களுக்கு பதக்கம் வழங்கும் திட்டமானது உண்மையிலேயே சாதிபேதமற்ற ஒரு சமுதாயத்தை ஏற்படுத்த மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதை நாகரிகமிக்க அனைவரும் போற்றுவர். கலப்புத் திருமணத்தின் பொருட்டு பிறக்கும் குழந்தைகளுக்கு அரசு பாதுகாப்பும், கல்விச் சலுகையும், உத்தியோகச் சலுகையும் வழங்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, அரிசன மக்களுக்குரிய வருமான வரம்பை உயர்த்தியிருப்பதற்காகத் தாழ்த்தப்பட்ட மக்களின்





சார்பில் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த இருபது ஆண்டு காலமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பல சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்று காங்கிரஸ்காரர்களால் சொல்லப்பட்டாலும் அவை எல்லாம் ஏட்டுத் திட்டங்களாக இருக்கின்றனவே தவிர அந்தச் சலுகைகள் சரிவர அந்த ஏழை ஹரிஜன மக்களுக்குப் போய் சேரவில்லை என்றுதான் கூற வேண்டும். இந்தத் தேர்தலில் கிட்டத்தட்ட 75 முதல் 80 பெர்சென்ட் ஹரிஜன, தாழ்த்தப்பட்ட மக்கள் சட்டமன்ற உறுப்பினர்களாகத் திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருப்பது ஒன்றே சிறந்ததொரு ஆதாரமாகும். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இந்த மக்களின்பேரில் உள்ள அன்பைக் காட்டுவதற்கு. இன்று ஆரம்ப ஆசிரியர்கள் மாதம் ஒன்றுக்கு 130 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு நாலைந்து குழந்தைகளுடன் குடும்பத்தை நடத்துகிறவர்களுக்கு இந்த விதிவிலக்கிலிருந்து நன்மை பெற சற்று வசதிக் குறைவு ஏற்படுகிறது. ஆகவே ஆரம்ப ஆசிரியர்களின் நலனை முன்னிட்டு 1,500 ரூபாய் என்றிருக்கக் கூடிய வரம்பை 2,000 ரூபாய் என்று உயர்த்திக் கொடுப்பதற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் கருணை காட்டினால் ஆரம்ப ஆசிரியர்கள் அத்தனை பேர்களும் நம் தமிழக அரசுக்கு மிகவும் நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இறுதியாக கட்சிக் கண்ணோட்டத்துடன் இந்த நிதிநிலை அறிக்கையை நோக்காது இதன் ரூபசொரூபத்தை சீர்தூக்கிப் பார்த்தால் இந்த அரசு ஏழை மக்களின் நாட்டத்தில், தமிழ் மக்களின் நலனில் எந்த அளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பது தெரியவரும். ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரிக்குமுகத்தான் என் கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்த அளவோடு நிறுத்திக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. என். வரதராஜன்: சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, மார்ச் மாதம் கவர்னர் பேருரையில் மத்திய மாநில அரசுகள் உறவு பற்றிக் குறிப்பிட்டதை விட கொஞ்சம் அழுத்தமாகவே இந்த நிதிநிலை அறிக்கையில் கொண்டு வந்திருக்கிறார்கள். குறிப்பாக சென்ற ஆண்டு நாம் [illegible] மத்திய அரசாங்கத்திலிருந்து உதவி [illegible] போய்விட்டால் அந்த மாநிலம் அதன் நிலையை நிலைப்படுத்திக் கொள்ள முடியாது என்பது தெளிவாகிவிட்டது. சமீபத்தில் தூத்துக்குடியில் நடந்த ஹர்த்தாலும், ஆர்ப்பாட்டமும், தமிழ் நாட்டு 3¾ கோடி மக்களின் கோபாவேசமும் மத்திய அரசில் இருக்கிறது என்பதை இந்த பட்ஜெட் வாயிலாக மத்திய சர்க்காருக்கு எடுத்துக் காட்டியிருக்கிறோம். குறிப்பாக மத்திய அரசாங்கத்தின் பட்ஜெட்டைப் பரிசீலனை செய்து பார்த்தால் எக்சைஸ் வரி மூலம் 1000 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. அதில் மாநிலங்களுக்கு இன்று கொடுக்கும் பங்கு 200 கோடி. அதே

[திரு. என். வரதராஜன்] [1967 ஜுன் 22

போல் கம்பெனிகள் வரி மூலம், இன்கம் டாக்ஸ் மூலம் மத்திய அரசாங்கத்திற்கு வருகிற வருமானம் 600 கோடி, அதில் மாநிலங்களுக்குக் கொடுக்கும் பங்கு 150 கோடி, சுங்க வரி மூலம் மத்திய அரசாங்கத்திற்கு வரக்கூடிய வருமானம் 550 கோடி. அதில் மாநிலங்களுக்கு ஒரு பைசா கூட கொடுப்பதில்லை. பிரதான வருமானங்கள் பூராவும் மத்திய அரசாங்கத்தின் கையில் இருக்க வேண்டும் என்றிருப்பதின் காரணமாக மாநிலங்கள் இன்று வெறும் நகரசபைகளாக உட்கார்ந்திருக்க வேண்டிய நிலையில் இருக்கிறது. மாநிலம் எந்தக் காரியத்தையும் நிறைவேற்ற முடியாத நிலையில் இருக்கிறது. நம்முடைய இந்திய நாட்டின் அரசியலிலே இன்று வந்திருக்கும்படியான பிரதான அம்சம் என்னவென்றால், மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் உள்ள உறவில், நிதிகள் விஷயத்தில் மாறுதல் ஏற்படாவிட்டால் சிக்கல்கள் ஏற்படும், மோதல்கள் ஏற்படும் என்று நிதி நிலை அறிக்கை காட்டுகிறது. இதிலே இன்னொரு முக்கியமான அம்சத்தையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். மத்திய அரசாங்கத்திடம் நம் முதலமைச்சர் அவர்கள் கடன் தவணையைத் தள்ளிப்போட வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டபோது, திரு. மொரார்ஜி அவர்கள் அன்னிய நாட்டுக் கடன்களைக் காட்டி, "இந்திய அரசு அன்னிய நாடுகளுக்கு வட்டியாகவும், கடன்களைத் திருப்பித் தரும் முறையிலும் 500 கோடி ரூபாய் இந்த ஆண்டு கொடுக்கவேண்டியிருக்கிறது; இந்த நிலையில் உங்கள் கடனை எப்படித் தள்ளி வைக்க முடியும்' என்று கேட்டிருக்கிறார்கள். மத்திய அரசிடம் கையேந்திக் கேட்கும்போது, உரிமையோடு கேட்கும்போது, மத்திய சர்க்காரின் தவறான கொள்கைகளையெல்லாம் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது, இதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்.

இன்று இந்த நாட்டில் இருக்கிற 5,000 கோடி ரூபாய்க்கு மேல் உள்ள கருப்புப் பணம் வெளியே கொண்டுவர வேண்டியதுபற்றியும் நகரப்புறத்தில் இருக்கிற தொழிலதிபர்களின் வருமானத்திற்கு வரம்பு கட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதுபற்றியும் இந்த நாட்டில் இருக்கிற பாங்குகள் நாட்டுடைமை ஆகிய பிரச்னையைப்பற்றியும், பெரிய மனிதர்களாகயிருந்தாலும் 2,000 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்குவது சரியானதல்ல என்ற கருத்து இந்தியா பூராவிலும் பரவி வந்திருக்கிறது. இதைப்பற்றியும் நம் கருத்துக்களை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லி, மத்திய சர்க்கார் கொள்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை இந்தச் சமயத்தில் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தமிழ்நாட்டில் வளர்ந்து வருகிற தேசிய உணர்வு, கேரளத்தில் வளர்ந்து வருகிற தேசிய உணர்வு, ஒரிசாவில் வளர்ந்து வருகிற தேசிய உணர்வு மேலே சொன்ன அடிப்படையில் வளர்ந்துள்ளது இன்றைக்குத் தங்கள் வருமானம் போதவில்லை, தங்கள் மக்களின் வாழ்க்கைக்கு



1967 ஜுன் 22] [திரு. என். வரதராஜன்]

வேண்டிய வசதி செய்து கொடுக்கமுடியவில்லை, மக்களுக்கு
வேண்டிய உணவு கிடைக்காத நிலை, இப்படி இருக்கும்போது
மத்திய அரசு இங்கிருந்து வருமானத்தை அள்ளிச் செல்வதா
என்று கேட்கும் நிலைமை இருக்கிறது. இந்த நிலையில் காங்கிரஸ்
நண்பர்கள் வாய் திறவாமல் இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலிருந்து
இந்த ஆண்டு 14 கோடி ரூபாய் வட்டி கொடுக்கவேண்டாமென்று
கூறுகிறார்களா, அல்லது வட்டியைக் கொடுக்கவேண்டுமென்று
கூறுகிறார்களா என்று தெரியவில்லை—இதைப்பற்றி ஒருவரும் வாய்
திறக்கவில்லை. இங்கே ஹார்பாரில் வரும் சாமான்களைத் தமிழர்கள்
தான் வாங்குகிறார்கள். அதன் மூலம் வரக்கூடிய வரியில் ஒரு
தம்பிடி கூட தமிழகத்திற்குத் தரமாட்டேன் என்று மத்திய அரசு
சொன்னால், அதைப்பற்றிக் காங்கிரஸ் நண்பர்கள் என்ன நினைக்
கிறார்கள் என்று தெரியவில்லை. காங்கிரஸ் கட்சி கடந்த ஆண்டு
களில் அனுஷ்டித்த கொள்கை காரணமாக, பரிதாபகரமான
நிலையில் எதிர்க்கட்சி அந்தஸ்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.
மேலும் மேலும் அவர்கள் அனுஷ்டிக்கும் பிற்போக்குக் கொள்கை
காரணமாக அவர்களுக்கு எதிர்க்கட்சி அந்தஸ்துக் கூட இருக்க
முடியாது என்ற நிலை இன்று உருவாகி வருகிறது. தனிப்பட்ட
நபர்களைப்பற்றிச் சொல்லவில்லை. தங்கள் கொள்கையை இன்றைய
தினம் முதலமைச்சர் அவர்கள் இந்த பட்ஜெட்டில் அளித்திருக்
கும்போது, அதற்கு உருவான, முறையான, துணிவான ஒரு
மாற்றுத் திட்டத்தைக் காங்கிரஸ் பகுதியிலிருந்து பார்க்க முடிய
வில்லை என்பது ஒரு பரிதாபகரமான சம்பவம் என்று சுட்டிக்
காட்டி, மாநில அரசின் பட்ஜெட்டின் சில பகுதிகளைப்பற்றிக்
குறிப்பிட விரும்புகிறேன்.

முக்கியமாக, 20 ஆண்டு காலமாகக் கிடைத்திருக்கும் அனுபவம்
கசப்பான அனுபவம், உணவு உற்பத்தி, வினியோகம் ஆகியவை
பற்றியதாகும். 1966-ம் ஆண்டிலே 110 லட்சம் டன் அன்னிய நாடு
களிலிருந்து உணவு தானியம் மத்திய சர்க்காருக்கு இறக்குமதி
மூலம் கிடைத்திருக்கிறது. தலைக்கு 14 அவுன்ஸ் வீதம் அதை
10 கோடி மக்களுக்கு ஆண்டு பூராவும் வினியோகிக்க முடியும்
என்று அறிவாளிகள் கூறுகிறார்கள். பத்து கோடி பேர்களுக்குப்
போதுமான உணவு தானியம் வந்திருந்தும் இவ்வளவு பெரிய
பிரம்மாண்டமான உணவு நெருக்கடி இருக்கிறது என்பதை ஒத்துக்
கொள்கிறார்கள். இதற்கு அடிப்படைக் காரணம், உணவு வினியோ
கத்தில் கோளாறு இருப்பதுதான் என்பதை ஒப்புக்கொண்டாக
வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்று உணவு உற்பத்தி,
வினியோகம் என்பது முக்கியமானது என்பதை இந்த அமைச்சர்
அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்

உதாரணமாக, மத்தியிலே திட்டக் குழுவும், நிலச் சீர்திருத்தக்
குழுவும் சில தீர்மானங்களுக்கு வந்திருக்கிறது. நம் நாட்டிலேயே
நில உறவு முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று திட்டக்
கமிஷன் தீர்மானமாகச் சொல்லியிருக்கிறது. தெளிவாகவும்

சொல்லியிருக்கிறது. மாநிலங்களில் நிலச் சீர்திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படாததன் காரணம், அந்த மாநிலங்களில் நிலக்கிழார்களின் சக்தி ஓங்கி வளர்ந்திருக்கிறது. ஆகவே பல மாநிலங்களில் முறையாக நிறைவேற்றப்படவில்லை என திட்டக் கமிஷன் அறிக்கையே தெளிவாகக் கூறுகிறது. அதை உன்னிப்பாக கவனத்தில் கொள்ளவேண்டும். வெறும் மனித உழைப்பை கவனமாக எடுத்துக்கொள்ளாவிட்டால், 20 ஆண்டு காலத் தோல்வி நம் முன்னால் நிற்கும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, நிலச்சீர்திருத்தம் மிக முக்கியமானது—ஒத்திப்போட முடியாதது. அப்படிப்பட்ட பிரச்னைகளை கவனத்தில் கொண்டு தீர்க்கவேண்டும். 60-40 விதமே எந்த நிலையில் இருக்கிறது என்பது நமக்குத் தெரியும். திட்டக் கமிஷன் 75-25 என்று வற்புறுத்தியிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட பிரச்னையில் உன்னிப்பாக நின்று நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்று சுட்டிக் காட்ட வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்

(திரு. வி. கே. கோதண்டராமன் தலைமை)

பல சட்டங்கள் இருக்கின்றன. நியாய வாரச் சட்டம், பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், தொழிலாளர் கூலிச் சட்டம் எல்லாம் இருக்கின்றன. அனைத்தையும் ஒரு சட்டமாக ஆக்கி, விவசாயிகளுக்கு நியாயம் கிடைக்கும் முறையில், ஓட்டை உடைசல்களை அகற்றி, விவசாயிகளுக்கு உதவி செய்வதின் மூலம் கிராமப் புறங்களில் உரம், விதை முதலியவைகளை வழங்குதல், சீரான நிர்வாகம், கிணறுகள் வெட்டுதல், சிறிய நீர்ப்பாசன வசதிகள் செய்வதன் மூலம் சரியாக நிலச்சீர்திருத்தம் செய்வதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். மத்திய சர்க்கார் உணவு உதவி இல்லாவிட்டாலும், தமிழகத்தைப் பொறுத்த வரையில் தாராளமாக, துரிதமாக உணவுப் பிரச்னையைத் தீர்க்க முடியும் என்பதை ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம் வரவு-செலவு திட்டத்திலே மிகப் பெரிய அளவுக்கு தொழில் பகுதிகளைப்பற்றி ஆழ்ந்து யோசிக்க வேண்டியநிலையில் இருக்கிறோம். கைத்தறித் தொழிலைப்பற்றி, கைத்தறித் தொழிலின் அவல நிலைபற்றி இங்கு இருப்பவர்கள் அனைவருக்கும் தெரியும். இன்று பயங்கரமான நிலை இருக்கிறது. என்னுடைய மதுரை மாவட்டத்தில் 102 கைத்தறி கூட்டுறவு ஸ்டோர்கள் இருக்கின்றன. இன்று 25 ஸ்டோர்கள்தான் இயங்கும்படியான நிலைமை இருக்கிறது. சமீபத்தில் ரிசர்வ் பாங்க் அனுப்பிய உத்தரவின் காரணமாகக் கடன்கள் கிடைப்பதில்லை. இன்னும் பல்வேறு குறைகள் இருக்கின்றன. நூல் விலை ஏறியிருக்கிறது. அரசு டெப்போக்கள் வைக்க வேண்டுமென்று சொல்லும்போதே, கைத்தறித் துணி ஏற்றுமதிக்கு ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும் என்பதுபற்றி மத்திய சர்க்காரோடு கலந்து ஆலோசிக்க வேண்டும். ஏற்றுமதி கார்ப்பரேஷன் பெயரளவில் இருக்கிறது. நம் துணிகளை வெளி



நாடுகளுக்கு அனுப்பி வெளி நாடுகளில் மார்க்கெட் பிடிக்க தனியாக ஏற்றுமதி கார்ப்பரேஷனை அமைக்க முடியுமா என்று பரிசீலிக்க வேண்டும். மத்திய சர்க்கார் சம்பந்தப்பட்ட மட்டில் அவர்கள் மதயானைபோல குறுக்கே இருக்கிறார்கள் என்பதுதான் இன்றைய நிலைமை. தமிழ்நாட்டில் விவசாயத்திற்கு அடுத்தபடி உள்ள கைத்தறி நெசவுத் தொழிலாளிகள் இந்தச் சர்க்காரிடமிருந்து அதிகமாக எதிர்பார்க்கிறார்கள். தேவையான நூலை குறித்த விலையில் டெப்போக்கள் மூலமாகக் கொடுக்கவும், ரிசர்வ் பாங்கு அறிக்கையால் பாதிக்கப்படுவதை மத்திய சர்க்காருக்கு எடுத்துக் கூறவும், ஏற்றுமதிக்காக ஒரு கார்ப்பரேஷன் அமைக்க முடியுமா அல்லது மத்திய சர்க்கார் வைத்திருக்கிற கார்ப்பரேஷனிலே இணைந்து கொள்ள முடியுமா, எவ்வாறு செயலாற்ற முடியும் என்று ஆலோசிக்கவும் வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பட்ஜெட்டிலே மிக முக்கியமான அணுகு முறை இருக்கிறது. யாரை எப்படி வரவேற்கவேண்டும், யாரை எப்படி எதிர்க்க வேண்டும் என்பதெல்லாம் இந்த பட்ஜெட்டிலே இருக்கிறது. இதிலும் இன்னும் கொஞ்சம் சரியான பார்வை தேவை. இன்றைக்கு புன்செய் நிலங்களுக்கு வரி விலக்கு அளித்திருப்பது நல்லது. புன்செய் நிலத்தில் 10 ஏக்கரில் தென்னை பயிரிட்டிருப்பார்கள். அதிலே 10,000 ரூபாய் வருமானம் வரும்—இந்த நிலத்துக்கும் வரி விலக்கு வரும். நன்செய் நிலம் ½ ஏக்கர் வைத்திருப்பான் ஒருவன்—வருமானமே வராது. நன்செய் நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிற காரணத்தினால், வருமானமே இல்லாதிருந்தாலும் வரி செலுத்த வேண்டும்; புன்செய் வைத்துக் கொண்டிருக்கும்போது 10,000 ரூபாய் வருமானம் வந்தாலும் வரி செலுத்த வேண்டாம் என்ற நிலை. இது சரியானதல்ல. இதைப் பற்றி யோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல பகுதிகளில் உள்ள புன்செய் நிலங்களைப்பற்றி எனக்குத் தெரியும். குறிப்பிட்ட அளவுக்குக் கீழ் வரி விலக்கு என்று இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைப்பற்றியும் காங்கிரஸ் தரப்பிலிருந்து யாராவது பேசுவார்களா என்று எதிர்பார்த்தேன். யாரும் பேசவில்லை. கராச்சித் தீர்மானம் என்ன சொல்லியது? எல்லோருக்கும் வரி இல்லை என்று சொல்லவில்லை. குறிப்பிட்ட அளவுக்கு மேல் வருமானம் இருந்தால் வரி என்றுதான் சொல்லியிருக்கிறது. இன்று விவசாய வருமான வரியைப்பற்றிக் கூட சிலர் ஆட்சேபணை சொல்லுகிறார்கள். கணக்கு எழுத முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். இந்த வரியிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று இந்தமாதிரி சொல்லுகிறார்கள். என்பதை யோசிக்க வேண்டும். ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3,600-க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்குத்தான் வரி விதிக்க வேண்டும் என்று தெளிவாக நம்முடைய அறிக்கையில் இருக்கிறது. அந்த தொகையை ரூ. 4,000 ஆக்க வேண்டும் அல்லது ரூ. 5,000 ஆக்க வேண்டும் என்று சொன்னால் அதை இந்த மன்றம் புரிந்துகொள்ள முடியும். எழுதத்

[திரு. என். வரதராஜன்] [1967 ஜூன் 22

தெரியவில்லை என்ற காரணத்தைச் சொல்லி, இப்படிப்பட்ட குறிப்பிட்ட வருமானத்தை, ஒரு சமூக நீதியை எதிர்ப்பது சரியாக இருக்க முடியாது, சரியாக இல்லை என்று சொல்லிக்கொள்கிறேன். இதை மிகக் கறாராக அமுல் நடத்தினால், சுமார் ரூ. 10 கோடி வருமானம் வரக்கூடிய ஒரு முக்கியமான வரவினம், சமூக நீதி வழங்கக்கூடிய அம்சம். ஆகவே, மேல் தட்டிலுள்ளவர்களுக்கு, வசதியுள்ளவர்களுக்கு வரி விதிக்கவேண்டும். கீழ்த்தட்டில் இருப்பவர்களுக்கு, நஞ்சையாக இருந்தாலும், புஞ்சையாக இருந்தாலும் அவர்களுக்கு வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டும். இதைப்பற்றி ஆலோசிக்க வேண்டிய அவசியத்தில் நாம் இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ள பிரியப்படுகிறேன்.

பஸ் தொழிலை தேசியமயமாக்கிவிட்டார்கள் என்பதற்காக ஆழ்ந்த கவலையையும், வருத்தத்தையும் தெரிவித்து உறுப்பினர் திரு. மெய்யப்பன் அவர்கள் பேசினார்கள். அமைச்சரவை மிகச் சிறப்பான முறையில் ஆலோசித்து இந்தத் தீர்மானத்தை உருவாக்கியிருக்கிறது. அதேசமயத்தில் 75 மைல் என்பதை 50 மைல் என்று வைத்துக்கொண்டு, அதற்கு மேலுள்ள பஸ் ரூட்டுகளை எடுத்துக்கொண்டால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். உதாரணமாக மதுரையை எடுத்துக் கொண்டால், 75 மைல் என்றால் 10, 15 பஸ் ரூட்டுகளை மட்டும்தான் எடுத்துக் கொள்ளக்கூடிய நிலை வரும். ஆகவே, 50 மைல் என்று அந்த வரம்பை வைத்துக்கொண்டால் அதிகமான பஸ் ரூட்டுகளை எடுத்துக்கொள்ள முடியும். அதே நேரத்தில் சிறிய பஸ் முதலாளிகளைப்பற்றி நாம் சிறிது கவனம் செலுத்த வேண்டும். அதுவும் ஜனநாயகத்தில் முறையானதுதான். டி.வி.எஸ். போன்ற பெரிய ஸ்தாபனங்களை—பெயரைக் கூறினால் குற்றமில்லை—ஏகபோகமாக வளர்ந்துகொண்டிருக்கிற பெரிய பஸ் முதலாளிகள் வைத்துக் கொண்டிருக்கிற ரூட்களை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம் தான். ஆனால், அதேசமயத்தில் சிறிய பஸ் முதலாளிகளுக்கு விதிவிலக்கு அளிக்க முடியுமா என்பதுபற்றி யோசனை செய்ய வேண்டியது அவசியம்.

மேலும் இந்த பஸ்களில் வேலை செய்யக்கூடிய பணியாளர்கள், நாளையதினம் பெர்மிட் புதுப்பிக்கப்படவில்லை என்றால், பல பேர்கள் வேலை இழப்பார்கள், பல்வேறு கஷ்டங்களுக்கு உள்ளாவார்கள். முதலாளிகளைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. அதைவிட முக்கியமானது, அங்கே உழைப்பவர்களுக்கு நம்முடைய சர்க்கார் மோட்டார் தொழிலில் முதன்மை கொடுத்து அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்வதற்கு வேண்டிய திட்டமும் அமைச்சரவையின் கவனத்தில் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஏதோ உள்நோக்கத்தை வைத்துக்கொண்டு பேசுகிறேன் என்று கருதவேண்டாம். தமிழகத்தில் மேல்சபை தேவையா என்பதைப்பற்றியும் அரசு ஆலோசிக்க வேண்டும். சிக்கன



1967 ஜூன் 22] [திரு. என். வரதராஜன்]

சீரமைப்பு நடவடிக்கைகளை ஏற்கெனவே இந்த மந்திரி சபை எடுத்திருக்கிறது என்பதைப் பத்திரிகைகள் வாயிலாகப் பார்த்தேன். அவைகள் மிகவும் வரவேற்கத்தகுந்தவை. மேல் சபை அவசியம்தானா என்று யோசிக்க வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம். முதல் அமைச்சர் அவர்களுக்கு பல லட்சக்கணக்கான வோட்டுகள் வித்தியாசத்தில் இந்த சபையின் அங்கத்தினராக வருவதற்கு தகுதி உண்டு. தமிழக மக்களின் ஒத்துழைப்பு அவர்களுக்கு உண்டு. மேல் சபையைப்பற்றி சிந்திக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். மேலும் மிகப் பெரிய அளவுக்கு சம்பளம் வாங்குபவர்களை ரூ. 2,000 வருமானம் வரக்கூடிய ஒரு நிலைக்கு தமிழகத்தில் கொண்டுவரவேண்டும் என்பதைப்பற்றியும் ஆலோசிக்க வேண்டும்.

அதைப்போல மூடிக் கிடக்கும் மில்களைப்பற்றி எடுத்துக் கொள்வோம். கோவையில் நம்போடியா மில்லை எடுத்து நடத்தினால் ரூ. 17 லட்சம் செலவாகும் என்கிறார்கள். பத்து மில்கள் மூடிக் கிடக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. பத்தாயிரம் தொழிலாளர்களுக்கு வேலை இல்லாமல் செய்து, பஞ்சு இல்லை என்ற உண்மையற்ற நிலையைச் சொல்லி, லாபம் இல்லை என்று எடுத்துக்காட்டி, அட்டகாசம் செய்யும் மில் முதலாளிகளிடம் உறுதியுடன் இருந்து, அந்த பஞ்சாலைகளை சர்க்காரே ஏற்று நடத்தினால், ஆயிரக்கணக்கான பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதை இந்தச் சட்டமன்றத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக என்.ஜி.ஓ.-க்கள், ஆசிரியர்கள்பற்றி நம்முடைய சிந்தனையிலே ஒரு மாறுதல் கண்டிப்பாக தேவை. பணம் இல்லை என்பதை ஒத்துக்கொள்கிறேன். நாளையதினம் கஜேந்திரகட்கர் கமிஷன் தீர்ப்பு வெளிவரப்போகிறது. ஏற்கனவே கல்விக் கமிஷன் சிபார்சுகள் வெளிவந்திருக்கிறது. அவர்களுடைய அவல நிலையைப்பற்றி நாம் அறிவோம். ஆகவே, ஓரளவுக்கு அதைப் பற்றி இன்றைய தினம் சிந்தித்து அவர்களுக்குச் சம்பள உயர்வு கொடுப்பதிலே நாம் கொஞ்சம் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களுடைய சிரமம் இருக்கிறது. என்.ஜி.ஓ.-க்களுடைய சிரமம் இருக்கிறது, மற்ற எல்லோருடைய சிரமத்தைப்பற்றியும் அமைச்சரவை இன்னும் ஆழ்ந்து யோசனை செய்து ஏதாவது அதற்குரிய வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். கிணறுகள் வெட்டவேண்டும், ஆழக்கிணறுகள் வெட்டுவதும் மிகவும் முக்கியமானது. இது மிகவும் முக்கியம் என்று திட்டக் கமிஷன் சுட்டிக்காட்டியிருக்கிறது. பூமிக்கு அடியில் இருக்கும் தண்ணீரை எடுத்து உபயோகப்படுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கூந்தாலம், கருமருந்துகளை மட்டும் உபயோகித்து நாம் கிணறுகளை வெட்ட முடியாது. புதிய

கருவிகளை உபயோகப்படுத்த நாம் முயற்சி செய்யவேண்டும். அதைப்பற்றி அமைச்சரவை சிந்தித்துப் பார்க்க வேண்டும். கிணறுகள் வெட்டுவதற்கு அதிகப்படியான மான்யத்தை ஒதுக்கி, அந்தத் துறையில் நம்முடைய கவனத்தை அதிகம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட ஒரு அணுகும் முறையிலே நாம் வரவு-செலவு திட்டத்தைப் புதுப்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. நா. சௌந்தரபாண்டியன்:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் இந்த சட்ட மன்றத்தில் சமர்ப்பித்திருக்கிற 1967-68-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீது எனது கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்பொழுது முதல் இடம் அளிப்பதாக அமைவது மாநில சர்க்கார் மத்திய சர்க்கார் மீது பழியைச் சுமத்துவது. இது விவசாய மக்களுக்கு உற்சாகமோ, ஊக்கமோ கொடுக்கக்கூடியதாக அமையவில்லை, துன்பத்தைக் கொடுக்கக்கூடிய வகையிலேதான் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

உணவுக் கொள்கையைப் பொறுத்த வரையிலே, நமது அரசு சென்னை, கோவை இரண்டு இடங்களில் மட்டும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுகிற திட்டத்தை அமுல் நடத்துகிறது. அது வரவேற்கத்தக்கது என்றாலும், மாநிலத்தில் மற்ற பகுதிகளுக்கும் அதை விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக வறண்ட பிரதேசங்களில், இன்னும் சட்டபூர்வமான முறைப்படி இல்லாத ரேஷன் (Informal ration) கூட அமுலுக்குக் கொண்டு வரப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்த அளவில் உணவுப் பற்றாக்குறை மிக அதிகமாக இருப்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். மேலும், மூன்று மாதங்களுக்கு முன்பிருந்த உணவின் விலை என்ன, இப்பொழுது விலை என்ன என்று பார்க்கும்பொழுது, முன்பு ஒரு படி அரிசி ரூ. 1-50 ஆக இருந்தது, இப்பொழுது ரூ. 2-25 ஆக உயர்ந்திருக்கிறது. பருத்தி அப்பொழுது ரூ. 2 ஆக விற்றது இப்பொழுது அதற்கு விலை ரூ. 3-22. பருப்பு வகைகள், புளி, நல்லெண்ணெய், எள் போன்றவைகளின் விலை உயர்ந்து இருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்குத் தக்க நடவடிக்கை எடுத்து, உணவுப் பொருள்களின் விலைவாசியைக் குறைப்பதற்கு ஆக முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, புஞ்சை நிலங்களுக்கான நில வரியை ரத்து செய்திருப்பது பாராட்டத்தக்கது என்றாலும், மானாவாரி குளங்கள் பாசனத்தைக் கொண்டு பயிர் செய்யப்படும் நஞ்சை நிலங்களுக்கு





விதி விலக்கு அளிக்க வேண்டியது சர்க்காரின் முக்கியமான கடமை. மானாவாரி குளங்களில் மழை பெய்தால்தான் தண்ணீர் நிற்கும், பயிர் செய்ய முடியும். சில சமயங்களில் இரண்டு மாதங்கள் தண்ணீர் பெறாமல் விவசாயம் செய்த பின் மழை இல்லையென்றால், செய்த பயிரும் வீணாகக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மை வருமான வரியைத் திருத்தி அமைத்திருப்பது பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். முன்பு ஒரு விவசாயி 12½ ஸ்டாண்டர்டு எக்கருக்கு மேல் நிலம் வைத்திருந்தால்தான், வேளாண்மை வருமான வரி செலுத்த வேண்டும், கணக்கு காண்பிக்க வேண்டும் என்ற நிலைமை இருந்தது. இப்பொழுது இந்த அமைச்சரவை ரூ. 3,600-க்கு மேற்பட்டு வருமானம் வந்தால், வேளாண்மை வருமான வரி செலுத்தவேண்டும் என்று விதித்திருக்கிறது. இந்த சட்டம் முதன் முதலில் கொண்டுவரும்பொழுது இம்மன்றத்தில் விவாதிக்கப்பட்டு எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் விவசாயிகளின் நிலைமையை அறிந்து ஒப்புக்கொண்ட பின்னரே அமுலாக்கப்பட்டது என்பதையும் சுட்டிக் காட்டுகிறேன். நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒருவன் 5 எக்கர் புஞ்சை பயிர் செய்திருந்தாலும் கூட அந்த அதிகாரி ‘உனக்கு ரூ. 3,600-க்கு மேல் வருமானம் வருகிறது. நீ வேளாண்மை வருமான வரி செலுத்த வேண்டும்’ என்று விவசாயியை வற்புறுத்தலாம். இந்த நிலைமை எப்படி இருக்கிறது என்றால், முன்பு ஒருகால் வள்ளுவர் கூறியிருக்கிறார்:

“ உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்”

ஆனால், இப்பொழுது உழவர்கள் அதிகாரிகளுக்குப் பின்னாலே தொழுதுகொண்டு போகக் கூடிய ஒரு நிலை ஏற்படக்கூடாது என்று எச்சரிக்கிறேன்.

மேலும், பஸ்களை தேசியமயமாக்கப்படுவது வரவேற்கத்தக்கது என்றாலும் கூட, படிப்படியாக நல்ல முறையிலே அதைச் சீர்படுத்த வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் பஸ்களை தேசியமயமாக்கினாலும் கூட, நல்ல முறையில் ஒழுங்காக அங்கே எல்லா ரூட்களிலும் பஸ்கள் விடப்படவில்லை. ஆகையால் நல்ல முறையில் செயல்படுவதற்கு நல்லதொரு திட்டத்தை ஏற்படுத்திக்கொண்டு, படிப்படியாக இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நாட்டில் தொழில் வளம் முன்னேறியிருக்கிறது என்றாலும்கூட, இந்த நிதிநிலை அறிக்கையிலே தொழில் கல்வியைப் பற்றி அதிகமாகக் கூறப்படவில்லை என்பது வருந்தத்தக்கது. நாட்டிலே தொழில் கல்வி படித்தவர்களுக்கு அதிகமாக வேலை

வாய்ப்பு கிடைத்து, நல்ல வருவாய் கிடைத்து வருகிறது. இருந்த போதிலும், நிதிநிலை அறிக்கையில் மேலும் பாலிடெக்னிக்குகள், என்ஜினியரிங் கல்லூரிகள் அமைக்கப்படப்போவதாக எங்கும் சொல்லப்படவில்லை. அது வருந்தத்தக்கது. அதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும். கல்வியைப் பொறுத்த வரையில், எல்லாப் பிள்ளைகளுக்கும் சம்பளச் சலுகை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கல்விச் சலுகையில் பாகுபாடு செய்வது "எல்லோரும் ஓர் குலம் ஓர் நிறை" என்று சொல்லிக்கொண்டு மாணவ சமுதாயத்திற்கு நீதி வழங்காமல் இருப்பது சரியாகாது.

அடுத்து சென்னைக்கு குடி தண்ணீர் திட்டம்பற்றி போட்டிருக்கும் திட்டம் பாராட்டப்பட வேண்டியது. ஆனாலும் அது
9. ப. 00 தற்காலிகத் திட்டமாகத்தான் இருக்கிறது. இப்படிப்பட்ட தற்காலிகத் திட்டத்திற்காக 7,500 ஏக்கரா நஞ்சை நிலத்தை அரசு எடுத்திருக்கிறது. தற்காலிகத் திட்டத்திற்காக இப்படி 7,500 ஏக்கர் நஞ்சை நிலத்தை எடுத்து, விவசாயத்தைப் பாதிக்கும் அளவில் செய்ய வேண்டுமா என்பதை அரசு ஆராய்ந்து யோசித்து, நல்லதொரு திட்டத்தைத் தீட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** கனம் உறுப்பினர் அவர்கள் சென்னை நகரத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக 7,500 ஏக்கரா நஞ்சை நிலத்தை எடுத்துக்கொண்டதாகக் குறிப்பிட்டார்கள். நிலம் எடுப்பது முன்னால் நடந்த விவகாரம். இப்பொழுது சென்னை நகருக்கு நாங்கள் காவிரியிலிருந்து எடுத்து வருவது என்கிற திட்டத்தைப் போட்டிருக்கிறோம். அதில் இந்தப் பிரச்சினை இல்லை.

**திரு. நா. சௌந்தரபாண்டியன்:** முன்பு இருந்த அரசாங்கம் தவறு செய்தது என்றுதான் மக்கள் உங்களை அனுப்பியிருக்கிறார்கள், நீங்களாவது சரியாகச் செய்ய வேண்டும். என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** எடுத்துப் பயன் படுத்திய நிலத்தைத் திரும்ப எடுக்க முடியாது.

**திரு. நா. சௌந்தரபாண்டியன்:** அதை வேளாண்மைக்கு உபயோகப்படுத்த திட்டம் வகுக்க வேண்டும் என்றுதான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, சேனை அமைப்புப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது செஞ்சீனாவில் உள்ள செங்காவலர் படை போல அமையாமல் இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் 1,000 பேர் எடுக்க வேண்டும் என்று வரம்பு இருக்கிறது. ஒரு மாவட்டத்தின் நீளத்தைப் பார்த்தால், 100 மைல் என்று வைத்துக்கொண்டால், ஆயிரம் பேர்கள் என்பது இங்கொன்



றும் அங்கொன்றுமாகத்தான் அமையும். அவர்கள் செய்யப் போகும் வேலைகள், ஏரி குளங்களைச் செப்பனிடுவது, ரோடு போடுதல், தரிசு நிலங்களைப் பயன்படுத்தி வெள்ளாமை செய்தல் என்பவை இவையெல்லாம் அவர்களால் செய்ய முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு பத்து லட்ச ரூபாயை கலெக்டர்களிடம் கொடுத்தால், அவர்கள் மண் வெட்டி, கடப்பாறை இவற்றை வாங்கி வைத்துவிட்டு, செலவாகி விட்டதாகச் சொல்லி, கணக்குக் காட்டிவிடுவார்கள். மேலும், முன்னால் இருந்த சர்க்கார் கிராமங்களில் தொண்டர் படை ஏற்படுத்தியிருந்தார்கள். அவை நல்ல முறையில் நடந்து சமுதாயத்தில் மக்களுக்கு நல்ல பயிற்சியையும், நன்மையையும் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

என்னுடைய திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரை, தனியார் துறையில் பொறியியல் கல்லூரி அமைப்பதாக இருந்தது நிறைவேற்றப்படவில்லை. அந்தப் பணியை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். வேளாண்மையை அபிவிருத்திச் செய்ய தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக அங்கே ஒரு வேளாண்மைக் கல்லூரியையும் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம் மாநிலம் கடற்கரை அதிகமாக உள்ளது. இங்கே மீன்பிடி தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து, சிறு சிறு ஊர்களிலும் மீன் பிடிக்க படகுகள் அதிகமாக வழங்க வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். குறிப்பாக, இடிந்தகரை என்னுமிடத்தில் குளிர்ப் பதன சாதனம் அமைக்கப்பட கட்டடம் கட்டி இருந்தும், ஐஸ் ப்ளாண்ட் வைக்கப்படவில்லை. அதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இந்த வரவுசெலவுத் திட்டத்தில் 6.15 கோடிக்கு மேல் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. வரிகளைக் குறைப்போம், வசதிகளைப் பெருக்குவோம் என்று சொல்லியவர்கள், வரி போட வழி இல்லாத அளவுக்கு ஏற்கனவே எல்லா வரிகளும், குறிப்பாக ஜனவரி, பிப்ரவரி ஆகியவை தவிர, போட்டாகிவிட்டது என்று சொன்னவர்கள்—இன்றைக்கு வரிகளை உயர்த்தியிருக்கிறார்கள். இந்த வரிவிதிப்பின் மூலம் தமிழக மக்கள் ஒவ்வொருவரும் ஆண்டொன்றுக்கு இரண்டு ரூபாய் கூடுதல் வரி விதிக்கப்பட்டிருக்கிறார்கள். வரிவிதிப்பின் தொல்லை நேரிடையாகத் தெரியாவிட்டாலும், விலைவாசிகள் உயரும்போது, அதன் மூலம் மக்கள் பாதிக்கப்படுவார்கள்.

இந்தக் காரணங்களால் இந்த வரவுசெலவுத் திட்டத்தை வரவேற்க முடியாத நிலையில் இருக்கிறேன் என்று கூறிக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

1967 ஜூன் 22

**திரு. எம். மேத்தா :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கடந்த 17-ம் தேதி தமிழக முதல் அமைச்சர் சமர்ப்பித்த ஆண்டு நிதிநிலை அறிக்கை பற்றிப் பேசும்போது, அதை வரவேற்று பேசும் முகத்தான் உங்கள் மத்தியில் நிற்கிறேன். இந்த பட்ஜெட்டைப் பற்றி 17-ம் தேதி முதல் இங்கே பேசிய நண்பர்கள் அவரவர்கள் கட்சிக் கொள்கைகளுக்குத் தகுந்தாற்போல், அவரவர்கள் மனநிலைக்குத் தகுந்தாற்போல, அவரவர்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். குறிப்பாக, காங்கிரஸ் நண்பர்கள், இந்த 20 ஆண்டுக் காலமாக வெளியே திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி எந்த வகையில் பேசினார்களோ, அதே கருத்துக்களை ஒட்டி இந்த சட்ட மன்றத்திலேயும் ஏறுமாறாகப் பேசியிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றம் உணர்ந்திருக்கிறது. குறிப்பாக, சட்ட மன்றத்திலே, பட்ஜெட்டைப் பற்றி விரிவாகப் பேசுவார்கள் என்றும், ஆளும் கட்சியைச் சேர்ந்த எங்களுக்கு காங்கிரஸ் நண்பர்கள், தங்களுடைய அனுபவத்தைக் கொண்டு நல்ல பல கருத்துக்களைக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்திருந்த காலத்தில் காங்கிரஸ் நண்பர்கள் முன்னே பேசிவந்த பாணியிலேயே பேசியிருக்கிறார்கள். குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்—அவருக்கு இயற்கையாக வந்துள்ள அடுக்கு மொழிப் பேச்சு—போல அடுக்கு மொழியில் பேச முற்பட்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு இயற்கையாக அமைந்துள்ள அடுக்கு மொழியை, இந்த சட்ட மன்றத்திற்குத் தேர்தலில் நின்ற ஒரு அம்மையார் வீடு தோறும் சென்று, அடுக்கு மொழிபற்றி கிண்டலும் கேலியுமாகப் பேசினார்கள். அண்ணாவின் அடுக்கு மொழியை, இடுக்கு மொழி என்றார் அந்த அம்மையார். அப்படிப் பேசும்போது, அண்ணாவின் உயரத்தையும் நாவலரின் உயரத்தையும், இன்னொருவரின் கனத்தையும் எடுப்பாகச் சொல்லிக் கேலி செய்து பேசினார்கள் என்பது இந்த மாமன்றத்தில் உள்ள நண்பர்களுக்கு நன்றாகத் தெரியும். விளக்கமாகச் சொல்லப் போனால், 'குட்டை', 'கட்டை', 'நெட்டை' என்றெல்லாம் பேசிப் பழகினார்கள். அந்த அம்மையார் அப்படி இல்லாமல் போய் விட்டது. அதே பாணியில் 18 அல்லது 19-ம் தேதி ஒரு காங்கிரஸ் நண்பர் திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் என்பதை, துண்டர்கள் என்று அடுக்கு மொழியில் பேசியிருக்கிறார்கள். அவர்களுடைய பழைய நண்பர்கள் குண்டர்கள் மனதில் வந்து அந்தக் குண்டர்கள் பற்றிப் பேசினார்களோ, என்னவோ, குண்டர்கள் என்பதை நாங்கள் ஒத்துக்கொள்வோமோ, ஒத்துக்கொள்ள மாட்டோமோ, பொதுவாகக் கிராமத்தவர்கள் கூறுவார்கள். வாழ்க்கையில் அப்பழுக்கற்றவர்கள், 'எனக்கு என்ன ; துண்டைத் தோளிலே போட்டுக்கொண்டு வெளியே போகிறேன்' என்று பேசுவார்கள். அந்த வகையில் திராவிட முன்னேற்றக் கழகத் "துண்டர்கள்", அப்பழுக்கற்றவர்கள் என்று கிராமிய முறையில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே முறையில்தான்



1967 ஜூன் 22] [திரு. எம். மேத்தா]

சிரணியைப் பற்றி, 'பேரணி' என்றும், 'ஊரணி' என்றும் அடுக்கு மொழியில் பேசுகிறார்கள். இவர்கள் பட்ஜெட்டைப் பற்றி விரிவாகப் பேசுவார்கள் என்று எதிர்பார்த்தால், அடுக்கு மொழியில் பேசுவதைத்தான் கேட்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இன்னொருவர் பட்ஜெட்டைப் பற்றிப் பேசுகிறேன் என்று, இந்த பட்ஜெட் உரையை பேரறிஞர் அண்ணா இரண்டு மணி நேரம் படிக்கக் கூடிய நேரத்தில் தண்ணீரைக் குடித்துக்கொண்டு பேசினார் என்று மிக மோசமான பாணியில் பேசினார். அந்த நண்பருக்கு உள்ளபடியே நான் கூறுவேன்—அண்ணாவினுடைய வயது ஐம்பத்தொன்பதை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறது. இந்த ஐம்பத்தொன்பதாவது வயதிலே, அவர் இரண்டு மணி நேரம் நின்றுகொண்டே பேசுகிறார் என்றால், அந்தக் காங்கிரஸ் நண்பரைக் கேட்கிறேன், நீங்கள் உட்கார்ந்து கொண்டாவது அந்த இரண்டு மணி நேரம் ஆடாமல் அசையாமல் கேட்க முடியுமா ? என்று. இரண்டு மணி நேரம் பட்ஜெட்டைப் பற்றிப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசிய நேரத்தில், மூன்று, நான்கு தடவை ஒவ்வொருவரும் வெளியே எழுந்து சென்றுவிட்டு வந்திருக்கிறார்கள். இந்த நிலையிலே தண்ணீர் குடித்ததைப் பற்றியெல்லாம் அவர்கள் இங்கே பேசினார்கள்.

அதையடுத்து, பட்ஜெட்டைப்பற்றி ஒரு சில கருத்துக்களைக் கூறிய காங்கிரஸ் நண்பர்கள், "இந்த பட்ஜெட்டில் குழப்பம் இருக்கிறது" என்ற முறையில் எல்லாம் அவர்களுடைய பேச்சிலே குறிப்பிட்டார்கள். 'குழப்பம்' என்று எடுத்துக்கொண்டால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பட்ஜெட்டில் குழப்பம் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். குழப்பம் என்பது காங்கிரஸ்காரர்களுடைய எண்ணத்தில் இருக்கக்கூடியதே தவிர, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பட்ஜெட்டிலே அந்தக் குழப்பம் இல்லை. உதாரணத்திற்கு ஒன்று கூறவேண்டுமானால், 19—6—1967 அன்று காங்கிரஸ் நண்பர் ஒருவர் இந்த மன்றத்தில் பேசும்போது, "அரசாங்க பஸ் போக்குவரத்து நஷ்டத்தில் நடந்துகொண்டிருக்கிறது. இந்த பஸ் போக்குவரத்தை இப்பொழுது தேசியமயமாக்குவது அவசியம்தானா ?" என்ற முறையில் கேட்டார்கள். அதையடுத்து, மற்றொரு காங்கிரஸ் நண்பர் திரு. மார்ட்டின் அவர்கள் பேசும்போது ஒன்று கூறினார். அவரும் காங்கிரஸ்காரர்தான். "சினிமாவை ஏன் தேசியமயமாக்க வில்லை ?" என்ற கேள்வியை அவர் எழுப்பினார். ஒரு காங்கிரஸ்காரர், "ஏன் பஸ்களைத் தேசியமயமாக்கினீர்கள் ?" என்று கேட்கிறார். இன்னொரு காங்கிரஸ்காரர், "சினிமாவை ஏன் தேசியமயமாக்கவில்லை ?" என்று கேட்கிறார். தேசியமயமாக்குவதில் உள்ள குழப்பம் காங்கிரஸ்காரர்களுக்கே தவிர, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்துள்ளவர்களுக்குக் கிடையாது. தேசியமயமாக்கத்தான் வேண்டும் என்று அவர்கள் கூறுவார்

களானால், அவர்களுடைய கட்சிக் கூட்டத்திலே எதை எதை தேசியமயமாக்கலாம், எதை எதை தேசியமயமாக்கக் கூடாது என்று தனியாகக் கூறலாம், அல்லது மொத்தத்தில் தேசியமே கூடாது என்றும் பேசியிருக்கலாம். இதை விட்டுவிட்டு, தேசியமயமாக்கலாம், அல்லது ஆக்கக்கூடாது என்று ஒரு கருத்துக்கும் இன்னொரு கருத்துக்கும் மாறாகக் கூறக்கூடிய காங்கிரஸ் நண்பர்களுக்குத்தான் இந்தக் குழப்பமே தவிர, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்குக் குழப்பம் இல்லை; கலக்கமும் இல்லை. அந்தக் கலக்கம் இருக்கிறது என்றால், அது காங்கிரஸ்காரர்களுக்குத்தான். ஏனென்றால், முன்னேற்றக் கழகம் பேச்சுப்படி, கொள்கைகளை இந்தத் தமிழகத்திலே கூறிவந்த முறைப்படி, பஸ்களைத் தேசியமயமாக்குவோம் என்று கூறிய கருத்துக்களையொட்டி, தேசியமயமாக்கும் கொள்கையில் படிப்படியாக முனைந்து கொண்டு வந்திருக்கிறது. அதே நேரத்தில், பஸ்களைத் தேசியமயமாக்குகிறோம் என்று கூறும் நேரத்தில், பஸ்களைக் கறவை மாடுகளாகக் கருதிய அந்த பஸ் முதலாளிகளை, ஒரு ஏகபோக முதலாளித்துவத்தை, தங்களுடைய சுகபோகத்திற்கு அனுபவித்து வந்த காங்கிரஸ்காரர்களுக்கு இந்த பஸ்ஸைத் தேசியமயமாக்கும் காரணத்தால் அவர்கள் தலையில் சம்மட்டி கொண்டு அடிக்கும் சூழ்நிலையில் அவர்கள் குழப்பமாகப் பேசிக்கொண்டு வருகிறார்கள். அதே நேரத்தில், முன்னேற்றக் கழகம் இதுவரைக்கும் தயாரித்த இந்த முதல் பட்ஜெட்டில் கூறக்கூடிய கருத்துக்களெல்லாம், ஏழை எளிய மக்களுக்கு வேண்டிய சலுகைகளை அவ்வப்போது செய்தும், பணக்காரர்களிடமிருந்து எந்த எந்த அளவிலே வரவினங்களைப் பெற்று இந்த நாட்டை உயர்வாக்க முடியுமோ அந்த அளவிற்குச் செய்துவரக்கூடிய ஒரு உயரிய பட்ஜெட்டைக் காங்கிரஸ் நண்பர்கள் குழப்பம், குழப்பம் என்ற முறையிலே பேசிக்கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தக் குழப்பங்களெல்லாம் காங்கிரஸைச் சேர்ந்த நண்பர்களுக்கே தவிர, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு அல்ல. தேசியமயமாக்கவேண்டும் என்ற ஒரு நிலை முன்னேற்றக் கழகத்தினுடைய உயரிய கொள்கையாக இருக்கிறது. அதைப் படிப்படியாக நாங்கள் கொண்டுவர இருக்கிறோம்.

இன்னும் சிலர் கூறுகிறார்கள். இந்த ஆட்சி வந்தால் போதுமா? தேசியம் போய்விட்டது, என்று காங்கிரஸ்காரர்கள் பேசுகிறார்கள். இந்த நாட்டிற்கு விடுதலை தேடித்தந்த நாங்கள், இந்த நாட்டிற்காக உழைத்த நாங்கள் ஆட்சி செய்யாமல், முன்னேற்றக் கழகத்தவர் ஆட்சி செய்கின்ற காரணத்தால், தேசியம் போய்விட்டது, தியாகிகளுக்கெல்லாம் மதிப்பு இல்லை என்ற முறையிலே பேசியிருக்கிறார்கள். நான் ஒன்றைக் கூறுவேன். மராட்டிய சட்ட மன்றத்தில் 20-ந் தேதி பேசிய பிரஜா சோஷலிஸ்டு உறுப்பினர் திரு. மூர் பேசியிருக்கிறார். சுதந்திரப் போராட்ட வீரர்கள் புறக்கணிக்கப்பட்டு விட்டார்கள் என்று சொல்லுகிறவர்களுக்குச் சில சலுகைகள் அனுமதிக்கப்





பட்ட போதிலும் சுதந்திரப் போராட்ட வீரர்களால் அவற்றைப் பெற முடியவில்லை என்று மராட்டியத்திலே இருக்கக்கூடிய பிரஜா சோஷலிஸ்டுக் கட்சி உறுப்பினர் பேசியிருக்கிறார். மராட்டியத்தில் மட்டுந்தானா இந்த நிலை? தமிழகத்திலும் அந்த நிலை இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்து எடுத்துக்கொண்டால், ஆகஸ்டு 9-ந் தேதி காந்தியார் காலத்தில் தியாகிகள் தினமாகத் தோற்றுவிக்கப்பட்டது. வெள்ளையனே வெளியேறு என்று குரல் கொடுத்து, அதற்காக உயிரிழந்த தியாகிகள் நினைவு நாள் இது. ஆனால், இந்த நாளை—ஆகஸ்டு 9-ம் தேதி நாளை—காங்கிரஸ்காரர்கள் சத்தியமூர்த்தி பவனிலிருந்து எவ்வளவு நாள் அந்த விழாவினைச் சிறப்பாக—தியாகிகள் தினமாக—கொண்டாடுகிறார்கள்? என்று கேட்க விரும்புகிறேன். காமராஜ் பிறந்த தினம் கொண்டாடுகிறார்கள். பக்தவத்சலம் பிறந்த தினம் கொண்டாடுகிறார்கள். கொண்டாடட்டும். அது அவர்களுடைய அக்கறை. ஆனால், இதற்கும் மேலாகச் சிறப்பாக தியாகிகள் தினத்தைக் கொண்டாட வேண்டுமென்று மதிப்பிற்குரிய காந்தியார் அவர்கள் அறிவித்த ஆகஸ்டு 9-ந் தேதியன்று காங்கிரஸ்காரர்கள் கொண்டாடுகிறார்களா என்றால், இல்லை. இவ்வளவு தியாக பரம்பரை என்று சொல்லிக்கொள்ளும் பக்தவத்சலம் அவர்கள், வாஞ்சிநாதன் அவர்களுடைய துணைவியார் அவர்களுக்கு, தியாகத்திற்காகக் கொடுக்கப்பட்ட மானியத்தைக்கூட 'இல்லை' என்று சொல்லி விட்டார்கள். வாஞ்சிநாதனுடைய மனைவியார் அவர்களுக்குக் கொடுக்காத அந்த நிலையை மாற்றியமைத்து—அவர்களுக்குக் கொடுக்காமல் தடுக்கப்பட்ட நிலையை மாற்றியமைத்து—பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அம்மையார் அன்று எவ்வளவு அழுது புலம்பியிருப்பார்கள்? இந்த நாடு விடுதலை பெறுவதற்காகப் பாடுபட்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்த அந்த அம்மையார் எவ்வளவு புலம்பியிருப்பார்கள்? என்னுடைய தாலியை இழந்தேன், என்னுடைய பொட்டை இழந்தேன், என்னுடைய சுகத்தை இழந்தேன், என்னுடைய கணவனை இழந்தேன், இந்த நாடு விடுதலை பெறவேண்டுமென்ற காரணத்திற்காக. இந்த நாடு விடுதலை பெற்றும், என்னுடைய வாழ்வின் இறுதிக் காலத்தில் வயிறு குளிர ஓரளவு மானியம் கிடைக்கவில்லையே என்ற முறையில் காங்கிரஸ்காரர்களைச் சபித்திருக்கவேண்டும். அந்தச் சாபங்கள் தீர, அந்தப் பாவங்கள் போக திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு . . . .

**திரு. என். எஸ். வி. சித்தன்:** ஆன் எ பாயின் ஆஃப் ஆர்டர், சார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான கருத்தைச் சொல்லியிருக்கிறார். வாஞ்சிநாத அய்யர் அவர்களுடைய துணைவியாருக்கு அப்போதிருந்த அரசாங்கம் பதவியில் இருந்தபோது, தியாகிகள் பென்ஷன் வேண்டுமென்று மனு கொடுக்கவில்லை என்பதை முன்னாள் முதலமைச்சர் அவர்களே நேற்று வெளியிட்டிருக்கிறார். அது பத்திரிகையிலும் வெளிவந்திருக்கிறது என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

**மாண்புமிகு தலைவர் (திரு. வி. கே. கோதண்டராமன்) :** இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் அல்ல.

(மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. எம். மேத்தா :** திராவிட முன்னேற்றக் கழக அரசு காங்கிரஸ் தியாகிகளின் குடும்பத்திற்குப் பாரபட்சம் இல்லாத அளவிற்கு மானியத்தை வழங்கியிருக்கிறது. எனவே, முன்னேற்றக் கழகம் தியாகிகளை வஞ்சிக்கவோ, அவர்களுடைய உள்ளம் எரிவதற்கான நிலையிலோ இந்த நாட்டில் ஆட்சி செலுத்த வில்லை. மக்களுடைய உள்ளம் குளிர இந்த நாட்டினுடைய அரசு நல்ல முறையிலே செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அதே நேரத்தில், முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கையினை, முன்னேற்றக் கழகத்தினுடைய அரசின் போக்கினை இந்த நாடே போற்றுகிறது. இந்த நாட்டு மக்கள் போற்றுகிறார்கள். காரணம், இந்த நாட்டிலே பிறந்த குழந்தை முதற்கொண்டு, இறக்கிற மனிதன் வரைக்கும் 'போதும்' என்று சொல்லக்கூடிய ஒரே பொருள், உணவு தவிர வேறு ஒன்றும் கிடையாது. 'போதும்' என்று சொல்லக்கூடிய பொருள் உணவு ஒன்றுதான். 70 வயது முதிர்ந்த ஒருவரைப் பார்த்து, "உங்களுக்கு உடம்பு நல்ல முறையில் இருக்கிறது ; அவ்வளவு வயதாகிவிட்டதாகக் கூறமுடியாது ; மறுமணம் செய்துகொள்ளுவதுதானே ?" என்று கேட்டால், அவரும் ஓரளவு தலை அசைக்கலாம். அதேபோல், கோடி கோடியாக ரூபாய் வைத்துக்கொண்டிருப்பவர், அந்த அளவோடு இன்னும் சொத்தைச் சம்பாதிக்கலாம் என்ற பேராசை கொள்ளக்கூடும். ஆனால், கோடீஸ்வரர்கள் முதற்கொண்டு ஏழை எளியவர்கள் வரைக்கும் போதும் என்று சொல்லக்கூடியது சாப்பாடு ஒன்றுதான். சோறு ஒன்றுதான். அந்த அடிப்படையைக் கருத்திற்கொண்டு, ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்குவதற்கான திட்டத்தை முதன் முதலாக திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுவந்திருக்கிறது. அது சென்னையிலும், கோவையிலும் படிப்படியாக தமிழகம் முழுவதும்—நான் நினைக்கிறேன்—எங்களுடைய தமிழக அரசு, இந்த நாடு விடுதலை பெற்றதாகக் கருதப்படுகிற ஆகஸ்டு 15-ந் தேதியன்று, தமிழகம் முழுவதும் இல்லாவிட்டாலும் கூட, முக்கால் பகுதியிலாவது ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடும் என்றே நான் கருதுகிறேன். அந்த அளவு முன்னேற்றக் கழக அரசினுடைய கொள்கை போய்க்கொண்டிருக்கிறது. இந்த அளவு குறைந்த விலையில் உணவை இந்த நாட்டு மக்களுக்கு கொடுக்கவேண்டும் என்று நாங்கள் கூறும் போது, மத்திய சர்க்கார் 14 கோடி ரூபாய் வட்டியைத் தள்ளிவைக்க வேண்டும் என்று நாங்கள் கேட்ட நேரத்தில், மத்திய சர்க்காருடைய அமைச்சர், இந்த நாட்டை, அகில இந்தியாவை ஆளக்கூடிய காங்கிரஸ் அமைச்சரவை, அந்தப் பதினைந்து கோடி ரூபாய் வட்டியைத் தள்ளிவைக்க முடியாது என்று கண்டிப்பாகக் கூறி விட்டார்கள். அந்தப் பதினைந்து கோடி ரூபாயைத் தள்ளி



வைக்கக் கூடாது என்று காங்கிரஸ் நண்பர்கள் கூறுகிறார்கள், அதே நேரத்தில், இந்தியாவில் இருக்கக்கூடிய எத்தனை எத்தனை முதலாளிகளுக்கு இந்தக் காங்கிரஸ் அரசு சலுகை தந்திருக்கிறது ? பதினைந்து கோடி ரூபாயை மட்டும் தமிழகத்திற்குத் தள்ளி வைக்குமானால், இந்தத் தமிழகத்தில் உள்ள மக்களுக்கு ஒரு படி அரிசித் திட்டத்தை நாங்கள் பெருவாரியாக, இந்தத் தமிழகம் முழுவதும் எடுத்துக் காட்டாகப் போட்டிருக்க முடியும், பதினைந்து கோடி ரூபாயைத் தள்ளிவையுங்கள் என்று கூறிய நேரத்தில், பிற மாநிலங்கள் கேட்கும், எனவே, நாங்கள் தர மறுக்கிறோம் என்று அசோக் மேத்தா போன்றவர்களும், மொரார்ஜி தேசாய் போன்றவர்களும் கூறிவிட்டார்கள். ஆனால், தமிழகத்திலே 14 கோடி ரூபாய் நாங்கள் வட்டி செலுத்துகிறோம் என்றால், அது எதற்காக ? அந்தப் பதினாலு கோடி ரூபாய் வட்டி செலுத்துவது பர்மா அகதிகளுக்காக, இலங்கையிலிருந்து வரப் பட்ட அகதிகளுக்காகக் கொடுக்கப்பட்ட மானியங்களுக் கெல்லாம் சேர்ந்துதான் 14 கோடி ரூபாய் வட்டி. மத்திய அரசு கொடுக்கிற மானியங்களில் தமிழகத்திற்கு எந்தவிதமான நன்மையும் கிடையாது. பொற்கொல்லர் தனிவாழ்வு அளிக்க கொடுக்க ஒரு உதவி மானியம். அந்த மானியத்திற்கு அளிக்கப் பட்ட தொகை 16 கோடி ரூபாய். வட்டியையாவது தள்ளி வையுங்கள் என்று கேட்ட நேரத்தில் மறுத்து விட்டார்கள். முஸ்லீம் லீகைச் சேர்ந்த அப்துல் சமத் அவர்கள் பாராளு மன்றத்தில் ராஜ்ய சபையிலே, 14 கோடி ரூபாயைத் தள்ளி வையுங்கள் என்று சொன்ன நேரத்தில், தமிழகம் முழுவதும் வருமான வரியாக இங்கே இருக்கிற தொகை 528 கோடி ரூபாய்க்கு டில்லிப் பேரரசு தவணை கொடுக்கிறது. நாம் தவணை கேட்டால் கொடுப்பதில்லை. 528 கோடி ரூபாய்க்குச் சலுகை காட்டக்கூடிய டில்லிப் பேரரசு தமிழக அரசின் கடனை கொஞ்ச நாள் ஒதுக்கி வைத்தால், தமிழக மக்களுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடக்கூடிய திட்டம் தமிழகம் பூராவும் வரும் என்று நிச்சயம் சொல்லிக் கொள்கிறேன். இந்த 528 கோடி ரூபாய் இல்லை ; 28 கோடி ரூபாய் இல்லை. பதினாலு கோடி ரூபாயைத் தள்ளி வைத்தால் போதும், தமிழக மக்களுக்குப் பிரதிநிதியாக இருக்கின்ற அரசு உதவி பெற்றிருக்கும் . . .

(மணியடிக்கப்பட்டது)

**திரு. எ. அ. சுப்பராஜு :** சபாநாயகர் அவர்களே, முதன் மந்திரி அவர்கள் சமர்ப்பித்துள்ள இந்த பட்ஜெட்டை வரவேற்று ஒருசில வார்த்தைகள் பேசுகிறேன். அவர்கள் அளித்த நிதிநிலை அறிக்கையிலே 'பைனான்சியல் கமிஷன்' மத்திய அரசாங்கத் திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் உள்ள தொடர்புகளை விரிவாக ஆராய்ந்து, உறவு முறைகளைச் சிறப்பித்துத் தர வேண்டுமென்று மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார். அது வரவேற்க வேண்டிய அம்சமாகும். உதாரண

மாக, நாம் இன்றைக்கு 300 கோடி ரூபாய் கடன் பட்டிருக்கிறோம். வருடத்திற்கு 14 கோடி ரூபாய் அளவிற்கு வட்டி மட்டும் கட்ட வேண்டியிருக்கிறது. அதைப்பற்றி நாம் மத்திய அரசாங்கத்தைக் கேட்கும்போதெல்லாம், "நாங்கள் வாங்க வேண்டிய கடன்கள் எல்லாம் அயல்நாடுகளிலிருந்து வாங்குகிறோம். அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய கடனைப் படிப்படியாக வழங்க வேண்டும். அதற்காக வட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது" என்று கூறுகிறார்கள். ஒருசில விஷயங்களை நாம் எல்லாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். சில கடன்கள் எல்லாம் ரோடுகள் போடுவதற்கும், ஸ்கூல் பில்டிங் கட்டுவதற்கும் உபயோகிக்கிறோம். அவையெல்லாம் முடக்கப்பட்ட மூலதனங்கள். இப்படி வருமானம் கிடைக்காத மூலதனத்திற்குச் செலவிடும் பணத்திற்கெல்லாம் வட்டி வாங்காது தள்ளிவிட வேண்டும். இப்பேர்ப்பட்ட சில நல்ல காரியங்களையெல்லாம் செய்ய வேண்டுமென்று நல்ல விதத்திலே நாம் எடுத்துக் கூற வேண்டும். எல்லா மாநிலங்களுக்கும் பொதுவான முறையில், காரியங்களைச் செய்வதற்காக 'பர்மனென்ட் பைனான்சியல் கமிஷன்' அமைக்கப்பட வேண்டும். இப்போது இருக்கக்கூடிய நிலை என்னவென்றால், பைனான்சியல் கமிஷன் ஒரு தடவை அறிக்கையை பிரசிடென்டிடம் சமர்ப்பித்துவிட்டால், அதனுடைய வேலை முடிந்துவிடுகிறது. அப்படியில்லாமல் பைனான்சியல் கமிஷன் நிரந்தரமாக ஆக்கப்பட வேண்டும். அதை நமது முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சமர்ப்பிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, ஐந்தாண்டுத் திட்டத்திலே மத்திய அரசு 23,750 கோடி ரூபாய் வரைக்கும் திட்டம் போட்டுள்ளது. நமது மாநிலத்திற்கு 565 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. 1966-67-ம் ஆண்டு 80 கோடி என்றும் 1967-68-ல் 85 கோடி என்றும் ஒதுக்கியிருப்பதைப் பார்க்கிறோம். அதற்குப் பிற்பாடு நம் 565 கோடியிலே மீதி 400 கோடி ரூபாய் இருக்கிறது. ஒவ்வொரு வருடமும் அதைச் சீராக, வேண்டிய தொகை செலவழிக்கப்படாமல் 80 கோடி என்றும் 85 கோடி என்றும் இருப்பதால், அந்தத் தொகை சீராக செலவழிக்கப்படுகிறதோ என்ற சந்தேக நிலையை ஏற்படுத்துகிறது. இன்றைக்கு மத்திய அரசாங்கம் ஒரு சீரான நிலையிலே ஒரு திட்டத்தை நிறைவேற்றும்போது அதிலே சில சிக்கல்கள் ஏற்படுகின்றன.

அடுத்தபடியாக, சேலம் இரும்பாலைத் திட்டம், சேது சமுத்திரம் திட்டம் எல்லாம் நின்றுவிட்டது. அதன் மூலமாக நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் (அன் எம்ப்ளாய்மென்ட்) பெருகுகின்றது. இன்றைய தினம் மெடிகல் காலேஜில் ஸீட் கிடைப்பது வெகு கிராக்கியாக இருப்பதை நாம் பார்க்கின்றோம். அதே நேரத்தில் இன்ஜினியரிங் காலேஜில் சேருவதற்கு மாணவர்கள் அவ்வளவாக வருவதில்லை. ஏனென்றால், இன்ஜினியரிங் காலேஜில் படித்துவிட்டு இன்ஜினியர்களாக



வருபவர்களுக்கு ஐந்தாண்டுத் திட்டத்தில் வேலை இல்லை என்பதை மக்கள் புரிந்துகொண்டார்கள். நாம் செலவழித்து இன்ஜினியரிங் படிப்பது எல்லாம் உபயோகம் இல்லாமல் போய்விடுமோ என்று அவர்கள் எண்ணுவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். ஓடிக்கொண்டிருக்கிற வண்டியை திடீரென்று நிறுத்தினால் உள்ளே இருப்பவர்களுக்கு ஆபத்துதான் ஏற்படும். அந்த முறையிலே மத்திய அரசாங்கம் சென்று கொண்டிருக்குமானால், பொருளாதார ரீதியிலே ஒரு பிற்போக்கான நிலை ஏற்படும் என்பது நம் கருத்து.

உணவு உற்பத்தி முறையில், முன்பு என்ன இருந்ததோ அதையேதான் மீண்டும் அறிக்கையில் காண்கின்றோம். அடிப்படையில் மாற்றம் காணவேண்டும். நிலத்திற்கு உரம் வழங்குவது குறித்து, யார் உண்மையாக நிலத்தில் விவசாயம் செய்கிறார்களோ அவர்களுக்கு உரம் கிடைக்க வழி செய்ய வேண்டும். இன்னும் ஏராளமாக இறும் நிலம் இருப்பதை நாம் பார்க்கின்றோம். கூடிய விரைவில் எல்லோருக்கும் இறும் நிலத்தை வினியோகித்து நல்ல முறையில் விவசாயம் நடத்த வழி செய்ய வேண்டும். அடுத்தபடியாக, 'ரிசர்வ் பாரஸ்ட்' என்று சொல்லக்கூடிய இடங்களில் எல்லாம் தரிசாக நிறைய நிலம் இருக்கிறது. புதுக்கோட்டைப் பகுதியில் பார்த்தால் தரிசு நிலம் அதிகமாக இருக்கிறது. அதுதவிர, திருச்சி, ராமநாதபுரம், தென் ஆர்க்காடு மாவட்டங்களில் ஏராளமான அளவில் தரிசு நிலம் இருக்கிறது. அதை உடனடியாக இந்த அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, சாகுபடி செய்யக்கூடிய முறையில் உள்ள நிலங்களை விவசாயிகளுக்குப் பிரித்துத் தர வேண்டும்.

இன்றைக்கு கோயம்புத்தூரிலும், சென்னையிலும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவது குறித்து நாம் வரவேற்கிறோம். தவிர, நம் மாநிலத்திலே குடும்பக் கார்டு திட்டம் அமுலுக்கு வராத இடங்கள் பல இருக்கின்றன. அங்கிருக்கும் மக்கள் எல்லாம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கெல்லாம்கூட ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடும் திட்டத்தை அமுலாக்க வேண்டும். அறுவடைக் காலத்தில் அவர்களுக்கு ஓரளவு அரிசி கிடைக்கிறது. ஆனால் மற்றக் காலங்களிலும் கிடைக்க வழி செய்யவேண்டும். ராஜபாளையம் கிராமத்திலுள்ள ஆத்தனை பேரும் தாங்கள் வாங்கும் ஊதியத்தில் பெரும்பகுதியை உணவுக்காகச் செலவிட முடியாத அளவில் கஷ்டப்படுகிறார்கள். ஒரு பக்கத்தில் விவசாயிகள்—பாடுபடக் கூடிய மக்கள்—எல்லாம் குடும்பக் கார்டு இல்லாமல் கஷ்டப்படும்பொழுது, பட்டணங்களில் இருக்கக்கூடியவர்கள் மிக எளிதாக ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று வாங்கிக் கொள்கிறார்களே, எங்களுக்கு அந்த விலையில் ஏன் கிடைக்கவில்லையென்று நினைக்கிறார்கள். அப்படிப்பட்ட தவறான எண்ணம் மக்கள் மனதில் ஏற்படாதபடி செய்ய வேண்டும் என்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதை வெகு

பி.ப. 1-30 விரைவிலேயே கோவை, சென்னை போன்ற நகரங்களுக்கு அருகாமையில் உள்ள பகுதிகளுக்கும் மாவட்டங்களுக்கும் விஸ்தரிப்பது என்று இல்லாமல் சீராக எல்லா இடங்களுக்கும் கார்டு முறையில் விஸ்தரிக்க ஆவன செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுவும் முக்கியமான தொழிலாளர் பிரச்சினை. ராஜபாளையம் நகரம், ராமநாதபுரம் மாவட்டத்திலேயே ஜனத்தொகை பெருத்த நகரம். தொழில் துறையில் முதன்மை ஸ்தானம் பெற்றது. இன்றையதினம் சென்னை, கோவையில் படி அரிசித் திட்டம் இருப்பதால் இதன் அடிப்படையில் புள்ளிவிவரம் குறையவே அந்தப் பகுதியில் உள்ள முதலாளிகள் தொழிலாளர்களுக்கு புள்ளிவிவரக் குறைவுப்படி பஞ்சப்படியைக் குறைத்து விட்டார்கள். ஆனால் அங்கே ரூபாய்க்கு ஒரு படி அரிசி கிடைக்கவில்லை. ஆகவே இப்படி முதலாளிகள் வாழ்க்கைப் புள்ளிகள் குறைவுக்கு ஏற்ப பஞ்சப்படியைக் குறைத்துக்கொடுப்பதனால் அவர்கள் படுகிற கஷ்டத்தை உடனடியாக நீக்கியாகவேண்டும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

அடுத்தபடியாக பஸ் டிரான்ஸ்போர்ட்டை தேசியமாக்குவதை நான் வரவேற்கிறேன். நல்லதொரு திட்டம். அதுபற்றி ஒரு சிறிய யோசனையையும் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஸ்மால் ஆப்பரேட்டர்கள் இன்றையதினம் பெரிய ஆப்பரேட்டர்களுக்கு நடுவில் அகப்பட்டு மிகக் கஷ்டப்படுகிறார்கள். பஸ்களுக்கான வரியை அதிகப்படுத்தியிருப்பதும் ஸ்மால் ஆப்பரேட்டர்களுக்கு மிகுந்த கஷ்டத்தைக் கொடுக்கும். ஸ்மால் ஆப்பரேட்டர்களுக்காவது வரியைக் குறைத்தால் நலமாக இருக்கும். பெரிய ஆப்பரேட்டர்கள் ரூட்டை ரின்யூ பண்ண வரும்போது அவர்களிடத்தில் பத்து ரூட்டுகள் இருக்கும்படிவிட்டுவிட்டு பாக்கியை சிறுசிறு ஆப்பரேட்டர்களுக்கு ஒதுக்கினால் மிகவும் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாய வருமான வரியைப் பற்றி எல்லா அங்கத்தினர்களுமே குறிப்பிட்டார்கள். வரி போடுவதில் தப்புக் கிடையாது. ஆனால் இந்தச் சட்டத்தினுடைய அதிகாரம் ரெவின்யூ ஆபீசர் கையில் குவிந்துவிடுகிறது. அவர்களுடைய எல்லைக்கு மீறினதாக இருக்கிறது. சிறிய விவசாயியை ஒரு அதிகாரி பார்த்து 'உனக்கு இவ்வளவு வருமானம் வந்திருக்கும். நீ கணக்கு வைக்கவில்லை. ஆகவே உனக்கு இவ்வளவு வரி போடுகிறேன், கட்டிவிட்டுப்போ' என்றால் அந்த விவசாயி கட்டிவிட்டுத்தான் வரவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே இதுபற்றிய மசோதா கொண்டுவரும்பொழுதாவது எல்லை மீறிய அதிகாரம் உத்தியோகஸ்தர்கள் கையில் இல்லாது இருக்கும்படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.





பொதுவாக என்.ஜி.ஓ.-க்கள், ஆசிரியர்களுடைய சம்பளம் மிகக் குறைவானதாக இருக்கிறது. அவர்களுடைய நிலையை உயர்த்த வேண்டியது அவசியம் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்கிறோம். நிதி இல்லை என்றால்—விற்பனை வரியை எடுத்துக் கொண்டால் அதை நல்லமுறையில் வசூல் செய்தாலேயே 40 கோடிக்கு வரும் என்று சொல்லப்படுகிறது. 40 கோடி இல்லாவிட்டாலும் 20 கோடியாவது நல்லமுறையில் கிடைக்க கவனம் செலுத்தி, என்.ஜி.ஓ.-க்கள், ஆசிரியர்கள் ஆகியோருடைய சம்பளத்தை நல்ல முறையில் உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுவிலக்குக் கொள்கையில் முதல் அமைச்சர் அவர்கள் உறுதியாக இருப்பதை நான் வரவேற்கிறேன். மதுவிலக்குச் சட்டத்தை எடுத்துவிட்டால் கஷ்டப்படக்கூடியவர்கள் தாய்மார்கள். குடித்துவிட்டு வருகிற கணவன்மார்களிடம் அடி உதை வாங்கக் கூடிய நிலையில் அவர்கள்தான் இருக்கிறார்கள். இன்றைய தினம் சரியான முறையில் அது நடக்கவில்லை, பலர் குடிக்கிறார்கள் என்றாலும் பகிரங்கமாக யாரும் குடித்துவிட்டு வெளியே வரப் பயப்படுகிறார்கள். போலீசில் பிடித்துக்கொண்டு போய்விடுவார்கள் என்ற நிலை இருக்கிறது. மதுவிலக்குக் கொள்கையினால் தான் பல ஹரிஜன குடும்பங்களுடைய நிலை மேன்மையாக இருக்கிறது. கொஞ்சம் தானியங்களைச் சேமித்து வைக்கிறார்கள். ஆக இதை எடுப்பதில்லை என்கிற முதல் அமைச்சர் அவர்களுடைய நல்லெண்ணத்தை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. இ. பொன்னுமலை:** சட்டப்பேரவை உதவித் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் தயார் செய்து சமர்ப்பித்துள்ள பட்ஜெட் மீது நடைபெறும் விவாதத்திலே நானும் கலந்துகொண்டு உரையாற்றப் பெருமைப்படுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் மிக நல்லமுறையில் ஏழை எளியவர்களும் வாழ வேண்டும், நலம் பெறவேண்டும் என்ற அடிப்படையில் மிக உயர்ந்த வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்து சமர்ப்பித்திருப்பதற்கு நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுமார் பதினைந்து ஆண்டுகளாக சோஷலிசம் சோஷலிசம் என்று காங்கிரஸ்காரர்கள் பேசி வந்தார்கள். சோஷலிசம் இப்படித்தான் இருக்குமோ, சோஷலிசம் அப்படித்தான் இருக்குமோ என்று நாங்கள் எண்ணி எண்ணிப் பார்த்தோம். திரு. காமராஜ் அவர்கள் ஜனநாயக சோஷலிசம் என்றார்கள். தேர்தலின்போது அதையும் பார்த்தோம். ஜனநாயக சோஷலிசம் பேசியவர்கள் இந்தப் பகுதியில் புகாதே, அந்தப் பகுதியில் புகாதே என்று தடுத்து வந்தார்கள். அதுவும் குறிப்பாக சேலம் மாவட்டத்தில் ஜனநாயக சோஷலிசம் என்று பேசிய காமராஜ் பெயரில் அமைக்கப்பட்டுள்ள காமராஜ் காலனிக்குள் நாங்கள்

[திரு. இ. பொன்னுமலை] [1967 ஜூன் 22

புகக்கூடாது என்பதாகத் தடுத்து நிறுத்தப்பட்டோம். நாங்கள் எல்லாவற்றையும் சகித்துக்கொண்டோம். ஆனால் உண்மையிலேயே இன்றைய தினம் நல்ல சோஷலிசத்தை நாட்டு மக்களுக்கு வகுத்துக் கொடுக்க அண்ணா அவர்கள் தயாரித்து அளித்துள்ள பட்ஜெட் நாட்டு மக்கள் அனைவராலும் வரவேற்கத் தக்கது. இதை நான் மிகமிகப் போற்றுகிறேன்.

குடிதண்ணீர்த் திட்டத்திற்கும், சிறு பாசனத் திட்டங்களுக்கும் இந்த பட்ஜெட்டிலே முதலிடம் கொடுத்திருக்கிறார்கள். ஆங்காங்கே ஓடுகிற ஓடைகள், சிற்றாறுகள் இவற்றைத் தடுத்து, வீணாகக் கடலில் போய்ச் சேரும் தண்ணீரை பயன்படுத்திக்கொள்ள வழி செய்தாலே அதிக நன்மையைப் பெற முடியும். கடந்த 16-ஆம் தேதி கூட சேலம் மாவட்ட டி.டி.சி. கூட்டத்தில் பல ஏரிகளைப் பற்றிய குறிப்புக்களைக் கொடுத்திருக்கிறேன். அந்த ஏரியினால் பயன் இல்லை. இந்த ஏரியினால் விவசாயம் செய்வதற்கு நிலம் இல்லை என்பதாக அந்தத் திட்டங்களைக் கைவிடுவதில் பயன் இல்லை. விவசாயத்திற்கு ஏரியை ஒட்டி நிலம் இல்லை என்றாலும் அவற்றில் நீர் தேங்குவது சுற்றுப் புறங்களில் உள்ள விவசாயக் கிணறுகளில் எல்லாம் நீர் ஊற்றம் ஏற்படுவதற்கு மிகுந்த உதவி செய்யும். ஆகவே பாசனம் ஒன்றை மட்டும் கருத்தில் கொள்ளக் கூடாது. இந்த ஏரிகளை மராமத்து செய்து தரவேண்டும். சிறு ஓடைகள், ஆறுகள் இவற்றின் நீரைத் தேக்க வகை செய்ய வேண்டும் என்று கூறிக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, அறிஞர் அண்ணா அவர்கள் சமர்ப்பித்துள்ள வரவு-செலவுத் திட்டத்தை ஆதரிக்கிறேன், வரவேற்கிறேன் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஜே. ஜேம்ஸ்:** சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, 1967-68-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது என் கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். புதிய அரசு ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ள இந்த வேளையில் புதிய வரிகள் ஒன்றும் இல்லாத நிதி நிலை அறிக்கை வரும் என்று மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒருவேளை காங்கிரஸ் அரசு வரிகள் போடும்போது எல்லாம் இந்தக் கட்சியினர் எதிர்க் கட்சியில் இருந்து எதிர்த்து வந்த காரணத்தினால், இவர்களே பதவியில் இருக்கும்போது புதிய வரிகளைக் கொண்டுவர மாட்டார்கள் என்று எதிர்பார்த்திருக்கலாம். ஆகவே மக்கள் எதிர்பார்த்ததில் குறை இல்லை என்று கருதுகிறேன். ஆனாலும் முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள வரவு செலவுத் திட்டத்தில் ஏறத்தாழ ஆறு கோடியே முப்பத்தைந்து லட்சம் ரூபாய்க்கு புதிய வரிகளைப் போட்டிருக்கிறார்கள் என்றால் ஏகதேசம் தமிழ்நாட்டில் ஒரு நபருக்கு 2 ரூபாய் வரையிலும் புதிய வரி செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த வரிகள் எல்லாம் உண்மையிலேயே வசதி படைத்தவர்கள் மேல் சுமத்தப்பட்டு இருக்கிறதா அல்லது ஏழை எளியவர்கள்மீது சுமத்தப்படுகிறதா என்று சிந்தித்துப் பார்த்தால் மதுபான பொருட்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும்



1967 ஜூன் 22] [திரு. ஜே. ஜேம்ஸ்]

வரி தவிர மற்ற வரிகள் எல்லாம் ஏழை எளியவர்கள் மீதுதான் சுமத்தப்படக் கூடிய நிலைமை இருக்கிறது. மதுபானப் பொருட்கள் மீது இந்த அமைச்சரவை வரிகளை சுமத்தியிருக்கின்ற காரணத்தினாலே இந்த அமைச்சரவை பாராட்டுக்கு உரியது. ஆனால் அதே நேரத்தில் மற்ற வரிகளைப் பற்றிப் பார்க்கும் பொழுது அதை சுமக்கின்றவர்கள் ஏழை எளியவர்கள் என்ற நிலையில் இந்த நிதி நிலை அறிக்கையைப் பாராட்டுவதற்கு இல்லையென்பதை நான் வருத்தத்தோடு கூறிக்கொள்கிறேன்.

விற்பனை வரி வாயிலாக ஏகதேசம் 3 கோடியே 25 லட்சம் ரூபாய் வருமானம் வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விற்பனை வரி உணவு நெருக்கடியை வெகுவாக்குமா அல்லது குறையச் செய்யுமா என்று சிந்தித்துப் பார்த்தால் விலைவாசிகள் ஏறுவதற்குத்தான் இது உதவியாக இருக்குமென்பதை ஒப்புக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். மிகவும் அத்தியாவசியமான பண்டங்களின் மீது வரிகளைப் போட்டால் அவற்றை வாங்குகின்ற ஏழை எளிய மக்கள்தான் அதைக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே விற்பனை வரி அதிகமாகச் சுமத்தப் பட்டு இருப்பதால் அது ஏழை எளியவர்களைத்தான் பாதிக்கும்.

அடுத்து, பஸ் வரியை உயர்த்தியிருப்பது இந்த அமைச்சரவையின் முற்போக்கான கொள்கைதான் என்றாலும்கூட, இதைப் பற்றியும் சற்று சிந்தித்து பார்க்க வேண்டும். மோட்டார் வண்டிகள் மீது சுமத்தப்படுகின்ற வரிகள் எல்லாம் பஸ் முதலாளிகளால் கட்டணத்தை உயர்த்துவதின் மூலம் ஏழைகள் மீது சுமத்தப்படுவதுதான் வழக்கம். பஸ்களில் பிரயாணம் செய்கின்ற ஏழைப் பிரயாணிகள்தான் அந்த வரியையும் கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்த நிலை ஏற்படாமல் இருக்க, ஏழை எளியவர்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்றால் முதலாளிகள் எந்தக் காரணத்தைக் கொண்டும் பஸ் கட்டணத்தை உயர்த்தக்கூடாது என்ற அளவுக்கு அமைச்சரவை நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படி எடுத்தால் ஒருவேளை ஏழை எளிய மக்கள் பாதிக்கப் படாமல் இருக்கலாம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முத்திரைக் கட்டண ஏய்ப்பைத் தடுத்து, ஏய்ப்பினால் இழந்த கட்டணத்தை வசூலிப்பதற்காக ஒரு திட்டம் கூறப்பட்டுள்ளது. அதையும் சற்று கூர்மையாக கவனித்தால் அந்த திட்டம் ஏழைகள் அதிகாரிகளால் துன்புறுத்தப்படுவதற்கும் லஞ்ச ஊழல் பெருகுவதற்கும் வகை வகுக்கிறது. ஏனென்றால் பதிவு அதிகாரிக்கு அதிகமான அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பத்திரப் பதிவிற்கு வருகின்ற நேரத்தில், நியாயமான விலை பத்திரத்தில் கூறப்பட்டு இருக்கிறதா அல்லது இல்லையா என்பதை நிச்சயிக்க வேண்டிய பொறுப்பு பதிவு அதிகாரிக்குக் கொடுக்கப்பட்டிருப்பதால், அந்த அதிகாரி தயவில்தான் ஏழை எளிய மக்கள் இருக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஒருவேளை பத்திரத்தில்

நியாயமான விலை குறிப்பிடப்படவில்லையென்று அதிகாரி கருதினால் சொத்தின் விலையை முடிவு செய்வதற்காக கலெக்டருக்கு அனுப்புகிறேன் என்று அதிகாரி சொல்வதன் மூலம் அந்த அதிகாரி லஞ்சம் வாங்குவதற்குத்தான் இந்தத் திட்டம் வழி வகுக்குமே தவிர, ஏழை மக்களுக்கு இதனால் நன்மை இல்லையென்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நமது அரசு நிலவரியை நீக்கி புரட்சிகரமாக ஒரு திட்டத்தை மக்கள் முன் வைத்திருக்கிறது என்று ஆளும் கட்சி அங்கத்தினர் பலர் கூறுகின்றனர். ஆனால் அதற்கு பதிலாக வேளாண்மை வருமான வரியை விதித்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். புன்செய் நிலத்திற்காக வரியை அகற்றுவதன்மூலம் ஒரு கோடியே 60 லட்சம் ரூபாய் இழப்பு ஏற்படுகின்றது. அதை ஈடுகட்டுவதற்காக மற்றொரு வழியைத் தேட வேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் இந்த விவசாய வருமான வரி விதிக்க வேண்டியிருக்கிறது என்று கூறினார்கள். ஏழை எளியவர்களுக்கு நில வரியை நீக்குவதால் ஏற்படும் நன்மையைச் செய்துவிட்டு அதை விட விவசாய வருமான வரியை விதித்து அதிக தீமையை செய்திருக்கிறது. எனக்கு முன்பு பேசிய பல நண்பர்கள் இதைப் பற்றிப் பேசினார்கள். விவசாய வருமான வரியைக் கட்டுவதால் விவசாயிகளுக்குத் தொல்லையும் கஷ்டமும் ஏற்படுகிறது. அவர்கள் கணக்கு வைப்பது கஷ்டமாக இருக்கிறது என்று சொன்னார்கள். அதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஒருவேளை இந்த 6 கோடியே 35 லட்சம் ரூபாயை ஈடுகட்டுவதற்கு வரியைச் சுமத்தாமல் வசூலிப்பதற்கு வேறு திட்டம் இல்லையா என்றால், அதற்குத் திட்டம் இருக்கிறது. அது என்னுடைய சொந்த அபிப்பிராயமாக இல்லாமல் இருந்தாலும், இன்று ஆட்சி நடத்துகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் முன்னால் எதிர்க் கட்சியாக இருந்தபொழுது காங்கிரஸ் அமைச்சரவைக்கு எடுத்துச் சொன்ன ஆலோசனைகளையும், அவர்கள் திட்டங்களையும் நான் இந்த அமைச்சரவைக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினர், வரிகள் போடுவதற்குப் பதிலாக ஒரு நல்ல முறையைக் கையாள்வதின் மூலம் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளலாம் என்று கூறினார்கள். அதாவது நமது மாநிலத்தில் 7,000 பஸ்கள் இருக்கின்றன. அதை தேசிய மாக்கினால் 25 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு லாபம் வருகிறது. அந்த 25 கோடி ரூபாய் லாபத்தைக் கொண்டு வரி போடாமல் மாநில வருமானத்தைப் பெருக்க வேண்டும். இந்த முறையில் வரியைப் போடாமல் போக்குவரத்துத் துறையில் லாபமாக வருகின்ற 25 கோடி ரூபாயை வைத்துக்கொண்டு சமதர்ம சமுதாயத்தை அமைக்க முடியும் என்று அவர்கள் அன்றைக்குக் கூறிய புத்திமதியை நான் இன்றைக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். வரிகளைப் போடாமல் பொதுத் துறைகளை நாட்டுடைமை ஆக்கியிருந்தால், உண்மையிலேயே இந்த நிதி நிலை அறிக்கை பாராட்டுக்குரியதாக இருந்திருக்கும்.





நமது அரசு ஆட்சிப் பீடத்தில் அமர்ந்த நாள்தொட்டு அல்லது அதற்கு முன்பாகவே உணவுப் பொருட்களின் விலை, மற்றப் பொருட்களின் விலை நஞ்சுபோல் ஏறிக்கொண்டேதான் இருக்கிறது. அதை கட்டுப்படுத்த வேண்டுமென்று பலர் இங்கே எடுத்துக் கூறினார்கள். தி.மு.க. விலைவாசியை கட்டுப்படுத்த ஒரு போராட்டமும் நடத்தியது. இந்த அரசு விலை வாசியைக் குறைக்க பல முயற்சிகள் செய்து வெற்றி கண்டதாக அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. உண்மையில் விலைவாசிகள் குறைந்து இருக்கின்றனவா? இல்லை. விலைவாசிகள் கூடிக்கொண்டுதான் இருக்கின்றன. எனது மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் சில பகுதிகளில் ஒரு படி அரிசி 3 ரூபாய் 4 ரூபாய் என்று இருக்கிறது. என்னுடைய மாவட்டம் மட்டுமல்ல, விலைவாசி எங்கும் ஏறியிருக்கிறது, தினமணிப் பத்திரிகையிலே பார்த்தாலும் திருச்சியிலே அரிசியின் விலை ரூ. 1·75 ஆக இருக்கக் கூட பார்த்தேன். இப்படியே எல்லாப் பொருட்களின் விலைகளும் ஏறிக் கொண்டேதான் இருக்கின்றன, இந்த அரசாங்கம் விலைவாசியைக் குறைப்பதற்கு இயலாமல் போய்விட்டது, விலைவாசிகளைக் குறைப்பதற்கு முயல வேண்டும். அதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும். கடைசியாக உணவுப் பங்கீட்டு முறை சரியாக நடக்கிறதா, அதில் கோளாறுகள் இருக்கிறதா என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும்.

ஒரு வேளை நமது அரசு பெருமையோடு சொல்லிக் கொள்ளலாம் 31 லட்சம் பேருக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டு விட்டோம் என்று. அதிவிரைவில் மாநிலம் முழுவதும் கொடுப்போம் என்றும் கூறுகிறார்கள். மூன்று கோடி மக்களுக்கு அதிகமாக மக்கள் தொகை உள்ள ஒரு மாநிலத்தில் 31 லட்சம் பேருக்கு மாத்திரம் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுக்கின்ற நிலையில் மற்றவர்கள் உணவுப் பொருள்கள் வாங்க வழி இல்லாமல் விலைவாசி ஏறிக் கொண்டே இருக்கும்போது, இந்தக் கொள்கையிலே அர்த்தம் ஏதாவது இருக்கிறதா? விசேஷமாகச் சொல்வதற்கு ஏதாவது இருக்கிறதா? வெளிச் சந்தையில் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி வாங்கக் கூடிய நிலை நாடு முழுவதும் இருக்கிறதா? இல்லை. ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி மாநிலம் முழுவதற்கும் கொடுக்கத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்த நிதிநிலை அறிக்கையில் அவசியமற்று இடம் பெற்றிருக்கும் ஒரு விஷயத்தை மாத்திரம் எடுத்துக் கூறி என் சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன். சேலம் உருக்காலைக்காக அரசு கிளர்ச்சி செய்யப் போவதாக அறிக்கை கூறுகிறது. நமது முதலமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராக மட்டும் இருக்கிறாரா அல்லது தமிழ் நாட்டு முதல்வராகவும் இருக்கிறாரா என்று நிதிநிலை அறிக்கை தயாரிக்கும்போது மறந்திருக்கிறார் போலவும். ஒரு அரசியல் கட்சி கிளர்ச்சி செய்வதிலே அர்த்தம் உண்டு. ஆட்சி

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1967 ஜூன் 22

நடத்துகிற அரசுக்கு எதிராக மற்றொரு அரசியல் கட்சி கிளர்ச்சி
நடத்துவதிலே அர்த்தம் உண்டு. ஆனால் ஒரு அரசு இன்னொரு
அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வது அவசியந்தானா? அதற்கு
நமது பாரத அரசியல் சட்டம் இடம் கொடுக்கிறதா? ஜனநாயகம்
இடம் தருகிறதா? இதையெல்லாம் சிந்திக்காமல் நிதிநிலை அறிக்
கையில் அப்படிப்பட்ட திட்டத்தை வகுத்திருப்பது நிதி நிலை
அறிக்கையின் தரத்தைக் குறைக்கிறது. அதை பொலிடிகல்
ஸ்டண்ட் (Political stunt) என்றுதான் கூற வேண்டும்.
அது பொலிடிகல் ஸ்டண்ட் என்ற நிலையில் ஐந்தாண்டுகள் முடிகிற
போது கடைசியாக தேர்தலுக்கு சற்று முன் இந்த வேலையைத்
துவங்கினால் போதும். இது இப்போது தேவையில்லை என்று
கூறி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. இ. ராமசாமி**: மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்
அவர்களே, நடப்பு ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேசு
வதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

ஏழை நடுத்தரப் பாட்டாளி மக்களும், நடுத்தர மக்களும்
போற்றிப் புகழும் அளவுக்கு நிதிநிலை அறிக்கையைத் தயாரித்துத்
தந்த முதல்வர் அவர்களை இந்த நேரத்திலே பாராட்டாது இருக்க
முடியாது. அந்த அளவுக்கு நாட்டு மக்கள் பாராட்டக் கூடிய
அளவுக்குத் திட்டத்தைத் தயாரித்து இருக்கும் நிலையில், காங்
கிரஸ் வரிசையில் இருக்கும் அத்தனை பேர்களும் குறை கூறிப்
பேசினார்கள்; நல்ல மருந்து இல்லையென்றும், நல்ல புரட்சிகரமான
திட்டங்கள் இல்லையென்றும் சொன்னார்கள். ஆனால் நாட்டு மக்கள்
உணவுப் பற்றாக்குறை இருக்கும் நேரத்திலும் கூட ஒரு படி
அரிசித் திட்டத்தை மிகத் துணிகரமாகக் கொண்டு வந்திருப்
பதைப் போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். புன்செய்
நிலங்களுக்கெல்லாம் வரி ரத்து செய்திருப்பதை நாட்டு மக்கள்
போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 75 மைல்களுக்கு
அதிகமாக ஓடுகிற பஸ்களை எல்லாம் தேசிய மயமாக்க வேண்டு
மென்ற திட்டத்தைப் புகழ்கிறார்கள். இத்தகைய திட்டங்களை
எல்லாம் கொண்டு வந்ததற்காக மீண்டும் ஒரு முறை அரசுக்கு
நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பற்றிய விஷயங்களைச்
சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியான வால்பாறை
152 மைல் சுற்றளவும், ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட தோட்
டத்தொழிலாளிகளும் வாழும் பகுதியாகும். அது கோவை
மட்டுமே உற்பத்தியாகும் பகுதி. அடுத்து ஒரு ரூபாய்க்கு ஒரு
படி அரிசித் திட்டத்தை விரிவுபடுத்தும்போது வால்பாறையை
அந்தத் திட்டத்திலே சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று பணிவன்
போடு கேட்டுக் கொள்கிறேன். ஊட்டி, கூனூர் போன்ற தேயிலை
உற்பத்தி செய்யும் பகுதிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டு
மென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



1967 ஜூன் 22] [திரு. இ. ராமசாமி]

வால்பாறை பகுதியில் வெள்ளையர்களுக்கும், பிர்லாக்களுக்கும்
சொந்தமான இடங்கள் இருக்கின்றன. அங்கு நில வரி வசூலிப்
பதில் கோளாறுகள் இருப்பதாகத் தெரிகிறது. மகசூல் செய்கிற
ஒரு ஏக்கர் நிலத்திற்கு 3 ரூபாயும், மகசூல் அல்லாத நிலத்திற்கு
75 பைசாவும் இன்றைய தினம் நில வரியாக வசூல் செய்கிறார்கள்.
அந்தத் தோட்ட முதலாளிகள் வரி கொடுப்பதிலே ஏமாற்று வேலை
கள் செய்வதாகத் தெரிய வருகிறது. மகசூல் செய்து கொண்
டிருக்கும் நிலத்திற்கும் மகசூல் இல்லையென்று கணக்குக் காட்டி
75 பைசா வரியை மட்டுமே செலுத்தி வருவதாகத் தெரிகிறது.
அந்தத் தோட்டப் பகுதியைச் சரியான முறையில் சர்வே செய்
தால், அதிகமாக நிலவரி கிடைக்கும் என்பது என்னுடைய
தாழ்மையான அபிப்பிராயம்.

வால்பாறை பகுதியில் பல மாவட்டங்களில் இருந்து தொழில்
செய்கிறவர்கள் இருக்கிறார்கள். அவ்வாறு குடியேறி இருக்கும்
மக்கள் அடிக்கடி சொந்த ஊர்களுக்குச் சென்று வருவதால் தற்
போது 75 மைல்களுக்கு மேல் ஓடுகின்ற பஸ்களைத் தேசிய மய
மாக்குவதன் மூலமாக அந்த மக்களுக்கு நல்ல முறையில் வசதிகள்
ஏற்பட முடியும். அந்தத் திட்டத்தை நான் மிகவும் வரவேற்
கிறேன். பொதுவாக அந்தத் திட்டத்தைக் கேட்டு நாட்டு மக்கள்
அனைவரும் மகிழ்ச்சியடைந்தாலும் குறிப்பாக வால்பாறை பகுதி
மக்கள் பெரு மகிழ்ச்சியடைகிறார்கள். ஆகவே, இந்தத் திட்டம்
அமலுக்கு வரும்போது வால்பாறையிலிருந்து பல மாவட்டங்
களுக்கு நேரடியான பஸ்களை விட வேண்டுமென்று பணிவன்போடு
கேட்டுக் கொள்கிறேன்.

தோட்ட முதலாளிகள் அரசினர் ஏற்று நடத்துகிற பள்ளிக்
கூடங்களுக்கு இடத்தைக் கொடுக்க மறுக்கிறார்கள். அரசு இதிலே
தலையிட்டு பள்ளிக்கூடக் கட்டடத்திற்கு இடவசதி செய்து தர
நடவடிக்கை எடுக்க வேண்டும். முடிஸ் என்ற இடத்தில் அரசி
னர் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. முன்பு இருந்த அரசு ஆரம்
பித்த அந்தப் பள்ளிக்கூடத்திற்கு இடம் இல்லாமல் வீதியில்
வைத்திருக்கிறார்கள். அங்கு இருந்த கத்தோலிக்க சாமியார்
அந்தப் பள்ளியைக் கோயிலில் வைத்துக் கொள்ள அனுமதி
கொடுத்ததன் பேரில் கோயிலில் நடந்து வந்தது. தற்போது
அது கத்தோலிக்க மதத்தினரின் கோயிலில் நடந்து கொண்டிருக்
கிறது. ஆனால் கடந்த ஜூன் மாதம் 1-ம் தேதி பள்ளிக்கூடத்தைக்
காலி செய்யவேண்டுமென்று மத சாமியார் அறிவித்து விட்டார்.
கலெக்டரின் பெரு முயற்சி காரணமாக ஆறு மாத காலத்திற்குத்
தொடர்ந்து அங்கேயே வைத்திருக்க அனுமதி கொடுத்திருக்கிறார்
கள். அரசினர் பள்ளிக்கூடம் கட்டுவதற்காக முதலாளிகளிட
மிருந்து ஐந்து ஏக்கர் நிலத்தையாவது பெற்றுத் தரவேண்டு
மென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நாட்டிலே மக்கள் பெருக்கத்தின் காரணமாக உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். எங்கள் பகுதியில் சமவெளிப் பிரதேசங்களில் நெல் பயிரிடலாம், கூடலூர், ஊட்டி போன்று கிழங்குகள் உற்பத்தி செய்யவும் வழி இருக்கிறது. அங்கிருக்கும் காடுகளை எல்லாம் தோட்டத் தொழிலாளிகளுக்குக் கொடுத்தால் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும், உணவு நெருக்கடியை ஓரளவு தவிர்த்துக் கொள்ள ஏதுவாக இருக்கும்.

இந்த அளவுக்கு எனக்குப் பேச அனுமதி கொடுத்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** இந்தப் பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவடைகின்றன. மறுபடியும் இப்பேரவை 23—6—1967 அன்று காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

2-00 பி.ப.

## 8. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

*Nil.*

D
V211, 31 'N67
N67.2.4

### B. Reports, Notifications and Other Papers.

45. First Annual Report and Statement of Accounts of the Madras State Small Industries Corporation Limited, as on 31st March 1966.

65000